கோகுலம்

GOKULAM

ஆகஸ்ட் 84 ரூ 2




அரவிந்தர்
பிறந்தநாள்: ஆகஸ்ட் 15

கோகுலம்



மலர்—2 இதழ்—7

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
பாரதியார்

1984 ஆகஸ்ட் மாத இதழ்

தனிப்பிரதி ரூ. 2/-

கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா

ஆண்டுச் சந்தா ரூ. 24/-

ஆகஸ்டு - 15

இந்த நாள் விடுமுறை நாளாக இல்லாதபோனால், இது நம் தேசத்தின் **விடுதலை நாள்** என்பதையே பலர் மறந்திருப்பார்கள்!

யார் மறந்தாலும், இந்தப் புனித நன்னாளைச் சிறுவர் சிறுமியராகிய நீங்கள் மறக்கவே கூடாது. மறக்காமல் இருந்தால் மட்டும் போதுமா?

நம் தேச விடுதலைக்காக அடிபட்டவர்கள், உதைபட்டவர்கள், சித்திரவதை செய்யப்பட்டவர்கள், பெண்டாட்டி பிள்ளைகளைப் பிரிந்து சிறைப் பட்டவர்கள், சிறையிலே செக்கிழுத்தவர்கள், கல் உடைத்தவர்கள், நாடு கடத்தப் பட்டவர்கள், இவை எல்லாவற்றுக்கும் மேலாகத் தங்களின் அரிய உயிரையே தேசத்துக்காக அர்ப்பணம் செய்தவர்கள் — இப்படி எண்ணற்றவர்கள் செய்த தியாகத்தால்தான் நம் தேசம் சுதந்திரம் பெற்றது.

அத்தியாகிகளில் சிலருடைய பெயர்கள்தான் உலகத்துக்குத்தெரிகின்றன; மற்றவர்கள் பெயர் தெரியவில்லை. எதையுமே எதிர்பாராது தேச விடுதலை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட ஆயிரம் ஆயிரம் தியாகிகளை நன்றியுடன் நினைத்து வணக்கம் செலுத்த வேண்டிய புனிதமான நாள் இது. அவர்கள் பெற்றுத் தந்த சுதந்திரத்தைப் பேணிக் காப்போம் என்று உறுதி எடுத்துக்கொள்ள வேண்டிய நன்னாள் இது. 'நான் பிறந்த பொன்னாட்டின் நன்மைக்காக என்னால் இயன்றதையெல்லாம் செய்வேன்' என்று சபதம் பூணவேண்டிய பொன்னாள் இது.

37 ஆண்டுகளுக்கு முன்பு பிறந்தவர்களெல்லோரும் ஆங்கில ஆட்சி யிலே அடிமைகளாகத்தான் பிறந்தார்கள். ஆனால், நீங்களோ சுதந்திர நாட்டிலே பிறந்த பாக்கியசாலிகள்.

ஜப்பான் தேசக் குழந்தை தவறு செய்தால், ''சே, நீயும் ஒரு ஜப்பான் தேசத்துக் குழந்தையா?'' என்று கோபித்துக் கொள்வாளாம் அதன் தாய். சின்னஞ் சிறு வயதிலே பெற்றோரும், மற்றோரும் தேச பக்தியை ஊட்டி ஊட்டி வளர்த்ததாலே அந்த நாடு இன்று மிக உன்னத நிலையில் இருக்கிறது.

நம் தேச விடுதலைக்காக வெள்ளையரை வீரமுடன் எதிர்த்த அரும்பெரும் தியாகிகளைப் பற்றி 'பொங்கி எழும் சிங்கங்கள்' என்ற தலைப்பிலே தொடர்ந்து வெளிவரும் கட்டுரைகளைப் படியுங்கள். நீங்கள் வளர வளர உங்களின் தேச பக்தியும் உங்களுடன் சேர்ந்து சீரிய முறையில் வளரட்டும். உலக உத்தமர்களாகிய புத்தரும் காந்தியும் அவதரித்த இந்தப் புண்ணிய பூமி, உங்களால் மேன்மேலும் பெருமை அடையட்டும்.

அழ. வள்ளியப்பா




இந்த இதழ் எழுத்தாளர்கள்



இளையவன்



சாஸன்



பொன்மணிதாசன்



நா. சீ. வரதராசன்

பிருந்தாவனக் கதாசிரியர்கள்



வி. சதீஷ்குமார்



எஸ். ஜெயஸ்ரீ



ச. செந்தில் முருகன்

பிருந்தாவனக் கவிஞர்கள்



ஆர். சத்தியநாராயணன்



ஆர். எஸ். மீனாட்சி



கி. மாலதி




வி. லெட்சுமி நாராயணன்

மாவட்ட வினா-விடை

மாவட்ட வினா - விடையை இந்த இதழில் வெளியிட இயலவில்லை. அடுத்த இதழில் நிச்சயம் இடம் பெறும். வட ஆர்க்காடு மாவட்டத்தைப் பற்றிக் கேள்வி கேட்பவர்: லலிதா செல்லப்பா; பங்கு கொள்வோர்: இரா. கோமதி, நா. வித்யா, சி. சிவகுமார்.

மேலட்டை வண்ணப்படம்: உத்ரா


மாலியும் ஜூலியும் 5
எம்.ஆர்.ராஜன்
எங்க ஜூலி ரொம்ப புத்திசாலி ரேடியோ கேட்கும்!... டி.வி. பார்க்கும்!
நீ எங்க ஜூலியை ரொம்ப மட்டமா நினைக்கிறே... அதுக்கு ரோஷம் வரப் போகுது!
என்னடா மாலி, டி.வி.யிலே வயலும் வாழ்வும் நடக்குது. ஜூலி வாலைச் சுருட்டிக்கிட்டுப் படுத்திருக்குதே! இவ்வளவு தான் அதன் புத்திசாலித்தனம்?
அடே.. ஒளியும் ஒலியும் ஆரம்பிச்சவுடனே எழுந்து உட்கார்ந்திருச்சே! நிஜமாவே ஜூலி புத்திசாலி தாண்டா!

மின்மினிக் கதைகள்

வாலிபன் நீதிபதி ஆனான்!

ஒரு வாலிபன் சில சிறுவர்களுடன் சேர்ந்து தெருவில் கோலி விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது, அவ்வழியாக அழுது கொண்டே வந்த ஒரு கிழவியிடம், அவன் சென்று, ''பாட்டி, ஏன் அழுகிறாய்?'' என்று கேட்டான்.

''நான் நடத்தும் விடுதிக்கு நான்கு பேர் வந்தார்கள். அவர்கள் என்னிடம் ஒரு தவலையைக் கொடுத்து ''இதில் நிறையப் பொன்னும், நகைகளும் இருக்கின்றன. எங்கள் நால்வருக்குமே இது சொந்தம். இதைப் பத்திரமாக வைத்திரு. நாங்கள் நால்வரும் சேர்ந்து வந்து கேட்டால்தான் கொடுக்க வேண்டும்' என்றார்கள். நானும் அந்தத் தவலையைப் பத்திரமாகத்தான் பாதுகாத்தேன். அவர்களில் ஒருவன் என்னை ஏமாற்றித் தவலையைக் கொண்டு போய் விட்டான். மற்ற மூவரும் என் மீது வழக்குத் தொடுத்தார்கள். நீதிபதி, 'நான்கு பேரும் சேர்ந்து கேட்டால்தானே கொடுக்கவேண்டும்? ஒருவனிடம் கொடுத்தது தவறு. ஆகையால் நீ அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டும்' என்று தீர்ப்புக் கூறிவிட்டார். நான் என்ன செய்வேன்'' என்று கூறி அழுதாள்.

''இது அநியாயத் தீர்ப்பு'' என்றான் அந்த வாலிபன். அவன் சொன்னது எப்படியோ அரசர் காதுக்கு எட்டிவிட்டது. உடனே சேவகரை அனுப்பி அவனை அழைத்துவரச் சொன்னார். ''நீ நீதிபதியாக இருந்தால், எப்படித் தீர்ப்பு வழங்குவாய்?'' என்று அரசர் கேட்டார்.

''என்னை நீதிபதி இடத்திலே உட்கார வையுங்கள். கிழவியையும், அந்த மூவரையும் வரச் சொல்லுங்கள். சரியான தீர்ப்பு வழங்குகிறேன்'' என்றான் வாலிபன்.


அவ்வாறே செய்தார் அரசர். வழக்குத் தொடுத்த மூவரையும் பார்த்து, ''நீங்கள் பாட்டியிடம் என்ன சொல்லித் தவலையைக் கொடுத்தீர்கள்? நால்வரும் ஒன்று சேர்ந்து வந்து கேட்டால்தான் தவலையைக் கொடுக்க வேண்டும் என்றீர்களல்லவா?'' என்று கேட்டான் வாலிபன்.

''ஆமாம்'' என்றார்கள் மூவரும்.

''சரி, இப்போது நீங்கள் மூவர்தானே கேட்கிறீர்கள்? நால்வரும் சேர்ந்து வந்து கேளுங்கள்; பாட்டி கொடுப்பாள்'' என்றான் வாலிபன்.

மூவரும் திருதிருவென விழித்தார்கள். காரணம், தவலையை எடுத்துச் சென்றவன் ஒரு திருடன். இவர்களும் அவன் கூட்டாளிகளே! எப்படித் திரும்பவும் ஒன்று சேருவார்கள்?

அந்த வாலிபனின் அறிவுக் கூர்மையை அறிந்த அரசர், அன்றே அவனை ஒரு நீதிபதியாக நியமித்து விட்டார். அந்த வாலிபன் பெயர் ராமன். எல்லாரும் அவனுக்கு மரியாதை செலுத்தியதால் 'மரியாதை ராமன்' ஆனான்!





எலுமிச்சங்காய் அளவு

ஒருவன் மிகுந்த பசியோடு உணவு விடுதிக்கு வந்தான். அதை நடத்தும் அம்மாளிடம், நாலு பணத்தைக் கொடுத்து, ''எனக்கு மிகவும் பசியாயிருக்குது. எலுமிச்சங்காய் அளவு சோறாவது போடுங்கம்மா'' என்றான்.

அந்த அம்மாள் பலே கைகாரி! அவள் சோற்றை எடுத்து எலுமிச்சங்காய் அளவு உருட்டி, அவன் இலையிலே வைத்தாள். ''நீ கேட்டபடி வைத்து விட்டேன். சாப்பிட்டுவிட்டு எழுந்து போ'' என்றாள். (அந்தக் காலத்தில் நாலு பணத்துக்கு வயிறு நிறையச் சாப்பாடு கிடைக்கும்.)

''ஏதோ, பேச்சுக்குச் சொன்னால் இப்படி ஏமாற்றலாமா? சோறு வேண்டாம். பணத்தைத் திருப்பித் தாருங்கள்'' என்றான் அவன். அவள் மறுத்தாள். தகராறு வழக்கு மன்றத்திற்குச் சென்றது.

''எலுமிச்சங்காய் அளவு சோறு கேட்டார். அவர் கேட்டபடி சோற்றை எலுமிச்சங்காய் அளவு உருட்டிப் போட்டுவிட்டேன். என் மீது குற்றமில்லை'' என்று மரியாதை ராமனிடம் கூறினாள் அந்த அம்மாள்.


''அவர் கேட்டது என்ன? எலுமிச்சங்காய் அளவு சோறு. அதாவது எலுமிச்சங்காய் அளவு பருமன் உள்ள சோறு. ஆனால், நீங்கள் பல சோற்றுப் பருக்கைகளைச் சேர்த்து உருட்டி எலுமிச்சங்காய் அளவு கொடுத்திருக்கிறீர்கள். எலுமிச்சங்காய்ப் பருமனுள்ள சாதம் போடுங்கள்; அல்லது பணத்தைத் திருப்பிக் கொடுங்கள்'' என்று மரியாதை ராமன் தீர்ப்புக் கூறினார்.

இரண்டுக்கும் சரி!

ஓர் அரபு வியாபாரி, ஒரு விவசாயியின் மீது வழக்குத் தொடுத்தார். ''இந்த விவசாயி, தன் பிள்ளை கல்யாணத்தில் ஊர்வலம் விடுவதற்காக என் யானையைக் கேட்டார். ஊர்வலம் வரும்போது யானை இறந்துவிட்டது. அதற்குப் பதிலாக வேறு யானை தருகிறேன் என்கிறார்; அல்லது யானைக்குரிய விலையைத் தருகிறேன் என்கிறார். எனக்கு இரண்டுமே வேண்டாம். என் செத்துப் போன யானையையே உயிருடன் திருப்பித் தர வேண்டும்'' என்றார்.

மரியாதை ராமன் அன்று வழக்கை விசாரித்துவிட்டு மறுநாள் தீர்ப்புக் கூறுவதாகச் சொன்னார்.

அன்று விவசாயியைத் தனியே அழைத்து, ''நீ நாளைக்கு நீதிமன்றத்துக்குக் குறித்த நேரத்தில் வர வேண்டாம். உன் வீட்டு வாசல் கதவை மூடி உள்பக்கம் கதவுக்குப் பின்னால், பழைய பானைகளை அடுக்கி வை. அரபு வியாபாரி வந்ததும், உன்னை அழைத்து வரச் சொல்லி அவரை அனுப்புகிறேன். அவர் வேகமாக வந்து, ஆத்திரத்தில் மூடியிருக்கும் வீட்டுக்



கதவைத் தள்ளுவார். உடனே, பானைகள் உடைந்துவிடும். நீ இங்கு ஓடி வந்து தகவலைக் கூறி, ''அந்தப் பானைகள் பரம்பரை பரம்பரையாக என் வீட்டில் இருப்பவை. ஐயோ, உடைத்து விட்டாரே!' என்று ஓலமிடு. அப்புறம் நான் தீர்ப்பு வழங்குகிறேன்!'' என்றார்.

அவ்வாறே மறுநாள் நடந்தது. அரபு வியாபாரி, ''வெறும் மண்பானைகள் தானே உடைந்தன! அவற்றிற்குரிய விலையைக் கொடுத்து விடுகிறேன்'' என்றார்.

உடனே விவசாயி, ''அவை சாதாரணப் பானைகளா? என் முன்னோர்கள் பத்திரமாகப் பாதுகாத்து வைத்த பானைகள்! பணம் வேண்டாம்! அதே பானைகள்தான். வேண்டும்'' என்றார்.

மரியாதைராமன் சிரித்தபடியே அரபு வியாபாரியிடம் கூறினார்: ''நீர் உம்முடைய இறந்து போன அதே யானைதான் வேண்டும் என்கிறீர். இந்த விவசாயியோ உடைந்து போன அதே பானைகள்தான் வேண்டும் என்கிறார். இருவரும் அவ்வாறே செய்யப் போகிறீர்களா? அல்லது, 'யானைக்கும் பானைக்கும் சரி!' என்று சொல்லப் போகிறீர்களா?'' என்று கேட்டார்.

அரபு வியாபாரி ''யானைக்கும் பானைக்கும் சரியாய்ப் போய்விட்டது.!' என்று கூறி நடையைக் கட்டினார்!



பூனையின் கால்கள்

கூட்டாகச் சேர்ந்து நான்கு வியாபாரிகள் பஞ்சு வியாபாரம் செய்தார்கள். கடையில் எலிகளின் தொந்தரவு அதிகமாக இருந்ததால், ஒரு பூனையை வாங்கி மிகவும் செல்லமாக வளர்த்தார்கள்.

''பூனையின் நான்கு கால்களுக்கும் சிறுசிறு மணிகளாகக் கட்டினால் நன்றாயிருக்கும்'' என்றார் ஒரு வியாபாரி. ''இல்லை. கொலுசு செய்து போட்டால்தான் அழகாயிருக்கும்'' என்றார் இன்னொருவர். ''இல்லை, இல்லை, தண்டை செய்து போட்டால்தான் ஜோராயிருக்கும்'' என்றார் மூன்றாமவர். ''எல்லாவற்றையும் விட முத்து வடம்தான் மிகமிக அழகாயிருக்கும்'' என்றார் நான்காவது வியாபாரி.

நால்வரும் ஒத்து வராததால், பூனையின் நான்கு கால்களை ஆளுக்கு ஒருவராகப் பங்கு பிரித்துக் கொண்டார்கள். அவரவர் விருப்பப்படி கால்களை அலங்கரித்து அழகு பார்த்தார்கள். இதனால், பூனையின் ஒரு காலில் புண் வந்து விட்டது. பாவம், அது அந்தக் காலைத் தூக்கிக்கொண்டு, மற்ற மூன்று கால்களால் நடந்தது.

புண்வந்த காலுக்குச் சொந்தக்காரர், அந்தக் காலில் துணியைச் சுற்றி எண்ணெய் ஊற்றி வைத்தார். விரைவில் ஆறவேண்டும் என்பதற்காகவே அப்படிச் செய்தார்.

பூனை அன்று இரவு அடுப்புக்கு அருகிலே சென்றது. அப்போது எதிர்பாராத விதமாக அதன் காலில் சுற்றியிருந்த எண்ணெய்த் துணியில் நெருப்புப் பிடித்துக் கொண்டது.

உடனே பூனை, துடிதுடித்துக் கடைக்குள்ளே சுற்றிச் சுற்றி ஓடி வந்தது. இதனால் அங்கிருந்த பஞ்சு மூட்டைகளெல்லாம் தீப்பிடித்து, விரைவிலே சாம்பலாகி விட்டன. பெருத்த நஷ்டம் ஏற்பட்டது.

பூனையின் காலில் எண்ணெய்த் துணி கட்டிய வியாபாரியின் மீது

மற்ற மூவரும் வழக்குத் தொடுத்தார்கள். ''எங்கள் மூவரின் நஷ்டத்தையும் அவர்தான் தர வேண்டும். அவருக்குச் சொந்தமான காலில் நெருப்புப் பிடித்ததால்தானே இப்படி நடந்தது?'' என்றார்கள்.

மரியாதை ராமன் வழக்கை உற்றுக் கேட்டார். தீர விசாரித்தார்.

''பூனையின் ஒரு காலில் நெருப்புப் பிடித்தது உண்மைதான். ஆனாலும், அதனால் அந்த ஒற்றைக் காலால் ஓடியிருக்க முடியுமா? மற்ற மூன்று கால்களும் உதவியதால்தானே அதனால் இங்குமங்கும் ஓடவும் பஞ்சு மூட்டைகளில் ஏறவும் முடிந்திருக்கிறது? ஆகையால், மற்ற மூன்று கால்களுக்கு உரியவர்கள், எண்ணெய்த் துணி சுற்றிய வியாபாரிக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டும்'' என்று தீர்ப்புக் கூறினார்.



தோடு திருடியவன்

ஒரு சத்திரத்தில் இருவர் படுத்திருந்தார்கள். அவர்களில் ஒருவன், வலது காதைத் தரையில் படும்படி வைத்திருந்தான். இடது காது மேல்புறமாக இருந்தது. அவன் இரு காதுகளிலும் வைரத்தோடு அணிந்திருந்தான். இன்னொருவன் இடது காதைத் தரையில் படும்படி படுத்திருந்தான். வலது காது மேல்புறமாக இருந்தது. அவன் காதுகள் வெறும் காதுகளாக இருந்தன.


தோட்டுக்காரன் நன்றாகத் தூங்கும்போது அவனது இடது காதில் இருந்த தோட்டை, மற்றவன் கழற்றி, தன் வலது காதிலே போட்டுக்கொண்டான்.

விடிந்ததும், ''ஏய், இருட்டுப்பயலே, என்னுடைய இன்னொரு தோட்டைத் திருடி உன் காதிலே மாட்டிக் கொண்டிருக்கிறாயே! கழற்றடா'' என்றான், தோடு திருடியவன்.

இருவருக்கும் சண்டை வந்தது. நீதிமன்றத்துக்கு வந்தார்கள். மரியாதை ராமன் வழக்கை விசாரித்தார். ''சரி, சத்திரத்தில் நீங்கள் இருவரும் எப்படிப் படுத்திருந்தீர்களோ, அப்படிப் படுத்துக் காட்டுங்கள்'' என்றார்.


இருவரும் படுத்துக் காட்டினர். உடனே மரியாதைராமன், தோடு திருடியவனைக் கண்டுபிடித்து விட்டார்! ''நீதான் குற்றவாளி. நீ படுத்துத் தூங்கியபோது, உன் வலது காதுதானே மேல்புறம் இருந்திருக்கும்? அப்போது தரைப்பக்கமாக இருந்த உனது இடது காதுத் தோட்டை அவர்எப்படிக் கழற்றியிருக்க முடியும்? அவரது இடது காது மேல் பக்கமாக இருந்ததால், நீதான் தோட்டைத் திருடியவன்'' என்று கூறித் தண்டனை கொடுத்தார்.

தொகுத்தவர்: நம்பி.



கம்ப்யூட்டர் வித்தகன்

பி.எஸ். மணி



ஒரு தாய் என்னிடம் அழாக் குறையாகச் சொன்னாள், தன் அட்மிஷன் அனுபவம் பற்றி. மூன்று வருஷங்களாக ஒரு நல்ல பள்ளியில் தன் பிள்ளைக்கு முதல் வகுப்புக்கு இடம் கிடைப்பதற்காக முயற்சி செய்கிறாள். நிர்வாகிகள் இன்னும் மனமிரங்கவில்லை! அந்தத் தாயும் தன் முயற்சியைக் கைவிடவில்லை!

அமெரிக்காவிலிருந்து குஹன் என்னும் மாணவன் இந்தியாவுக்கு வந்திருக்கிறான். அவனுக்குப் பல பள்ளிகள் போட்டி போட்டுக்கொண்டு 'ஸீட்' வழங்க வருவதைச் சொன்னபோது திகைப்பாயிருந்தது!

குஹனுக்கு வயது பதின்மூன்றரை. அவன் அப்பா அமெரிக்காவில் டு பான்ட் கம்பெனியில் பணிபுரிகிறார். அவன் அம்மா பத்மா கிரார்ட் வங்கியில் உத்தியோகம் பார்க்கிறார்! குஹன் சொந்தமாகவே ஒரு கம்ப்யூட்டர் வீட்டில் வைத்துக் கொண்டிருக்கிறான். அவன் மாமா குஹனுக்குக் கம்ப்யூட்டர் ஒன்றைப் பரிசாகக் கொடுத்தார். அதனால் அவனுக்கு எத்தனை புகழ் வந்து சேர்ந்தது தெரியுமா?

1983–ம் வருஷம் குஹன் ஏழாவது படிவத்தில் படிக்கையில் டோவரில் ஆயிரம் மாணவர்களுக்கு மேல் கலந்துகொண்ட கம்ப்யூட்டர் நிகழ்ச்சிப் போட்டியில் பங்கேற்றான். இந்தக் கம்ப்யூட்டர் போட்டியில் குஹனுக்குத் தனி நபர் பரிசும் டீம் பரிசும் சேர்ந்து கிடைத்தன. அது மட்டுமா? கவர்னர் கோப்பையும் குஹனை வந்தடைந்தது! 1984–ம் வருஷம் மார்ச்சில் நடைபெற்ற ஒரு கம்ப்யூட்டர் நிகழ்ச்சிப் போட்டியிலும் குஹனுக்கே மறுபடியும் பரிசு கிடைத்ததில் அதிசயமில்லை!

அமெரிக்காவில் டெலவேர் ராஜ்யத்திலுள்ள டவர்ஹில் பள்ளியில் குஹன் ஐந்தாவது படிவத்தில் சேர்ந்ததிலிருந்து அவனுக்குக் கம்ப்யூட்டர் இயக்குவதில் ஆர்வம் பிறந்தது! இருபதினாயிரம் ரூபாய் விலையுள்ள கம்ப்யூட்டரை மாமா பரிசளித்ததும் அவனது தீவிரம் விரிவாகப் படர்ந்தது! வில்மிங்டனிலுள்ள 'சண்டே நியூஸ் ஜெர்னல்', மாணவனாகிய குஹனின் சாதனையைத் தன் பத்திரிகையில் குறிப்பிட்டு எழுதியது பலரது கவனத்தைக் கவர்ந்தது. ''மாணவன் குஹனும் அவனது சகா கிரிக்வான் ஸ்ரீலிட்ஸும் மிகக் கஷ்டமான கம்ப்யூட்டர் பிரச்சினையைப் போட்டு நிறைய எண்ணிக்கை வாங்கிவிட்டார்கள்!''

டவர்ஹில் மாணவர்கள் குஹனின் சாமர்த்தியத்தைக் கண்டு 'ரகசிய வோட்டுக்கள்' போட்டு, 'தலைசிறந்த மாணவன்' என்ற கிரீடத்தையும் அவனுக்குச் சூட்டினார்கள்!

அயல்நாடுகளுக்குப் போய்க் கால் பந்துப் போட்டி ஆட வேண்டுமென்றால் டவர்ஹில் மாணவர்கள் கார்

கழுவுதல், பூக்கள் விற்றல் போன்ற பணிகளில் நிதி சேகரித்து அதிலிருந்து வருஷா வருஷம் அன்னிய நாடுகளுக்குப் பந்தயம் ஆடச் செல்கிறார்கள். குஹன் 'காஸ்மாஸ் குழு'வில் 'ஹாப் பேக்' ஆடும் திறமையுள்ள கலைஞன். பிரிட்டனிலும், ஐரோப்பாவிலும், இந்த வருஷம் காஸ்மாஸ் குழு கால் பந்தாட்டப் பந்தயங்கள் ஆடிக் களித்திருக்கிறது! நான்கு போட்டிகளில் காஸ்மாஸ் குழுவுக்கு வெற்றி. இரண்டில் மட்டும் தோல்வி!

குஹனின் கம்ப்யூட்டர் திறமையையும், கால்பந்தாட்டத் திறமையையும் பாராட்டி டவர்ஹில் பள்ளி 2000 டாலர் உதவித் தொகை வழங்க முன்வந்தது! ஆனால் டெலவரிலுள்ள ஸான்போர்டு ஸ்கூல் இப்பொழுது குஹனுக்கு ஐயாயிரம் டாலர் உதவித் தொகை கொடுப்பதாக வாக்களித்திருக்கிறது. தலைசிறந்த மாணவனைப் பெறுவதில் பள்ளிகளுக்குள்ளே போட்டா போட்டி! நம் நாட்டில் நல்ல பள்ளியில் இடம் கிடைக்க 'தவம்' கிடக்கும் சோக நிலையை நினைவுபடுத்தாமலிருக்க முடியவில்லை!

குஹனின் கம்ப்யூட்டர் திறமைக்காக அமெரிக்காவிலுள்ள ஜான்ஹாப்கின்ஸ் சர்வகலாசாலையும் மேலும் அவனது திறமை சுடர்விட உதவித் தொகை வழங்க முன்வந்திருக்கிறது!

'கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு', விளையும் பயிர் குஹனுக்கு அமெரிக்காவில் நல்ல எதிர்காலம் இருக்கிறது!

அமெரிக்காவிலிருந்து தன் தாத்தாவையும், பாட்டியையும் பார்த்துவிட்டுப் போக வந்த குஹனிடம், ''உனக்கு இந்த நாட்டில் வந்து தங்க ஆசை உண்டா?'' என்று கேட்டதற்கு, ''என் மேல் படிப்புக்கு அமெரிக்காவில் வேண்டிய வசதிகள் உள்ளனவே, அவற்றை எப்படிப் புறக்கணிக்க முடியும்?'' என்கிறான் குஹன்!

நல்ல பள்ளியில் முதல் வகுப்புக்கே மூன்று வருஷங்கள் 'தவம்' கிடக்கும் தாய்மார்களிருக்கையில் திறமையுள்ள மாணவர்கள் அயல்நாடுகளிலேயே தன் மேல் படிப்பைத் தொடர வேண்டுமென்று ஆசைப்படுவதில் என்ன தவறு! அமெரிக்காவைப் போல் திறமையுள்ள மாணவர்களுக்குப் 'போட்டி' போட்டுக்கொண்டு உதவித் தொகை வழங்க முன்வரும் நன்னாள் நம் நாட்டுக்கும் வருமா? நாலாயிரம், ஐயாயிரம் ஒரு ஸீட்டுக்கு என்று மேல்படிப்புக்கு விலை பேசும் கொடுமை நம்நாட்டில் என்று மறையுமோ? வருங்கால சந்ததியினருக்காவது இந்த வசதி கிடைக்கும் பொன்னாளை நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கிறீர்கள்! கம்ப்யூட்டர் வித்தகன் குஹன் மாதிரி எத்தனை பேருக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கப் போகிறது!



1947, ஆகஸ்ட் 15, என்றதுமே உங்களுக்கு நம் 'பாரத நாட்டு விடுதலைத் திருநாள்' என்பது நினைவுக்கு வரும். ஆனால், அதைப் பெற எத்தனை பேர் தங்கள் உயிரைத் தியாகம் செய்தார்கள், எத்தனை பேர், மனைவி மக்களையும் பொருள் அனைத்தையும் துறந்து நாட்டுக்காகப் போராடினார்கள் என்பதை நீங்கள் அறிய வேண்டாமா? சரித்திரத்தைப் பாடமாகப் படிக்கும் போது சிலருக்கு மிகவும் சுவையில்லாதது போல்தோன்றலாம். ஆனால், அதையே கதையாகப் படிக்கும் போது விரும்பிப் படிப்பீர்கள் அல்லவா? தியாகிகளின்சரிதம் புனிதமானது; நடந்தது; படித்து அறிய வேண்டியது நம் கடமை.

* * *

''ஒரு தோட்டி குடித்த தண்ணீரை நான் குடிக்க மாட்டேன்.''

தோட்டி சிரித்தான். ''ஏனப்பா சிப்பாயே! உன் தோட்டாவிலே பூசுகிற பன்றிக் கொழுப்பு, பசுக் கொழுப்பை விட — நான் தொட்ட தண்ணீர் கேவலமோ...?''

''என்ன, தோட்டாவில் தடவப்படுவது பன்றிக் கொழுப்பா! ஏதோ எண்ணெய் அல்லவா? நீ பொய் சொல்கிறாய்.''

பெரிதாகச் சிரித்தான் தோட்டி. ''நேற்று இரண்டு அதிகாரிகள் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்தேன். இல்லாவிடில்எனக்கெப்படித்தெரியும்?''

முஸ்லிம், இந்து சிப்பாய்களின் மதப்பற்றைப் புண்படுத்தி, அவர்களுக்குள்ளேயே வேற்றுமையை ஏற்படுத்தும் வெள்ளையரின் இந்தச் செயல் சிப்பாய்களிடையே வேகமாகப் பரவியது.

ஒவ்வொருவர் மனமும் கொதித்தது.

சிறு பொறிதான்; பெரிய நெருப்பாவதற்குச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தது. சிப்பாய்கள் தோட்டாவைத் தொடவும் அருவெறுத்தார்கள்;உள்ளக் குமுறல்களை ஒருவருக்கொருவர் கூறிக் கொண்டார்கள். குமுறிக் கொண்டிருந்தவர்களின் கோபத்தை அதிகரிக்க, ஒரு சட்டம் வந்தது.

''சிப்பாய்கள் தோட்டாவை வாயால் கடித்துத் தான் பிரிக்க வேண்டும்'' — இப்படி ஒரு சட்டம்



அவ்வளவுதான்; புரட்சி உணர்வு வீரர்களிடையே தலைநீட்டியது. பசுக் கொழுப்பை வாயால் கடிக்க வேண்டுமா? நினைத்து நினைத்துக் குமுறிக் கொண்டிருந்தது சிப்பாய்க் கூட்டம். அவர்கள் உள்ளத்திலே புரட்சி எழுந்தது. அவர்களின் புரட்சிப் பிரசாரம் நடக்கும் விதம் எப்படித் தெரியுமோ? ஒரு குழுவினர், சப்பாத்தி ஒன்றைச் செய்து அடுத்த குழுவுக்கு அனுப்புவர். அவர்களுக்கு அதன் பொருள் முன்பே தெரியும். எனவே, அந்தச் சப்பாத்தியைக் குழுவிலுள்ள அத்தனை பேருக்கும் பகிர்ந்து கொடுப்பர். பின்பு அவர்கள் ஒரு சப்பாத்தியைச் செய்து அதை அடுத்த குழுவுக்கு அனுப்பும் போது, ''வெள்ளை அரசை எதிர்த்துப் போராடுவோம்'' என்று சபதமிடுவர். சிலநாளில் வெள்ளை அரசாங்க அதிகாரிகள் சப்பாத்தி மர்மத்தை அறிவதற்காகத் திடுமென ஒரு முகாமில் நுழைந்தனர்.

சப்பாத்தியைத் துப்பாக்கியால் துளைத்தனர்; பிய்த்துப் பிய்த்துப் பார்த்தனர்; ஒன்றுமில்லை. பாவம் வீரர்களின் உணர்ச்சியின் சின்னமான சப்பாத்தியில் என்ன இருக்கும்? அதிகாரிகள் சிண்டைப் பிய்த்துக்கொண்டதுதான் லாபம்.

புரட்சிக்காரர் என்று சந்தேகப்பட்ட வீரர்கள் எல்லோரையும் பீரங்கிக்கு முன்னால் நிறுத்தி வைத்துத் தகர்த்தனர்.

தங்கா ராமமூர்த்தி

அப்படியும் எதிர்ப்புணர்ச்சியைத் தடுக்க முடியவில்லை. மாறாக அதிகரித்தது. அதிகாரிகளோ, இந்திய வீரர்கள் சிறிது எதிர்த்துப் பேசினால் கூட அவர்களை வெட்டி வீழ்த்தினர். சாகும் தறுவாயிலும் இந்திய வீரர்கள், ''நாங்கள் எல்லோரும் கூடி உங்களை அழிக்கும் காலம் வரும்'' என்று சினத்தோடு கூறிக் கொண்டேதான் உயிரை விட்டார்கள்.

19—வது ரெஜிமெண்ட். வரிசை, வரிசையாக நிற்கிறார்கள்; எதிரே அதிகாரிகள். குதிரைமேல் வாளோடு நிற்கும் வெள்ளையர்கள்.

''பல்லால் கடித்து இழுங்கள் தோட்டாக்களை'' — உத்தரவு பிறக்கிறது.

ஒருவராவது அசைய வேண்டுமே! மங்கள பாண்டே அவர்களிலே ஒருவர். அவர் நெஞ்சு எரிமலையாகக் குமுறிக் கொண்டிருந்தது. வெடிக்கச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தது.

மறுபடியும் அதிகாரிகள் உத்தரவிட்டனர்.

ம்ஹூம். இமைகள்கூட அசையாமல், அதிகாரிகளை ஏளனம் கலந்த வெறுப்போடு நோக்கினர்.

அதிகாரிகள் நடுங்கினர். ''ஆயுதபாணிகளாக எதிரே பல வீரர்கள். நாமோ சிலர்தான்...'' என்று எண்ணமிட்டபடி, ''கீழே போடுங்கள் துப்



பொங்கி எழும் சிங்கங்கள்

பாக்கிகளே'' என்று கூச்சல் போட்டார்கள்.

அதற்கும் அசையவில்லை வீரர்கள். மங்களபாண்டே ஆத்திரத்தின் எல்லைக்கே போய்விட்டார்.

''தூ கோழைகளே! கையிலே ஆயுதம் ஏந்தி நிற்பவரைக் கண்டு நடுங்கும் பயங்கொள்ளிகளே! ஏ, என் அருமை நண்பர்களே, அதோ பாருங்கள். வெள்ளையர் உடல் எப்படி நடுங்குகிறது? எங்கள் வீரர்களைச் சுட்டுப் பொசுக்கினுயே, அப்பொழுது கூட நாங்கள் நடுங்கினேமா? இவர்கள் நம்மை ஆளப் போகிறார்கள். தூ... ஹ.. ஹ... ஹா... நண்பர்களே! இந்தத் தொடை நடுங்கிகளை...— அவர்கள் செய்யும் அக்கிரமங்களை — இனியும் பொறுக்க வேண்டுமா...?'' கூறிக் கொண்டே அதிகாரியைச் சுட்டார் மங்களபாண்டே. அடுத்து—தன்னைத் தடுக்க வந்த வெள்ளையனைத் தோட்டாவால் துளைத்தார்!


அவருடைய உணர்ச்சிகரமான பேச்சும், செயலும் மற்ற சிப்பாய்களையும் போராடத் தூண்டின.

19—ஆம் ரெஜிமெண்ட் அல்லோல கல்லோலப்பட்டது. மங்களபாண்டே தம்மைத் தாமே சுட்டுக்கொண்டார். ஆயினும், அவர் உயிர் பிரியவில்லை.

அதிகாரிகள் அவரைச் சிறையிலடைத்துச் சித்திரவதை செய்த போதும், தனது குழுவைச் சேர்ந்தவர்களைப் பற்றி எதுவும் கூற வில்லை; கூற மறுத்து விட்டார்! இது நடந்தது 1857—ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2—ம் தேதி.

ஏப்ரல் 8 ம் தேதி மங்களபாண்டே தூக்கிலிடப்பட்டார். அவரைத் தூக்கிவிட உள்ளூர் ஆட்கள் மறுத்ததால், அதற்கு வெளியூர்க் கூலிகளை ஜெயில் அதிகாரி வரவழைத்தார்!

அன்னை பாரதத்துக்காக — அதன் சுதந்திர வேள்வியிலே தமது உயிரை விட்டார் மங்களபாண்டே!



இவரைத் தெரியுமா?

குழந்தைகளுக்கான வாரப்பத்திரிகையை முதல் முதலாகத் தொடங்கி நடத்தியவர் திரு. வை. கோவிந்தன் அவர்கள். அந்தப் பத்திரிகையின் பெயர் 'அணில்!' 'பாட்டிகாலத்துக் கதைகளையெல்லாம் திரட்டி அனுப்புங்கள்' என்று அப்பத்திரிகையில் அவர் கேட்டுக் கொண்டார்.


பல பெரியவர்களும் ஏராளமான சிறுவர் சிறுமியரும் பாட்டி காலத்துக் கதைகளைத் திரட்டியனுப்பினார்கள். அவற்றில் பல புத்தகங்களாக வெளிவந்திருக்கின்றன.

ஜெர்மனி நாட்டில் ஊரூராகச் சென்று பழங்காலத்துக் கதைகளையெல்லாம் திரட்டி, அவற்றை அச்சிட்டு வெளியிட்டார்கள் இரு சகோதரர்கள். பெயர்கள் ஜாகோப் கிரிம், வில்ஹெல்ம் கிரிம். 'கிரிம் கட்டுக்கதைகள்' (Grimm's fairy tales) என்று நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவற்றில் சிலவற்றைப் படித்தும் இருக்கலாம். அவர்களைப் போலவே இம்முயற்சியில் ஈடுபட்ட வை. கோவிந்தன், 'அணில் அண்ணன்' என்ற பெயரிலும் பல கதைகளை எழுதினார். குழந்தைகளுக்காக இன்னொரு புதுமையையும் இவர் செய்தார். 'குழந்தைகள் செய்தி' என்று ஒரு வாரப் பத்திரிகையை நடத்தினார். அதில் முழுக்க முழுக்கக் குழந்தைகளுக்குத் தேவையான, விருப்பமான செய்திகளைச் சேகரித்து வெளியிட்டு வந்தார்.

இவை மட்டுமா?

குழந்தைகளுக்காக எழுதுவோர்கூடி 'குழந்தை எழுத்தாளர் சங்க'த்தை 1950ஆம் ஆண்டு முதல் நடத்துகிறார்களே, அச்சங்கத்தின் முதல் தலைவராகவும் இவர் விளங்கினார்.

பாலன் செய்த தொண்டு



தணிகை உலகநாதன்

செங்கற்பட்டில் படித்த பாலன், சென்னையில் இருந்த தன் நண்பன் வேலனுடன் பலநாள் பழகியதால் தானும் தமிழில் பிழையில்லாமல் பேசவும், எழுதவும் வல்லவன் ஆனான். இலக்கணப் புத்தகத்தை ஆர்வத்துடன் படித்தான். அதனால், முன்பு புரியாத செய்திகளையெல்லாம் புரிந்துகொண்டான். ஐயம் ஏற்படும் போதெல்லாம் தமிழாசிரியரிடம் கேட்டுத் தெளிவு பெற்றான்.

'இன்பம் இன்பம் இலக்கணமே!
அன்பாய்க் கற்கின் அரைக்கணமே!'

என்னும் உண்மையை உணர்ந்தான். தன் அருமை நண்பன் வேலனைப் போலவே எவரேனும் பிழையாகப் பேசினாலோ, எழுதினாலோ அவர்களிடம் நயமாகப் பேசித் திருத்துவான். சென்னையில் வேலன் செய்த தமிழ்த் தொண்டினைத் தொடர்ந்து பாலன் செங்கற்பட்டிலும் செய்ய விரும்பினான்.

அவனது விருப்பத்தை அறிந்த பெற்றோரும் ஆசிரியர்களும் அவனைப் பெரிதும் பாராட்டினார்கள். பாலன் ஓய்வு நேரங்களை வீணாக்காமல் தன் ஊரில் காணும் தவறான விளம்பரங்களை உரியவர்களிடம் சொல்லித் திருத்திக்கொள்ளச் செய்தான்.

ஒருநாள் பாலன் பழக்கடைப் பக்கமாகச் சென்றான். அங்கு கடைக்காரர்,

'பழங் கள் விற்க்கப்படும். சாத்துக்குடி, ஆப்பிள், ஆரஞ்சு முதலியவை மலிவான விலையில் எங்களிடம் கிடைக்கும்' என்று விளம்பரப் பலகையில் எழுதி இருந்தார். அதைக்கண்ட பாலன் கடைக்காரரிடம் சென்று, ''ஐயா, வணக்கம்'' என்றான்.

''வா, தம்பி, வா. உனக்கு என்ன பழம் வேண்டும்?'' என்று கேட்டார் கடைக்காரர்.

''மன்னிக்க வேண்டும், ஐயா! நான் உங்களிடம் பழம் வாங்க வரவில்லை. வேண்டும்போது வாங்கிக் கொள்வேன். ஆனால், ஒரு வேண்டுகோள்.''

''என்ன சொல். உன் வேண்டுகோளைக் கட்டாயம் நிறைவேற்றுவேன். உன்னைப் பார்த்தால் நல்ல பிள்ளையாகத் தெரிகிறாய்; சொல். கேட்கிறேன்.''

''ஐயா! உங்கள் கடையில் பழங்கள் விற்கிறீர்கள். உண்மைதான். ஆனால் **பழங் கள்** விற்பதில்லையே! இப்படி இடம் விட்டு எழுதினால் **பழைய கள்** என்று அர்த்தம். **பழங்கள்** விற்கும் கடையில் கள்ளும் விற்கிறீர்கள் என்று மற்றவர்கள் நினைத்துக் கொள்வார்களே, இதனால் உங்கள் வியாபாரமே மந்தப்பட்டுவிடுமே!''

கடைக்காரர் பாலனின் நுண்ணறிவைக் கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டார். ''தம்பி! நீ சொல்வது உண்மைதான். இத்தனை நாளாக இதைக் கவனிக்கவில்லை. நாளை, பழங்கள் என்று சேர்த்து எழுதித் திருத்தச் செய்கிறேன்'' என்றார் கடைக்காரர்.

''ஐயா, இன்னும் இரண்டு திருத்தங்களையும் சொல்கிறேன்.''

''அப்படியா, சொல் தம்பி. அப்படியே திருத்தி விடுகிறேன்.''

''**விற்க்கப்படும்**'' என்னும் சொல்லில் 'ற்' என்னும் எழுத்துக்குப் பக்கத்தில் 'க்' என்னும் எழுத்து வரக் கூடாது. **விற்கப்படும்** என்று எழுதுவதே சரியான சொல்.'

''நல்லது. வேறொரு பிழை இருப்பதாகச் சொன்னாய். என்ன அது?''

''**சாத்துக்குடி** என்று இருப்பது தவறு. **சாற்றுக்குடி** என்பதுதான் சரியான சொல். சாறு குடியிருக்கும் பழம் சாற்றுக்குடி.''

''அடடா! என்ன அற்புதமான விளக்கம், தம்பி. உன் தமிழறிவைப் பாராட்டுகின்றேன். என் அன்பளிப்பாக உனக்கு மூன்று சாற்றுக்குடிப் பழங்கள் தருகிறேன். இந்தா, வாங்கிக் கொள்'' என்று மூன்று பழங்களைப் பாலனிடம் கொடுத்தார் கடைக்காரர்.

''ஐயா! நீங்கள் தவறான விளம்பரத்தைத் திருத்திக் கொள்ள ஒப்புக் கொண்டீர்களே! அதுவே போதும்.''

''தம்பி! பெரியவர்கள் அன்போடு கொடுப்பதை நீ மறுக்கக் கூடாது. இந்தா வாங்கிக் கொள்'' என்று கடைக்காரர் வற்புறுத்தினார்.

அவரது அன்புக்குக் கட்டுப்பட்ட பாலன், வேறுவழியின்றி மூன்று சாற்றுக்குடிப் பழங்களையும் நன்றிகூறி வாங்கிச் சென்றான்.

மற்றொரு நாள் பாலன், ஓர் எண்ணெய்க் கடைக்குச் சென்றான். அங்கு, மாயவரம் வெண்ணை, சுத்தமான நல்லெண்ணை, கடலை எண்ணை இங்கே விற்கப்படும்' என்று எழுதி இருப்பதைக் கண்டான். அதே பெயர்களை ஆங்கிலத்தில் தவறு சிறிதும் இல்லாமல் எழுதப்பட்டிருப்பதையும் பார்த்தான்.

''அந்தோ! தமிழ்நாட்டில் ஆங்கிலத்தில் தவறு சிறிதும் இல்லாமல் எழுதும் கடைக்காரர்கள் தாய்மொழியில் இப்படியா தவறுகள் செய்வது!''
என அவன் உள்ளம் வேதனைப் பட்டது. உடனே கடைக்காரரிடம் சென்று, வணக்கம் கூறி விளம்பரப் பலகையில் உள்ள தவறுகளைச் சுட்டிக் காட்டினான். அந்த விளம்பரத்தில்,

'வெண்ணை என்பதை வெண்ணெய், நல்லெண்ணை என்பதை, நல்லெண்ணெய் கடலை எண்ணை என்பதைக் கடலை எண்ணெய்' என்று திருத்துமாறு வேண்டினான். பாலனின் வேண்டுகோள் பலித்தது. கடைக்காரர் மறுநாளே அவன் சொல்லியபடி விளம்பரப் பலகையில் திருத்தம் செய்துகொண்டார்.

இவ்வாறே, பாலன் பல கடைக்காரர்களிடம் சென்று, அவர்களின் தவறான விளம்பரங்களைத் திருத்தும் பணியில் மும்முரமாக ஈடுபட்டான். அவனால் திருத்தப்பட்ட விளம்பரங்களில்,

பிழை	திருத்தம்
முடித்திருத்தகம்	—முடி திருத்தகம்
தொழிற்ச் சங்கம்	—தொழிற்சங்கம்
காய்கரிக்கடை	—காய்கறிக்கடை
பொடிகடை	—பொடிக்கடை
மரப்பட்டரை	—மரப்பட்டறை
மரக்கரி உணவகம்	—மரக்கறி உணவகம்

முதலியவை குறிப்பிடத்தக்கவை. சிறுவன் பாலன் செய்து வரும் தொண்டு ஊர் மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அவன் புகழ் ஊரின் மூலை முடுக்கெல்லாம் பரவியது. கடைக்காரர்கள் பலர் விளம்பரப் பலகையை எழுதுவதற்கு முன் அவனிடம் சென்று சரிபார்த்து எழுதுவது இப்போது வழக்கமாகிவிட்டது!



ஐந்து சபைகள்

சிவன் திருநடனம் புரிவதற்கு என்று அமைத்துக் கொண்ட இடங்கள் ஐந்து. அவையாவன:

1. மணிச் சபை — திருவாலங்காடு,
2. பொற் சபை — சிதம்பரம்,
3. வெள்ளிச் சபை — மதுரை,
4. தாமிரச் சபை — திருநெல்வேலி,
5. சித்திரச் சபை — திருக்குற்றாலம்.

—சிவ கனகசபை.





2-வது அட்டையில்

மகான் அரவிந்தர்

புதுச்சேரியில் மிருந்த புகழுடன் விளங்கிவருவது அரவிந்த ஆசிரமம். உலகின் பல பாகங்களிலிருந்தும் இந்த ஆசிரமத்தைக் காணப் பலர் வருகிறார்கள். சிலர் அங்கேயே வசிக்கிறார்கள். அங்கு சாதி, மதம் என்ற பேச்சுக்கே இடமில்லை. தூய உணவு, தூய உடை, தூய காற்று, தூய வாழ்வு இவற்றுக்குத்தான் இடம் உண்டு.

இந்த ஆசிரமம் அரவிந்தர் பெயரால் நிறுவப்பட்டது. அரவிந்தர் ஒரு பெரிய யோகி. தெய்வ அருள் பெற்ற பெரும் புலவர்.

இவர் பிறந்தது கல்கத்தா நகரிலே. பதினான்கு ஆண்டுகள் இங்கிலாந்திலே படித்துப் பட்டம் பெற்றார். பிறகு சில காலம் கல்லூரியில் பணியாற்றினார்.

கல்கத்தா தேசியக் கல்லூரியின் தலைவராக இருந்தபோது, விடுதலைப் போராட்டத்தில் இவர் ஈடுபட்டார். இவரைக் கைது செய்து அலிபூர் சிறையில் அடைத்து வைத்தார்கள். சிறையில் இருந்தபோது இவர் தினமும் வெகு நேரம் தியானத்திலே இருப்பார்.

சிறையிலிருந்து வெளிவந்ததும் இவர் பத்திரிகைகளை நடத்தி பகவத் கீதை போன்றவற்றை விளக்கி எழுதி வந்தார். மீண்டும், அரசியலில் ஈடுபட இவருக்கு விருப்பமில்லை; ஆன்மீகத் துறையிலே ஈடுபட்டார். 1910—ஆம் ஆண்டு 'ஆரியா' என்ற பத்திரிகையைத் தொடங்கி, அதில் பல அருமையான கட்டுரைகளையெல்லாம் எழுதி வந்தார்.

அப்போதுதான் அரவிந்த ஆசிரமம் தோன்றியது.

3-வது அட்டையில்

தமிழ்த்தென்றல் திரு.வி.க.

எத்தனையோ தொழிலாளர் சங்கங்கள் இப்போது நம் நாட்டில் இருக்கின்றன. அந்தச் சங்கங்கள் மூலமாகத் தொழிலாளர்கள் பல நன்மைகளை அடைந்து வருகின்றனர். ஆனால், 1918—ஆம் ஆண்டுக்கு முன், இந்தியாவில் இப்படிப்பட்ட சங்கம் எதுவுமே இல்லை.

இந்தியாவிலே முதல் முதலாகத் தொழிலாளர் சங்கத்தை வாடியா என்ற அறிஞரின் உதவியுடன் சென்னையில் துவக்கியவர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார்தான்!

இவர் சென்னையிலுள்ள வெள்ளைக்காரர் கம்பெனி ஒன்றில் சில காலம் வேலை பார்த்தார். அப்போது, தேச விடுதலைப் போரில் தீவிரமாக ஈடுபட்ட திலகர் கைது செய்யப்பட்ட செய்தியைக் கேள்விப்பட்டார். உடனே, அந்த வேலையை உதறித் தள்ளிவிட்டு, வெளியில் வந்தார்.

பிறகு, பள்ளி ஆசிரியராகச் சில ஆண்டுகள் பணிபுரிந்தார். அதன் பிறகு, 'தேச பக்தன்' 'நவசக்தி' என்ற பத்திரிகைகளின் ஆசிரியராயிருந்து மக்களுக்குத் தேசபக்தியை ஊட்டி வந்தார். மகாத்மா காந்தியின் கொள்கைகளைத் தமது எழுத்தாலும், பேச்சாலும் நன்கு பரப்பி வந்தார்.

இவர் ஒரு சிறந்த எழுத்தாளர்; இனிய பேச்சாளர். 'தமிழ்த் தென்றல்' என்று அனைவராலும் பாராட்டப் பெற்றவர். அரசியல் கருத்துக்களையெல்லாம் அழகு தமிழில் எடுத்துக் கூறி, பாமர மக்களும் அரசியலைப் புரிந்து கொள்ளும்படி செய்தவர்

சார் தபால்!



இவ்வளவும் இரண்டு ரூபாய்க்கா!

சுதந்திரத்துக்காகப் பற்பல தியாகங்களைச் செய்த மாபெரும் மனிதர்களைப் பற்றி கங்கா ராமமூர்த்தி எழுதும் 'பொங்கி எழும் சிங்கங்கள்', பேராசிரியர் கல்கியின் 'மோகினித் தீவு', வண்ணப் படக் கதை போன்ற அறிவிப்புக்கள் ஆகஸ்ட் இதழை ஆவலுடன் எதிர்பார்க்கச் செய்கின்றன.

—எஸ். ஆர். ரமணி, பொள்ளாச்சி-3

'மின்மினிக் கதைகள்' ஒவ்வொன்றும் மணியான கதைகள். அறிவுக்கு விருந்தாக, சிந்தனையைத் தூண்டுகின்றன.

—வி. ஜெயவேலு, அத்திமலைப்பட்டு

4 இதழ்களுக்குப் போட வேண்டிய அட்டைத் தாள்களை ஒரே இதழில் 16 பக்க வண்ணப் படங்களுடன் தருகிறீர்கள். அத்துடன் மாணவர்கள் பாடப் புத்தகங்களில் ஒட்டுவதற்கு அழகான 'லேபிள்'களையும் அளித்துள்ளீர்கள். இவற்றுடன் ஏராளமான பக்கங்களில் எண்ணற்ற விஷயங்கள்! இவ்வளவும் ரூபாய் இரண்டிற்குக் கிடைக்கிறதென்றால், எந்த ஒரு தந்தைதான் தம்முடைய குழந்தைக்குக் 'கோகுலம்' வாங்கித் தரத் தயங்குவார்?

—பி. பாலசுப்பிரமணியன், பி.எஸ்.ஸி கரூர்.

கோகுலத்தில் வெளிவரும் படக் கதை, ஜோக்ஸ், புதிர்கள், விளையாட்டு வரலாறுகள் யாவும் வீட்டில் இருக்கும் பெரியவர்களையும் போட்டி போட்டுப் படிக்க வைக்கின்றன. இனிமேல் 'சிறுவர் சிறுமியர் இதழ்' என்று கொட்டை எழுத்துக்களில் முன் பக்கத்தில் அச்சிட்டு வெளியிட வேண்டும் என்பது எங்கள் வீட்டு அரைட்ரௌசரின் வேண்டுகோள்.

—எம். ஏ. பாஷா, சின்னசேலம்

'கருணை விழிகள்' விழிமேல் விழி வைத்துப் படிக்க வேண்டியிருக்கிறது. காரணம், அதில் அத்தனை கருத்துக்கள் அடங்கியிருக்கின்றன.

—வி. ஸ்ரீதர் (913), சின்னசேலம்

'கடத்தப்பட்ட சிறுவன்' தமிழ்ச் சுருக்கம் மிக அருமை. பயணத்தை நேரில் பார்ப்பது போலிருக்கிறது.

—க. தெய்வநாயகம், சென்னை-47

சீக்கிரம் அடுத்த இதழை வெளியிடுங்கள். அது என்ன புதுமையான போட்டி எனப் பார்த்துவிடலாம்.

—ஜி. ராதாகிருஷ்ணன், புதுப்பட்டினம்

எங்கள் ஊரில் திருட்டு அதிகம். தயவு செய்து சின்னுவை அனுப்புங்கள்.

—க. நடராஜன் (5500), ஈரோடு-2

பிருந்தாவனப் பகுதியில் 'பை, பை' என்ற தலைப்புள்ள புதிரில் நாய் என்பதற்குச் சரியான விடை 'கோம்பை'தானே! பானைக்குச் சரியான விடையான 'கோப்பை' அங்கே இடம் மாறி உட்கார்ந்திருக்கிறதே!

—ந. சண்முகவரதராஜன் (1348)கோவை—1

'அரவிந்தன் கண்ட அதிசயம்' அருமையான கதை. ஆனாலும், சாமியாரின் மர்மத்தை ஊர் மக்களுக்கு அம்பலப்படுத்தவில்லையே!

—டி. ரவிசந்திரன் (2085), மணம்பூண்டு

பிருந்தாவனக் கதை அரங்கில் அமர்ந்தவை யாவும் நல்முத்துக்கள். இளம் உள்ளங்களை உன்னத இடத்துக்கு அழைத்துச் செல்லும் ராஜபாட்டைகள்.

—திருமதி தேவனுதன், மதுரை-3

'கருணை விழி'களில் வரும் கதாநாயகன் அடக்கம், வாய்மை, இன்சொல் கூறல், பொறுமை போன்ற நற்குணங்களுக்கெல்லாம் ஓர் இலக்கணமாகத் திகழ்கிறான். அவன் எனக்கு நண்பனானால் எப்படி இருக்கும்.

—இரா செந்தில் குமார் (3142), தூத்துக்குடி

'மான்களுக்கு உப்பு மிகவும் பிடிக்கும். அதனால்தான் வனவிலங்கு புகலிடங்களில் சில இடங்களில் உப்பைக் கொட்டி வைத்திருப்பார்கள்' என்று ஜூலை இதழில் குறிப்பிட்டுள்ளதைக் கண்ட வனத் துறையில் பணிபுரியும் என் தமையனார் கூறியதாவது: ''பொதுவாக எல்லா வனவிலங்கு புகலிடங்களிலும் மான்களுக்காகவும், மற்ற வனவிலங்குகளுக்காகவும் உப்புக் கட்டிகள் (Salt Licks) ஆங்காங்கே உள்ள சிறிய மரங்களில் கட்டித் தொங்க விடப்பட்டிருக்கும்.''

—எஸ். ராமன் (4609), வில்லிவாக்கம்

அட்டை உட்பக்கங்களில் சிறந்த பெரியோர்களின் படங்களை வெளியிட்டு அவர்களின் பிறந்த மாதம் தேதியைக் குறிப்பிடுகிறீர்கள். அத்துடன் அவர்களின் பிறந்த ஆண்டு, மறைந்தவர்களானால் மறைந்த ஆண்டு, மாதம், தேதியையும் குறிப்பிட்டால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

—கபீர்தாஸ், சிதம்பரம்.

(நல்ல யோசனை. அடுத்த இதழிலிருந்து அப்படியே செய்வோம். —ஆசிரியர்)

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பற்றிப் படித்ததும், கன்னியாகுமரி மாவட்டத்துக்கே சென்றது போலிருந்தது. நிச்சயம் அடுத்த விடுமுறையில் அங்கே செல்வேன்.

—ஆர். ஜெயகுமார், சென்னை-35



குழந்தை பிறந்தது!

ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

திலீபன் சூரிய வம்சத்தில் தோன்றிய சிறந்த அரசர்களில் ஒருவன். அவன் நெடுங்காலம் சிறப்புடன் அரசாட்சி செய்தான். நீண்ட காலமாக அவனுக்குக் குழந்தை பிறக்கவில்லை. அதனால் அவன் மிகுந்த கவலை அடைந்தான்.

திலீபன் தன்னுடைய குலகுருவான வசிட்டரை அடைந்தான். தன்னுடைய மனக்கவலையை அவரிடம் தெரிவித்தான்.

வசிட்டர் நீண்ட நேரம் யோசனை செய்தார். அவருடைய ஞானக்கண்ணுக்குக் காரணம் புலப்பட்டது. உடனே அவர் திலீபனை நோக்கி, ''அரசனே, நீண்ட காலத்திற்கு முன் நீ தேவலோகம் சென்று திரும்பினாய். அப்பொழுது அங்கு நின்று கொண்டிருந்த தெய்வப் பசுவான காமதேனுவை வணங்காமல் வந்து விட்டாய். அதன் காரணமாக உனக்குக் குழந்தை பிறக்கவில்லை. காமதேனுவின் கோபம் தணிந்தால் தான் உனக்குக் குழந்தை பிறக்கும். காமதேனுவின் கோபம் நீங்க வேண்டுமானால், நீ காமதேனுவின் குழந்தையாகிய நந்தினியை முறைப்படி வழிபட வேண்டும்'' என்றார்.

உடனே திலீபன் நந்தினியை எவ்வாறு வழிபட வேண்டும் என்றும் வசிட்டரிடம் பணிவாகக் கேட்டான். அதற்கு அவர், ''அரசனே, இன்றிலிருந்து நீ காய், கனி கிழங்குகளைத்தான் உண்ண வேண்டும். நீ நந்தினிக்கு



ஒவ்வொரு நாளும் மூன்று முறை பூஜை செய்யவேண்டும். நந்தினி நடக்கும் பொழுது நீயும் நடக்கவேண்டும். ஓடும் பொழுது ஓட வேண்டும். நிற்கும் பொழுது நிற்க வேண்டும். படுக்கும் பொழுது படுக்க வேண்டும். அதன் விருப்பப்படி நடக்கவேண்டும். உன். விருப்பப்படி அதன் போக்கை மாற்றக் கூடாது. மேலும், உன் மனைவி அதனை என்னுடைய ஆசிரம எல்லை வரை அழைத்து வர வேண்டும். திரும்ப அதனுடைய இருப்பிடத்திற்கு ஓட்டிச் சென்று, அங்கே வழிபாடு செய்து வர வேண்டும்'' என்றார். திலீபன் இருபத்தொரு நாட்கள் இவ்வாறு செய்து வந்தான். இருபத்து இரண்டாவது நாள் நந்தினி அவனைச் சோதிக்க நினைத்தது.

அது இமயமலைச் சாரலில் மேயப் போனது. திலீபனும் உடன் சென்றான். இமயமலையின் இயற்கை அழகில் மனத்தைப் பறி கொடுத்தான். அந்தச் சமயத்தில் ஒரு சிங்கம் நந்தினி மீது பாய முயன்றது. அதைக் கொல்வதற்கு திலீபன் அம்பையும் வில்லையும் எடுக்க முயன்றான். ஆனால், என்ன ஆச்சரியம், அவனுடைய கைகளை அசைக்க முடியவில்லை!

இதைக் கண்ட சிங்கம் அவனிடம் வந்தது. அவனை நோக்கி, ''அரசனே, விலங்குகளை வேட்டையாடி உண்பது தான் எனக்கு விதிக்கப்பட்ட தொழில். நான் எனது உணவை வேட்டையாடும் பொழுது நீ தடுக்கக்கூடாது' என்றது. உடனே திலீபன், ''சிங்கமே, அது என்னுடைய தவறுதான். உனக்கு உணவு வேண்டுமானால் என்னையே நீ உன்னுடைய உணவாகக் கொள்ளலாம். அந்தப் பசுங்கன்றை விட்டு விடு'' என்று மிகவும் வேண்டினான்.

சிங்கம் திலீபன் மேல் பாய்வது போல் வேகமாக அவன் அருகில் வந்தது. உடனேயே மறைந்துவிட்டது! பிறகு, நந்தினி அச்செயல் தன்னுடைய மாயைதான் என்பதை உணர்த்தியது. மேலும், திலீபனுடைய தூய அன்பை வியந்தது. அவனுக்குக் குழந்தை பிறக்க அருள் புரிந்தது.

அதன் காரணமாகத் திலீபனுக்கு ரகு என்ற ஆண் குழந்தை பிறந்தது.

குறள் வாக்கு:

முயற்சி திருவினை யாக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

கோகுலம் சிறுவர் சங்கம் உறுப்பினருக்கு

பிருந்தாவனம்: இப்பகுதிக்கு எழுதுவோர் அஞ்சல் அட்டையில் எழுதினாலே போதும். தலைப்பில் 'பிருந்தாவனப் பகுதி' என்று குறிப்பிடவேண்டும்.

பிருந்தாவனக் கவியரங்கம்: இப்பகுதிக்கு எழுதுவோர் அஞ்சல் அட்டையில் எழுதினாலும், வெள்ளைத்தாளில் எழுதினாலும் தெளிவாக எழுதவேண்டும்.

பிருந்தாவனக் கதையரங்கம்: இப்பகுதிக்கு எழுதுவோர், வெள்ளைத்தாளில் இரு பக்கங்களிலும் எழுதக் கூடாது; ஒரே பக்கத்தில் வரிக்கு வரி சிறிது இடை வெளிவிட்டு எழுதவேண்டும்.

காப்பி கூடாது: எதை எழுதினாலும், அது சொந்தமாக இருக்க வேண்டியது மிக மிக மிக அவசியம். 'காப்பி' அடிப்பவர்களுக்குக் கெட்ட பெயர்தான் ஏற்படும்.

எண்ணும் முகவரியும்: சிலர் உறுப்பினர் எண்ணைக் குறிப்பிடாமலே அனுப்புகிறார்கள். வேறு சிலர், பெயரையும், உறுப்பினர் எண்ணையும் குறிப்பிடுகின்றனர்; ஆனால், முகவரி தருவதில்லை. நீங்கள் எதை அனுப்பினாலும் உங்கள் பெயர், உறுப்பினர் எண், முழு முகவரி (பின் கோடுடன்) எழுதுங்கள்.

—ஆசிரியர்.


கார்டூன்
மில்க்
பிஸ்கெட்ஸ்
Cartoon
Milk Biscuits
சுவை மண்டலத்தில் சுகமான பயணம்!
கார்டூன் மில்க் பிஸ்கெட்ஸ்
சுவையும் ஊட்டமும் நிறைந்த பாலமுதம்.
சுவைத்துப் பாருங்கள். மீண்டும் மீண்டும்
சுவைக்கத் தூண்டும்.
ஒவ்வொரு
பாக்கெட்
உள்ளேயும்
ஒரு குட்டிப்பரிசு!
இந்தியன் ஃபுட்ஸ்
பிரைவேட் லிமிடெட்
'ரிவர்சைட்' திருப்புவனம் 623611
கார்டூன் மில்க் பிஸ்கெட்ஸ்—
பிஸ்கெட் உலகின் புதிய கவிதை!
ADWAVE/IF/2646
தமிழ் நாடெங்கும் கிடைக்கும். விற்பனையாளர்கள் இல்லாத இடங்களில் விற்பனையாளர்கள் தேவை.

பிருந்தாவனம்

POLICE என்ற 6 எழுத்துக்கள் கொண்ட ஆங்கிலச் சொல்லின் விளக்கம் தெரியுமா?

P–Politeness – மரியாதை.
O–Obedience– பணிவு.
L–Loyalty – விசுவாசம்.
I–Intelligence– நுண்ணறிவு.
C–Courtesy – அன்பு நடத்தை.
E–Efficiency – திறமை.

–சோ. துரைராணி (4733), திருநெல்வேலி–6.



பிறந்த நாள் சட்டை:

பெரியவர்: இது என்ன சட்டையடா?
சிறுவன்: பிறந்த நாள் சட்டை.
பெரியவர்: பிறந்த அன்னிக்கே உனக்குச் சட்டை இருந்ததா?

–இரா. ஜெயதேவ் (3496)
திண்டுக்கல்



கல்

பழத்தில் இருக்கும் கல்– அழுகல்,
கட்டிடம் கட்டும் கல் – செங்கல்,
அம்மா செய்யும் கல் – பொங்கல்,
அரிசியில் ஒருவகைக் கல் – புழுங்கல்,
–ரா. மது (1121) கோவை–2.



சொன்னவர் யார்

- 'டில்லி சலோ' என்று கூறியவர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்.
- 'யுரேகா, யுரேகா' என்று கூறியவர் விஞ்ஞானி ஆர்க்கிமிடிஸ்.
- 'ஆயிரம் பூக்கள் மலரட்டும்' என்று கூறியவர் மா சே துங்.
- 'சுதந்திரம் எங்களது பிறப்புரிமை' என்று கூறியவர் திலகர்.
- 'ஜெய் ஜவான்; ஜெய் கிசான்' என்று கூறியவர் லால் பகதூர் சாஸ்திரி.
- 'நமக்குத் தொழில் கவிதை' என்று கூறியவர் மகாகவி பாரதியார்.

–ஆர். சுபாஸ் (4325), மு.களத்தூர்





கோடு, கோடு

கன்னியாகுமரி மாவட்டத்தில் சில ஊர்ப் பெயர்கள் 'விளை' என்று முடிவதைப் போல, 'கோடு' என்றும் முடிகின்றன. மாதிரிக்குச் சில:

திக்கணங்கோடு,
மாங்கோடு,
மத்திக்கோடு,
ஆலங்கோடு,
திருவாங்கோடு,
மேலாங்கோடு.

—தா. சிந்துகுமார் (4764),
திருவட்டாறு.

நல்ல பொருத்தம்!

நாகர்கோவில் இந்துக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியையாக இருக்கும் ஒருவரின் பெயர் 'ஔவையார்'. தமிழ்ப் பேராசிரியைக்கு இப்பெயர் மிகப் பொருத்தம்தானே!

நட்சத்திரம் எலிகளாக மாறும். எப்படி?

Star என்பதைக் கடைசியிலிருந்து படியுங்கள்; Rats (எலிகள்) வந்துவிட்டன அல்லவா?


—இரா. உமாசத்தியன் (1089), நாகர் கோவில்—1.



அர்த்தமுள்ள ஆங்கில எழுத்துக்கள்!

பறக்கும் எழுத்து-E (ஈ),
மரியாதையான எழுத்து-G (காந்திஜி நேருஜி),
கோஷம் போடும் எழுத்து-J (ஜே),
ஆச்சரியப்படும் எழுத்து-O (ஓ!)

—ஜெ. சத்யசீலன் (3551), கோவை2




வடமதுரையில் கோபுரம்

எனது பொழுது போக்குகள் பல. அவற்றில் முக்கியமானது புகைப்படம் எடுத்தல்.

சென்ற ஆண்டு மார்ச் மாதம் நான் என் குடும்பத்தாருடன் வட நாட்டைச் சுற்றிப் பார்க்கச் சென்றேன். அங்குள்ள ஆலயங்களில், நம் நாட்டைப் போல் கோபுரங்கள் இல்லையே என வருந்தினேன். வடமதுரையில், கோகுல கண்ணன் விளையாடி மகிழ்ந்த பிருந்தாவனத்தைப் பார்த்த பின் ரங்கநாதர் ஆலயத்திற்குச் சென்றோம். அங்கே கோபுரம் இருந்தது! அதைப் பார்த்த என் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. உடனே அந்தக் கோபுரத்தை என் கேமராவினுள் சிறைப்படுத்தி விட்டேன்!

ஆ. தமிழ்ச்செல்வி (867),
கொரடாச்சேரி.





பைக்குள்ளிருந்தது எவ்வளவு

இரு நண்பர்கள் தினமும் காட்டுக்குச் சென்று விறகு வெட்டிக் கொண்டு வருவார்கள். அவர்கள் ஒருநாள் ஒரு முனிவரைச் சந்தித்துத் தங்கள் கஷ்டங்களைச் சொன்னார்கள்.

முனிவர் ஒரு பையைக் கொடுத்து, "இதில் நான் கொஞ்சம் பணம் வைத்திருக்கிறேன். நான் சொல்லித் தரும் மந்திரத்தைச் சொன்னால், ஒவ்வொரு தடவையும், அதில் உள்ள பணம் இரு மடங்கு ஆகும். அதில் ரூ. 120 காளிக்குக் கொடுத்துவிட வேண்டும்" என்றார்.

"சரி", என்று கூறிவிட்டு அவர்கள் பையுடன் சென்றனர். வழியில், மந்திரத்தைச் சொல்ல, பையிலிருந்த பணம் இருமடங்கு ஆகியது. அதில் ரூ. 120/ஐக் காளிக்கு எடுத்துவைத்து விட்டனர். அதே போல் மீண்டும் இருமுறை செய்தனர். நான்காவது முறை மந்திரத்தைச் சொன்னதும் பணம் இரு மடங்கு ஆகவில்லை. ஏன்? பணம் பைக்குள் இருந்தால்தானே இரு மடங்கு ஆகும் பைக்குள்ளே ஒரு பைசாக்கூட இல்லையே! அப்படியானால் முனிவர் முதலில் பைக்குள் வைத்துக் கொடுத்தது எவ்வளவு?

விடை: ரூ. 105.

—என். சிவகுமார் (2896) கடலூர்

கிடைத்தது எவ்வளவு?

பிச்சைக்காரனின் தொல்லை பொறுக்காத எஜமான் வேலைக்கார முனியனை அழைத்தார். "டேய், முனியா, இந்தா 10 ரூபாய் நோட்டு. இதை மாற்றி 8—ல் ஒரு பங்கெடுத்து, அதை 5 பங்காக்கி, அதன் ஒரு பங்கிலே 5—ல் ஒரு பங்கை இந்தப் பிச்சைக்காரனிடம் கொடு" என்றார்.

வேலைக்காரன் சில்லறை மாற்றப் பல இடங்களுக்கு அலைந்தான். பிச்சைக்காரனும் கூடவே சென்றான். ஒருவழியாகச் சில்லறையை மாற்றி எஜமான் சொன்னபடி பிச்சைக்காரனிடம்காசைக் கொடுத்தான். "ப்பூ! இந்தப் பிச்சைக் காசுக்கா இவ்வளவு அலைச்சல்!" என்று சலித்துக்கொண்டான். 'பிச்சைக்காரன் அப்படியானால் பிச்சைக்காரனுக்குக் கிடைத்தது எவ்வளவு?

விடை: 5 பைசா:

—எஸ். ராதாகிருஷ்ணன் (3110), வைத்திஸ்வரன்கோயில்.



அது என்ன?

1. ஆசிரியர் கூறுவது:
அளக்க உதவுவது —
அது என்ன?

2. மலர்களால் ஆனது:
மறையும் சூரியன் அதில் —
அது என்ன?

3. சிந்தனையைத் தூண்டுவது;
சிறுவர்கள் வேண்டுவது —
அது என்ன?

விடை: 1. படி, 2. மாலை, 3. விடுகதை.
—க. வசுமதி (899), பாண்டிச்சேரி.

என்ன பெயர்?

1. இந்தப் பெயர் இலக்கிய உலகிலும் திரைப்பட உலகிலும் புகழ் பெற்றது. முதல் இரண்டு எழுத்துக்கள் நமது முக்கியமான உறுப்பினைக் குறிக்கும். 1,2,3,6 எழுத்துக்கள் இந்து மதக் கடவுள் ஒருவரைக் குறிக்கும். ஆறு எழுத்துப் பெயர். என்னபெயர்?

2. இப்பெயரினை அறியாதவர் இருக்க மாட்டார்கள். ஐந்து எழுத்துக் கொண்ட இப்பெயரின் 2, 3 எழுத்துக்கள் மன்மதன் மனைவியையும், கடைசி இரு எழுத்துக்கள் ஒரு வினைச் சொல்லாகவும் அமையும். என்ன பெயர்?

விடை: 1. கண்ணதாசன், 2. பாரதியார்.

—பி. கிருஷ்ணகுமார் (2670) சென்னை—5.




விடுகதைகள்:

1. ஊரெங்கும் காட்டாறு;
உடம்பெங்கும் சிற்றாறு.
2. மூச்சு இன்றி, பேச்சு இன்றி
உரிய இடம் போய்ச்சேரும்.
3. அடிபிடி சண்டையில்லை;
ஆனாலும், குடுமி போகும்.
4. பகலில் தொடர்வான்;
இருட்டில் மறைவான்.
5. மண் இல்லாத பொந்துக்குள்
கண் இல்லாத பாம்பு.

விடை: இரத்த ஓட்டம் 2. தபால், 3. சவரம் செய்தல், 4. நிழல், 5. நாக்கு.

—கூ. பெ. பாலசுப்பிரமணியன் (5374), கூக்கல்.





கொள்வதும் கொடுப்பதும்

ராமு: வாங்கிக் கொள்வதைவிடக் கொடுப்பதே வாழ்வின் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

கோபு: என் அப்பா கொடுப்பதையே தொழிலாக வைத்திருக்கிறார்.

ராமு: அப்படியா! உன் அப்பாவுக்கு என்ன தொழில்?

கோபு: குஸ்தி பயில்வான்.

—வி. ரமேஷ் (2586), சென்னை—18.

ப்பு

கீழே சில கேள்விகள் இருக்கின்றன. அந்தக் கேள்விகளுக்கு விடைகள் 'ப்பு' என்ற இரண்டு எழுத்துக்களில் முடியும். அவற்றைக் கண்டுபிடியுங்கள்:

1. குளியலுக்குப் பயன்படும் ப்பு எது?
2. அழகு படுத்தப் பயன்படும் ப்பு எது?
3. காலில் அணியும் ப்பு எது?
4. ஆசிய விளையாட்டுப் போட்டியின் சின்னமாகிய ப்பு எது?
5. துக்கத்தைக் காட்டும் அடையாள ப்பு எது?
6. எங்கும் செல்லும் வாகனமாகிய ப்பு எது?
7. சமையலுக்குப்பயன்படும் ப்புஎது?
8. சாம்பாருக்குப் போடும் ப்பு எது?

விடைகள்:

1. சோப்பு, 2. சீப்பு, 3. செருப்பு, 4. அப்பு, 5. கறுப்பு, 6. ஜீப்பு, 7. உப்பு, 8. பருப்பு.

—ஆர். பழனிவேலன் (3761) சேலம்.



சிறுவர் கவியரங்கம்

மூன்றெழுத்து

'காந்தி' என்பதில் மூன்றெழுத்து—அவர்
காட்டிய வாய்மையும் மூன்றெழுத்து.

'நேருஜி' என்பதில் மூன்றெழுத்து—அவர்
நேசித்த 'அமைதி'யும் மூன்றெழுத்து.

'பாரதி' என்பதில் மூன்றெழுத்து—அவர்
பைந்தமிழ்க்'கவிதை'யும்மூன்றெழுத்து.

'அண்ணா'என்பதில்மூன்றெழுத்து—அவர்
அறிவித்த 'கடமை'யும் மூன்றெழுத்து.

'தெரசா'என்பதில் மூன்றெழுத்து-அவர்
சீர்மிகும் 'தொண்டு'ம் மூன்றெழுத்து.

—இரா. சத்தியநாராயணன் (201),
சென்னை—86.

ஒன்றுபட்டால் வெற்றி

எறும்பு ஒன்று வந்தது
இறந்த பூச்சி ஒன்றையே
இழுத்துச் செல்ல முயன்றது;
இயல வில்லை; தோற்றது.

இன்னோர் எறும்பும் வந்தது.
இரண்டும் ஒன்று சேர்ந்தன:
இழுத்து இழுத்துப் பார்த்தன.
இயல வில்லை; தோற்றன.

அங்கே மேலும எறும்புகள்
அணி வகுத்து வந்தன.
அனைத்தும் சேர்ந்து இழுத்தன;
அழகாய் எடுத்துச் சென்றன.

ஒன்று பட்டால் உலகிலே
என்றும் வெற்றி அடையலாம்;
நன்றாய் இதனை உணருவோம்.
நன்மை பெற்று மகிழுவோம்.

—எஸ். குப்புசாமி (3155) சி.க.புதூர்.



வானவில்

அதோ பார் வானவில்!
ஆகா யத்தில் வானவில்!

அருமை யான வானவில்!
அந்த ரத்தில் நிற்குது!

ஏழு நிற வானவில்!
எழில் நிறைந்த வானவில்!

மழை வரும் நேரங்களில்
மகிழ்ச்சி தரும் வானவில்!

—வெ. லெட்சுமி நாராயணன் (5643),
தஞ்சாவூர்—9.

பெற்றோர் சொல்

பெற்றவர் சொற்படி நடப்பவர்கள்
கெட்டது இல்லை நீ அறிவாய்.

நிலவைக் காட்டி, உணவை ஊட்டி,
நினைவில் நிற்கும் நீதிகள் சொல்லி,
உணவும், உறக்கமும் இல்லாமல்,
உன்னைக் காத்தவள் உன் அன்னை.

உலகம் இதுஎனக் காட்டியவர்;
உயர்ந்த கல்வி ஊட்டியவர்;
ஊரும் உலகமும் உனைப்புகழ
உள்ளம் மகிழ்பவர் உன் தந்தை.

அன்னையும், தந்தையும் சொன்ன
சொற்கள்
விண்ணை விடவும் பெரிதாகும்;
பொன்மொழி அவற்றைக் கேட்டு
நடந்தால்
பெறலாம் எதனையும் தெரிந்துகொள்.

—கி. மாலதி (1894), சென்னை—2.

முகமூடி

எல்லா வகையிலும் முகமூடி
இங்கே இருக்குது; வாங்குங்க.
நல்லாப் போட்டுப் பாருங்க.
நாணயம் எடுத்துத் தாருங்க.

வகைவகை யான முகமூடி.
வண்ண வண்ண முகமூடி.
முகத்துக் கேற்ற முகமூடி.
மிகவும் மலிவு முகமூடி.

சின்னத் தம்பி தங்கையரைச்
சிரிக்க வைக்கும் கோமாளி!
என்ன சொல்லியும் புரியாமல்
எதற்கும் இளிக்கும் ஏமாளி!

கடலைத் தாண்டிய அனுமாரு.
கரடி, சிங்கம், புலிபாரு.
குடலைக் கிழிக்க இரணியனைக்
கொன்ற நரசிம்மப் பெருமாளு.


இப்படிப் பற்பல முகமூடி.
எவரும் விரும்பும் முகமூடி.
அப்புறம் வாங்கலாம் என்றாலோ
அந்தோ, வருந்துவீர் பின்னாடி.


—ஆர். எஸ். மீனாட்சி (4469), வேலூர்.











திருக்குறள் புதிர்





மேலே உள்ள இரண்டு படங்களும் எந்த எந்தத் திருக்குறளை உங்கள் நினைவுக்குக் கொண்டு வருகின்றன? யோசித்துப் பாருங்கள். விடைகளை ஒரு தனித்தாளில் எழுதி வைத்துக்கொண்டு 92ஆம் பக்கம் புரட்டிப் பாருங்கள்.

புதுமைப் போட்டி ①

1 	2 விதை	3 	4 
5 	6 சிலாப்	7 	8 
9 	10 	11 	12 ரிப்பு
13 தைந்து	14 அ நி க	15 	16 

முதல் பரிசு ரூ. 25.
இரண்டாவது பரிசு ரூ. 15.

சென்ற மாதம் அதாவது 1984, ஜூலை 'கோகுலம்' இதழில் அங்கங்கே சில பாகங்களை வெட்டினார் நம் ஓவியர். வெட்டிய அந்தப் பாகங்கள் ஒவ்வொன்றையும் மேலேயுள்ளபடி ஒவ்வொரு கட்டத்திற்குள் வைத்தார். மொத்தம் 16 கட்டங்கள்.

ஒரு கட்டத்தில் இருப்பது ஒரு படத்தின் ஒரு பாகமாக இருக்கலாம்; அல்லது ஒரு வாக்கியத்தின் ஒரு பகுதியாக இருக்கலாம். அது நேராகவும் இருக்கலாம். சாய்ந்தும் இருக்கலாம். தலைகீழாகக்கூட இருக்கலாம்.

ஒவ்வொன்றும் சென்ற இதழில் எந்தப் பக்கத்தில், எந்த இடத்தில் இருக்கிறது என்பதைத் தெளிவாக எழுதி அனுப்ப வேண்டும்.

இப்போட்டியில் 15 வயதுக்கு உட்பட்டவர்களே கலந்து கொள்ளலாம். கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினராக இருந்தால்; பெயருக்குப் பக்கத்தில் உறுப்பினர் எண்ணைக் குறிப்பிடுவது நல்லது.

மொத்தமுள்ள 16 கட்டங்களுக்கும் சரியான விடை கண்டுபிடித்து யார் எழுதுகிறார்களோ, அவர்களுக்கு முதல் பரிசு ரூ. 25. வழங்கப்பெறும். ஒரு தவறு மட்டுமே இருந்தால், அதை எழுதியவருக்கு இரண்டாவது பரிசு ரூ. 15. வழங்கப்பெறும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் வந்தால், அவற்றைக் குலுக்கிப் போட்டு முதலில் வரும் விடைக்கு முதல் பரிசு எனவும், 2–வது வரும் விடைக்கு இரண்டாவது பரிசு எனவும் முடிவு செய்யப்படும்.

உறையின்மேல் 'புதுமைப் போட்டி' என்று குறிப்பிடவும்.

முதல் பரிசு, இரண்டாவது பரிசு பெறுவோரின் புகைப்படங்களும் கோகுலத்தில் வெளியிடப் பெறும்.

முடிவு தேதி: 15.8.84.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.



கருணை விழிகள்

ஆர். பொன்னம்மாள்

7

“பாபுவைக் கான்வென்டிலே சேர்க்காமல் ஏன் சாதாரண ஸ்கூலில் சேர்த்தீங்க?'' என்று மோகன் கேட்டதும்

''மூணாவது வகுப்பு வரை கான்வென்டிலே ஒழுங்காகப் படிச்சான். நாலாவதிலேயிருந்து தகராறுதான். அஞ்சாவது படிக்கும்போது ஏற்பட்ட தலைவலிகள் இவனை மாத்திடுச்சு போதுமின்னு ஆயிடுத்து. ஆறாவதிலே கான்வென்ட் வேண்டாம்னு ரொம்ப முரண்டு பிடிச்சான். எப்படியெல்லாமோ கேட்டுப் பார்த்துட்டேன். ஊரிலே ஒரு இங்கிலீஷ் ஸ்கூல்தானா..? உனக்குப் பிடிச்சதிலே சேருன்னேன்... கடைசியிலே வெறுத்துப் போய் அவன் இஷ்டப்படி விட்டுட்டேன். ஆனால் இங்கே அவன் நல்லாப் படிச்சான்'' விளக்கமாகவே ராமபத்ரன் சொன்னார்.

''ஆமாம். ஒண்ணும் புரியலையே..!'' என்று ஜானகி இழுக்க,

''அப்புறம் உனக்கு எல்லாம் விளக்கமாச் சொல்றேன்... இவன் பேர் மதன். மோகன்னு கூப்பிடக்கூடாது. அந்த அளவில் புரிஞ்சுதோ, இல்லையோ... மதன். நாம மேலே போகலாமா?''-ராமபத்ரன் எழுந்தார்.

அதே சமயம் சுத்தம் செய்துவிட்டு வேலைக்காரியும் கீழே இறங்கி வந்து கொண்டிருந்தாள்.

* * *

''இவன் பேர் மதன். ரொம்ப நல்ல பையன். உன் வயசுதான். உனக்குத் துணையா இருப்பான். வேணுமிங்கற உதவியெல்லாம் தாராளமா இவன்கிட்டே கேட்கலாம்'' டாக்டர் அறிமுகப்படுத்தி வைத்தார்.

''இன்னும் எத்தனை பேரைக் கூட்டிட்டு வந்து நான் நொண்டி, குருடுன்னு விளம்பரப்படுத்தப் போறீங்க?'' குரூரமாகக் கேட்டான் பாபு என்கிற வாசு.

''நோ, நான் சொல்லலே...போகப் போக இவன் நட்பு எவ்வளவு இனிப்புங்கறதை நீயே புரிஞ்சுப்பே... நீ குருடுமில்லே... நொண்டியுமில்லே... நீயா மனசை வருத்திக்கறே... நீ எங்களோடே ஒத்துழைச்சா இந்தக் குறைகளெல்லாம் சீக்கிரம் நிவர்த்தியாயிடும்...''

''ஒட்டுப் போட்ட சட்டை மாதிரி.. ஏன் டாக்டர்... எங்கப்பா கொட்டித் தர பணத்துக்காக ஏன் இவ்வளவு கஷ்டப்படுறீங்க...? ஊசியைப் போட்டுட்டு, வழக்கம்போல் மருந்துகளையும் நிறைய எழுதிக் கொடுத்துட்டுப் போங்க.''

டாக்டர், இவனிடம் இனிப் பேசிப் பிரயோஜனமில்லை என்று நினைத்தவராக, ''நர்ஸ், வெந்நீர் ரெடி பண்ணு'' என்று உத்தரவிட்டுவிட்டுத் தம் காரியத்தில் மூனைந்தார்.

அடுத்த அரைமணி அங்கே ஓரே போராட்டம்தான்! அமர்க்களம்தான்! பிறகு சிறிது நேரத்தில் பாபு தூங்கிப் போனான்.

டாக்டர் கால் கட்டைப் பிரித்து மாற்றுக் கட்டுக் கட்டிவிட்டு விடை பெற்றுக் கொண்டார்.

மௌனமாக அறையைச் சீர்படுத்தினான் மோகன். அவன் பள்ளிப் புத்தகங்களை ஆராய்ந்தான். அவன் உடைகள், உடைமைகளை ஒழுங்கு செய்தான். டெட்டால் போட்டுத் துடைக்கச் செய்து, மெத்தையை மாற்றிவைத்து, தோட்டத்திலிருந்த ரோஜா, மல்லிகை ஜாதி மலர்களைத் தொடுத்தான். ''ஏன் சார், பூஜை ரூம்லே இத்தனை படமிருக்கே... ஒரு வேங்கடாஜலபதி படத்தை பாபு ரூமில் மாட்டலாமே!'' என்று கேட்டு, அந்த அறையில் வேங்கடாசலபதி படத்தை மாட்டச்

செய்தான். கம்மென்ற ஊதுவத்தி வாசனைகளால் அறையை நனைத்தான்.

ஜானகிக்கும், ராமபத்ரனுக்கும், நமக்கேன் இப்படியெல்லாம் செய்ய வேண்டுமென்று தோன்றவில்லை என்று தங்கள் மீதே சலிப்பாக இருந்தது. அதேசமயம் மோகனை நினைத்துப் பிரமிப்பாகவும் இருந்தது.

ஹாலை அடுத்திருந்த இடத்தில் ஒரு பெரிய கரண்டியில், தணல் உண்டாக்கி, சாம்பிராணிப் புகை —மூச்சு முட்டாமல் மெலிதாக வரும்படி — போடச் செய்தான்.

பூத்தொட்டிகளிலிருந்த குரோட்டன்ஸ் பூக்களைத் தூக்கி எறியச் செய்துவிட்டு சண்பக மலர் ஆரத்தை ஒரு கிளையில் சுற்றி வைத்தான்.

பாபு கண் விழித்தபோது அந்தப் புதிய வாசனைகள் அவனை மெய்ம் மறக்கச் செய்தன. 'இதென்ன சாம்பிராணி, ஊதுபத்தி, பூ! டெட்டால் கலந்த இந்த மணத்துக்கு யார் காரணம்?' யோசித்தான்.

''முழிச்சிட்டியா? என்ன சாப்பிடறே?''

''ஓ, புதுப்பையனா, இந்தக் குரலை நாம் எங்கேயோ கேட்டிருக்கிறோமே! யார்... யாராயிருக்கும்..?'' மூளையைக் கசக்கிக் கொண்டான்..

''உங்கப்பா பூசாரியா? உன் பேரென்ன?''

''என் பேர் மதன். ஏன் அப்படிக் கேட்கறே?''

''இல்லே, ஏதோ சாமியார் மடத்திலே இருக்கிறாப் போல நாற்றம்.''

மோகன் சிரித்தான். ''நீ கேலியாச் சொன்னாலும் நாத்தம்கிறதுக்கு வாசனைன்னு ஒரு அர்த்தம் உண்டு.''

''உனக்கு எவ்வளவு கூலி?''

''எதுக்கு?''



குப்பாபாய் மீது கோபமா?

சூளையைச் சேர்ந்த நானும் என் தோழிகளும் விடுமுறையில் 'சுடர் மணி' என்ற பெயரில் கையெழுத்துப் பிரதி ஒன்றைத் தயாரிக்கத் திட்டமிட்டோம். கதை, கவிதை, துணுக்கு போன்றவற்றைத் தேர்ந்தெடுக்கவும், பிரதியை அழகாக அமைக்கவும், நிர்மலாவை ஏற்பாடு செய்தோம். காரணம், அவளுடைய அம்மா தமிழாசிரியை என்பதுதான். ஆகவே, எங்களுடைய முயற்சி குறைவின்றி அமையும் என அனைவரும் தீர்மானித்தோம். மேலும் நிர்மலாவின் கையெழுத்தும் அச்சு அச்சாக இருக்கும்.

ஒருநாள் மாலை என் வீட்டிற்கு வந்தார்கள் தோழிகள். 'சுடர்மணி' ஏற்பாடு எந்த அளவில் இருக்கிறது என்று அறிய எல்லோரும் நிர்மலாவின் வீட்டிற்குச் சென்றோம். அப்போது, நிர்மலா தீவிரமாக எழுதிக் கொண்டிருந்தாள். எங்களோடு வந்த குப்பாபாய் என்பவள் மிகவும் நிதானமும், அடக்கமும் கொண்டவள். அப்படிப்பட்டவள் ஆர்வத்தோடு, ''நிர்மலா, என்னென்ன கதைகள், கவிதைகள் தேர்ந்தெடுத்திருக்கிறாய்?'' என்று கேட்டாள். அவளுடைய கதை அந்தப் பிரதியில் இடம் பெறுமா என்பதை அறிந்து கொள்ளும் ஆர்வத்தில்தான் அப்படிக் கேட்டாள். எழுதிக் கொண்டிருந்த நிர்மலா தலை நிமிராமலேயே, ''நீ யார் கேட்க? உனக்கென்னவாம்?'' என்று கூறிக் கொண்டே பக்கத்திலிருந்த காகிதங்களைப் புரட்டினாள். எங்கள் அனைவருக்கும் அதிர்ச்சியாகி விட்டது. குப்பாபாயின் முகமோ மிகவும் வாடிவிட்டது.

உடனே நான், ''ஏன் நிர்மலா! குப்பாபாய் அப்படி என்ன கேட்டு விட்டாள்? இப்படி முரட்டுத்தனமாகப் பதில் சொல்கிறாயே!'' என்றேன் சிறிது கோபத்தோடு. அவ்வளவுதான்! உடனே நிர்மலா பதற்றத்தோடு எழுந்து, ''அடேடே... நான் மரியாதைக் குறைவாகவா பேசினேன்? இதோ பாருங்கடி, இதைத்தான் நான். சொன்னேன்'' என்று சில கதைப் பிரதிகளை எடுத்து எங்களிடம் காட்டினாள். ஆம், கதையின் தலைப்புக்கள்தான் 'நீ யார் கேட்க'' 'உனக்கென்னவாம்?''என்பதெல்லாம். நாங்கள் அனைவரும் சிரித்தோம், குப்பாபாய் உட்பட!

—ஜோ.பத்மனி (1919), சென்னை—112.



''இப்படி ஆயா வேலை பாக்கறதுக்கு? ரொம்ப ஏழையோ?''

''ஏழைதான்... ஆனல், சம்பளத்துக்காக நான் இந்த இடத்துக்கு வரலே...!''

''பின்னே...? உங்கப்பா எங்கப்பா கிட்டே அடிமை சாசனம் எழுதிக் கொடுத்திருக்காரா?''

''பாபு, இந்தா இதைச் சாப்பிடு... நல்ல தேன்கொய்யா. பாபு எழுந்ததும் கொடுன்னு உங்கப்பா சொன்னரு...''

பாபு கையில் திணிக்கப்பட்ட கொய்யாவைக் கடித்துவிட்டு, ''தூதூ! செங்காய், ஒரே துவர்ப்பு'' என்று வீசி எறிந்தான்.

''உனக்கென்ன கொழுப்பு...! பழத்தையெல்லாம் நீ முழுங்கிட்டுக் காயையா தர்ரே?'' பக்கத்தில் துழாவினன்... மேஜைதான் தள்ளிப் போடப் பட்டிருந்ததே... மோகனும் பாபுவின் தலைப் பக்கமாகத் தள்ளி நின்று கொண்டிருந்தான்.

''பாபு காயை யாரும் விரும்பறதில்லே... அதைத்தான் திருவள்ளுவர் 'கனியிருப்பக் காய் கவர்ந்தற்று'ன்னு சொல்லி இருக்கார். நான் உனக்கு எந்தக் கெடுதலும் பண்ணலே... அப்படி இருக்க, நீ துப்பி எறிஞ்சியே, அந்தச் செங்காய் மாதிரி ஏன் வார்த்தையைக் கொட்டுறே? அன்பாய்ப் பேசலேன்னலும் சாதாரணமாகவாவது பேசக் கூடாதா? இதைப் புரிய வைக்கத்தான் காயைத் தந்தேன். மன்னிச்சுக்க... இப்போ பழம் — நல்லா கனிஞ்சது, தரட்டுமா?''

''பெரிய மேதாவி... பொறுக்கி நாயே... என்ன திமிருடா உனக்கு... வாடா இங்கே...'' தலையணை போர்வை எல்லாவற்றையும் வீசி எறிந்தான் பாபு.

மோகன் ஆடாமல் அசையாமல் பாபு கத்தி ஓயும்வரை எட்டியே நின்றிருந்தான். சப்தம் கேட்டு வந்த வேலைக்காரனையும், போகும்படி சைகை காட்டித் திருப்பி அனுப்பிவிட்டான்.

பாபு, ''மதன் தொலைஞ்சுட்டியா... ஐயோ, யாருமே இல்லியா?'' என்றபடி கட்டிலிலிருந்து இறங்க முயன்ருன். மோகன் ஓடிவந்து அவனைப் பிடித்து நிறுத்தினன்.

''என்ன வேணும்...? காலை அசைக்கக் கூடாது'' என்று மோகன் அன்புடன் கூற,

''எனக்கு நீதான் வேணும்... இருந்துக்கிட்டு வேடிக்கையா பார்த்தே?'' என்றபடி அவனை வேக

மாய்ப் பிடித்துத் தள்ள 'அம்மா' என்று அலறியபடி விழுந்தான் மோகன்.

சப்தம் கேட்டு ஓடிவந்தார்கள் வேலைக்காரனும் ஜானகியும்.

மேஜையின் கூரான முனை தாக்கி மோகனின் நெற்றியிலிருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

டாக்டருக்கு போன் செய்தாள் ஜானகி.

''ஐயோ, மகா முசுடு... இப்படிப் பண்ணிட்டியேடா ஊரார்பிள்ளையை!'' என்று தாய் மனம் தாங்காமல் புலம்பினாள்.

❋ ❋ ❋

''உன் டெஸ்ட் நோட்டைப் பார்த்தேன். ரொம்ப நல்லா மார்க் வாங்கியிருக்கியே!''

மயக்கம் தெளிந்து அசைந்த பாபுவின் காதில் முதலில் விழுந்த சொற்கள் இவைதான். ''நீ... நீ... இன்னிக்கும் வந்திருக்கியா? நேத்து காயம் எப்படி இருக்கு?''

''தேவலே.''

''கட்டுப் போட்டிருக்கா... கிட்டே வா... கட்டைத் தொட்டுக் காட்டு... பயப்படாதே... இன்னைக்குப் பிடிச்சுத் தள்ள மாட்டேன்.''

''பயந்தால் வந்தே இருக்க மாட்டேன். நீ நல்லா நடக்கற வரை, உனக்குக் கண் பார்வை மறுபடி கிடைக்கிற வரை, நான் வர்றதை நிறுத்த மாட்டேன். நீ என்னை எத்தனை தடவை பிடிச்சுத் தள்ளினாலும் சரி...'' மோகன் பாபுவின் அருகில் வந்து, அவன் கையைப் பிடித்துத் தன் மண்டைக் கட்டைத் தொட்டுக் காட்டினான். சரேலென்று கையை இழுத்துக் கொண்ட பாபு, ''கட்டு பெரிசாத்தான் இருக்கு'' என்று முனகிக் கொண்டே,

''உனக்கு என் மேல் கோபம் வரல்லியா?'' என்று கேட்டான்.

''எதுக்கு?''

''எதுக்கா... பிடிச்சுத் தள்ளினேனே...?''

''உன்னை யாரு லாரி முன்னாலே பிடிச்சுத் தள்ளினாங்க? கூலிங் கிளாஸை உடைச்சு உன் கண்ணைக் குத்தினது யாரு...? அது விதின்னா இதுவும் விதிதான்...! நீ தள்ளலேன்னா நானா வழுக்கி விழுந்திருப்பேன்... இதுக்கேன் உன்னைக் கோபிச்சுக்கணும்?''

பாபு மௌனமாய் இருந்தான். சற்று நேரம் கழித்து, ''மதன், எனக்கு நிஜமாகவே கண் வந்துடுமா? நான் இந்த உலகத்தை, உங்களையெல்லாம் நிஜமாகவே பார்க்க முடியுமா? முன்னைப் போல ஓடியாடி நடக்க முடியும்னு டாக்டர் சொல்றதை நம்பறியா...? இந்த டாக்டர்கள் சாகிறவனைக்கூடப் பிழைக்க வச்சுடுவதாய்ச் சொல்லுவாங்க.... ஒளிக்காம நிஜத்தைச் சொல்லு'' என்று கொஞ்சியபடி கேட்டான்.

மோகன் அவன் கைகளைத் தடவிக் கொடுத்தபடி, ''பாபு, நாங்க சொல்றபடி கேட்டடா, உன் கால் பூரண குணமாயிடும்... கூடி வர்ர எலும்பை நீ அப்படி, இப்படி அலைச்சாத்தான் கோளாறாகும். உங்கப்பா பணத்தைப் பணம்னு பார்க்காம செலவு பண்றாரு.

பிறந்த ஊர் எது?



தமிழில் கம்பர் எழுதிய இராமாயணத்தைப் போல், இந்தியில் துளசிதாசர் எழுதிய இராமாயணம் மிகவும் புகழ் பெற்றது. அந்த துளசிதாசர் பிறந்த ஊர் எது? 'எங்கள் ஊரில்தான் அவர் பிறந்தார்', 'எங்கள் ஊரில்தான் அவர் பிறந்தார்' என்று பல ஊர்க்காரர்கள் சொந்தம் கொண்டாடுகிறார்கள். அவர்கள் எந்த எந்த ஊர்க்காரர்கள்?

தாரி,

ராஜ்பூர்,

ஹிஜாப்பூர்,

சாரான்,

சுக்கர்ஹத்,

இந்த ஊர்கள் எல்லாமே உத்தரப் பிரதேசத்தில்தான் இருக்கின்றன.

எத்தனை டானிக்குங்க! எத்தனை போஷாக்கு மாத்திரைங்க? பல்லில்லாமல் போகுமா? கண்ணுக்குத்தான் மாற்றுக்கண் கிடைச்சதும், ரணம் பூரா ஆறினதும் பொருத்திடலாம்னு சொல்றுரே! எதிலேயும் நம்பிக்கை வைக்கணும் பாபு... உன்னை எத்தனை நாளைக்கு ஏமாத்த முடியும்...? அதனுலே டாக்டருக்கு என்ன லாபம்? இப்போ ஆறுதலாயிருந்தாலும் பின்னுலே அதிர்ச்சியாயிடாதா? மனபலம் தான் பெரிசு. அதோட தெய்வ நம்பிக்கையும் இருந்துதுன்னு நிச்சயமா எதிலேயும் வெற்றிதான்...! நீ வேணுப் பாரு... சீக்கிரமே நீ பூரணமா சொஸ்தமாயிடுவே... காலையிலே என்ன சாப்பிட்டே? இப்ப உனக்கு என்ன கொண்டு வரட்டும்?''

தலைகுனிந்து அமர்ந்திருந்த பாபு நிமிர்ந்தான்.

''எனக்கு நீ எப்படி இருக்கேன்னு பார்க்கணும் போல இருக்கு. என் கட்டிலுக்குப் பக்கத்திலே மணி இருக்கும். அதை அழுத்து. யாராவது வருவாங்க. ரெண்டு ஆப்பிள் ஜூஸ் கொண்டு வரச் சொல்லு.''

''ரெண்டா?'' மணியை அழுத்திக் கொண்டே கேட்டான் மோகன்.

''ஆமாம். நம்ம ரெண்டு பேருக்கும் தான்!''

''எனக்கெதுக்கு பாபு? அப்படியே வேணுமின்னுலும் நான் மோர் குடிக்கிறேன்.''

''நான் சொல்றதுக்கு மறுத்துப் பேசக் கூடாது.''

வேலைக்காரன் வந்தான். பாபு அவனிடம் இரண்டு கிளாஸ் ஆப்பிள் ஜூஸும், பிஸ்கட்டும், கேக்கும் இரண்டு பிளேட்டிலே கொண்டு வரச் சொன்னுன். அவன் போன பிறகு மோகன்,

''உனக்குத்தான் விபத்திலே நிறைய ரத்தச் சேதம். கால் எலும்பு கூடணும். சத்துணவு வேணும். எனக்கெதுக்கு பாபு! உன் அன்பு இருந்தாப் போதும்.''

''உனக்கும்தான் நேத்து ரத்த சேதம்.. மதன், காயம் வலிக்குதா..?''

''அப்படி ஒரு காயம் படலேன்னு இப்படி அன்பு கிடைச்சிருக்குமா?''

''கெட்டதிலும் நல்லதைப் பார்க்கிற மனசு உனக்கு! நல்லதிலும் கெட்டதைப் பார்க்கிற குணம் எனக்கு!''

''உஸ், பிஸ்கட் வருது... வேலைக்காரங்க முன்னுடி உன்னைத் தாழ்த்திக்காதே!'' மோகன் எச்சரிக்கவும் பாபு மௌனமானுன்.

''பிஸ்கட், கேக் இதை எப்படிச் சாப்பிடப் பிடிக்கும்?''

''கேக் கொஞ்சம், பிஸ்கட் கொஞ்சமாய்க் கடிப்பேன். பிறகு, ஒரு மடக்கு ஜூஸ்! இப்படி மாற்றி மாற்றிச் சாப்பிடுவேன்''.


பாபுவின் ஒரு கையில் ஜூஸ் கிளாஸையும், மறு கையில் கேக் தட்டையும் கொடுத்தான் மோகன். அவன் சாப்பிடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தவன், ''மதன், நீ சாப்பிடல்லியா?'' என்ற பாபுவின் கேள்வியில் சுதாரித்துக் கொண்டு 'உம்' கொட்டினுன்.

''இந்த வருஷம் படிப்பு போச்சு'' பெருமூச்சு விட்டான் பாபு.

''ஏன் போகணும்? பரீட்சைக்கு இன்னும் நாள் இருக்கே...!''

சாப்பிடுவதை நிறுத்தி விட்டு மோகன் பக்கம் திரும்பி, ''கேலியாயிருக்கா?'' என்றுன் பாபு.

(தொடரும்)




அக்கிள்பெரி

உலகப் புகழ் பெற்ற சிறுவர் கதை-17

மூலம்: மார்க் ட்வைன்

தமிழ்ச் சுருக்கம்: எச். கிருஷ்ணமூர்த்தி



நீங்கள் 'டாம் சாயர்' கதையைப் படித்திருந்தால் என்னை அறிவீர்கள். படிக்கவில்லையா பரவாயில்லை. இப்பொழுது நானே என் கதையை உங்களுக்குச் சொல்லுகிறேன், கேளுங்கள். என்பெயர் அக்கிள் பெரி ஃபின்.

நான் பிறந்ததுமே என் அம்மா இறந்து போனாள். என் அப்பா ஒரு குடிகாரர். எடுத்ததற்கெல்லாம்என்னைத் திட்டினார்; அடித்தார்; கொடுமைப் படுத்தினார். அவருடைய அடிக்குப் பயந்துகொண்டு நான் அடிக்கடி காட்டுக்கு ஓடினேன். அதனால் என்னுடைய வாழ்க்கை ஒழுங்கு இல்லாமல் இருந்தது.

ஊரில் இருந்த குறும்புக்காரச் சிறுவர்கள் எல்லோரும் என் நண்பர்கள். அவர்களில் முக்கியமானவன் டாம் சாயர். ஒரு திருடனின் குகையில் டாம் சாய்ரும், நானும் ஒரு புதையலைக் கண்டெடுத்தோம். பெட்டி நிறையப் பவுன் காசுகள் கிடைத்தன. அதை நீதிபதி தாட்சரிடம் கொடுத்துப் பாதுகாக்கச் சொன்னோம். அதிலிருந்து எங்களுக்குத் தினமும் ஒரு டாலர் வருமானம் கிடைத்தது.

எங்கள் ஊரிலிருந்த டக்ளஸ் அம்மையாரும், அவருடைய சகோதரியான வாட்சன் அம்மையாரும், என் மீது அன்பைப் பொழிந்தனர். என்னைத் தங்கள் இல்லத்திற்கு அழைத்துச் சென்றனர். என்னைத் திருத்தி ஒரு நல்ல பிள்ளையாக்க முயன்றனர். அவர்களுடைய வீட்டில் கட்டுப்பாடுகள் அதிகம். 'புகை பிடிக்கக் கூடாது', 'மட்ட ரகமான வார்த்தைகளைப் பேசக் கூடாது' — என்றெல்லாம் எனக்குத் தடை விதித்தனர். மேலும், கட்டாயமாக என்னைப் பள்ளியில் சேர்த்தனர். சில நாட்களில் பள்ளிக்கு மட்டம் அடித்தாலும், எப்படியோ நான் எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டேன்.

நானும், நண்பர்களும் அடிக்கடி ஒரு குகையில் கூடினோம். திருடன் விளையாட்டு விளையாடினோம். திருடர்களைப் பற்றி டாம் நிறையக் கதைகள் படித்திருந்தான். அவற்றை உண்மையென்று நம்பினான். எங்களுக்கும் எடுத்துச் சொன்னான். மேலும், 'ஒரு பழைய விளக்கைத் தேய்த்தால் பூதம் வரும்; அது நாம் என்ன சொன்னாலும் செய்யும்' என்று ஒருநாள் கூறினான். நான் அவ்வாறு தேய்த்துப்



குழந்தை இலக்கிய டாக்டர்

குழந்தை மருத்துவத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர்கள் பலர். ஆனால், குழந்தை இலக்கியத்தில் டாக்டர் பட்டம் பெறுபவர் இதோ இப்படத்தில் இருக்கும் அம்புஜம் யுவச்சந்திரா அவர்கள்தான். இவர் சென்னையிலுள்ள இராணி மேரி கல்லூரியில் தமிழ்த் துணைப் பேராசிரியையாக இருக்கிறார். எம்.ஏ., எம். ஃபில்., பி.டி. ஆகிய பட்டங்களை ஏற்கெனவே பெற்றிருக்கும் இவர், இப்போது சென்னைப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறார்.

எதற்காக இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கினார்கள்?

'கோகுலம்' இதழின் கௌரவ ஆசிரியர் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா எழுதியுள்ள 50-க்கு மேற்பட்ட புத்தகங்களை ஆராய்ந்ததற்காக டாக்டர் பட்டம் வழங்கினார்கள். வள்ளியப்பாவின் கவிதைகளை மட்டும் ஆராய்ந்து ஏற்கெனவே மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் கதி. கணேசன், வெ. கிருஷ்ணசாமி- இருவரும் எம். ஃபில் பட்டம் பெற்றிருக்கிறார்கள். அவர்களின் ஆராய்ச்சிகள் புத்தகங்களாகவும் வெளிவந்திருக்கின்றன. (புத்தகப் பெயர்கள்: 'குழந்தை இலக்கியத்தில் - வள்ளியப்பா ஒரு வழிகாட்டி', 'குழந்தைக் கவிஞரின் இலக்கியத் திறன்') கேரளப் பல்கலைக் கழகத்தில், வள்ளியப்பாவின் கவிதைகளை ஆராய்ந்து எம். ஃபில் பட்டம் பெற்றிருக்கிறார் ஓ. பத்மகுமாரி என்பவர். ஆயினும், வள்ளியப்பாவின் கவிதைகள், சிறுகதைகள், நெடுங்கதைகள், வாழ்க்கை வரலாறுகள்- இப்படி எல்லாவற்றையும் பற்றி ஆராய்ந்திருப்பவர் அம்புஜம் யுவச்சந்திராதான். தமிழ்க் குழந்தை இலக்கியத்தில் ஆராய்ச்சி செய்து முதல் முதலாக டாக்டர் பட்டம் பெறுபவரும் இவரே!

பார்த்தேன். பூதமும் வரவில்லை; ஒன்றும் வரவில்லை.

குளிர்காலம். நல்ல பனி. ஒருநாள் வீட்டைச் சுற்றி நடந்தேன். பனியில் பதிந்திருந்த பாதச் சுவடுகள் என்னைக் கவர்ந்தன. உற்று நோக்கினேன். அவை என் அப்பா வந்த அடையாளங்கள் என்று அறிந்தேன். ஒரு வருடத்திற்கு மேலாக மறைவாக இருந்த அப்பா, திடீரெனத் தோன்றிய காரணம் புரிந்தது. எனக்குப் புதையல் கிடைத்த செய்தி அவருக்கு எட்டியிருந்தது. அந்தப் பொற்காசுகளையெல்லாம் குடித்து வீணடிப்பதற்காக அவர் என்னைத் தேடினார். நான் நீதிபதி தாட்சரின் இல்லத்திற்கு விரைந்தேன். புதையலை அவரே எடுத்துக் கொள்ளும்படி மன்றாடினேன். முதலில் அவருக்குப் புரியவில்லை. பிறகு அவர் ஒரு காகிதத்தில் ஏதோ எழுதி என் கையொப்பம் வாங்கிக் கொண்டார். அப்பாவிடமிருந்து புதையலைக் காப்பாற்றிய திருப்தியோடு நான் திரும்பினேன்.

ஒருநாள் விளையாடி விட்டு நான் என் அறைக்குள் நுழைந்தேன். என் அப்பா எனக்காக அங்கே காத்திருந்தார். ஜன்னல் வழியாக உள்ளே குதித்து அவர் வந்திருந்தார். நான் அவரை நோக்கினேன். கந்தலாடை., நீண்ட கரிய தலைமுடி, தாடி, மீசை, அழுக்கு, நாற்றம் – இவற்றின் மொத்த உருவமான அவர் ஒருவித வெறியோடு என்னை நோக்கினார்.

''நீ இப்போது ரொம்ப வசதியாக இருக்கிறாய். பள்ளிக்கூடம் போகிறாய் என்று கேள்விப்பட்டேன். எங்கே படி. பார்க்கலாம்'' என்றார்.

அருகிலிருந்த ஒரு புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தேன். உடனே அவர் புத்தகத்தைப் பிடுங்கி வீசி எறிந்தார்.

''நான் வறுமையால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேன். நீ உல்லாசமாகவா வாழ்ந்து கொண்டிருக்கிறாய்? இனிமேல் நீ பள்ளிக்கூடப் பக்கம் போனால் கொன்று விடுவேன்'', என்று சொல்லி மிரட்டினார். பிறகு ''உன் பணம் எங்கே? எடு'', என்றார்.

''என்னிடம் பணமும் இல்லை. ஒன்றும் இல்லை. நீதிபதி தாட்சரிடம் வேண்டுமானால் கேளுங்கள்'', என்றேன்.

''கேட்கிறேன், கேட்கிறேன்'', என்று சொல்லிக் கொண்டே, என் சட்டைப் பையிலிருந்த ஒரு டாலரையும் பிடுங்கிக்கொண்டு மதுபானக் கடையை நோக்கி நடந்தார்.

மறுநாள் நன்றாகக் குடித்துவிட்டு என் அப்பா நீதிபதி தாட்சரிடம் போய்ப் பணம் கேட்டார். அவர் கையை விரித்து விட்டார். என் அப்பா கோபமடைந்து தாறுமாறாக அவரைத் திட்டிவிட்டுப் போனார்.

டக்ளஸ் அம்மையார் என்னைத் தத்து எடுத்துக் கொள்வதற்காக நீதி மன்றத்திற்கு மனுச் செய்தார். அங்கு புதிய நீதிபதி இருந்தார். அவருக்கு என் அப்பாவின் தீய வழிகளைப் பற்றி ஒன்றும் தெரியாது. ஆகவே, அவர் அப்பாவிடமிருந்து பிள்ளையைப் பிரிக்கக் கூடாது என்று தீர்ப்பளித்தார்.

தீர்ப்பைக் கேட்ட என் அப்பாவுக்குப் பரம திருப்தி. அவர் என்னைத் தரதரவென்று காட்டுக்கு இழுத்துச் சென்றார். ஆற்றோரம் இருந்த ஒரு மரக்குடிலில் என்னைத் தள்ளிக் கதவைப் பூட்டினார். அரை வயிற்றுக்கு உணவு, அடிக்கடி அடி, உதை, — இப்படிச் சில நாட்கள் கழிந்தன. குடிலில் நான் புகை பிடித்தேன். கீழ்த்தரமான வார்த்தைகளைப் பேசினேன். கட்டுப்பாடு நிறைந்த டக்ளஸ் அம்மையார் வீட்டு வாழ்க்கையை விட இந்தக் காட்டு வாழ்க்கை எனக்குப் பிடித்திருந்தது. அப்பாவின் அடி ஒன்றுதான் பொறுக்க முடியாமல் இருந்தது.

நான் தப்பிச் செல்ல ஒரு வழி வகுத்தேன். ஒரு படகை ஒளித்து வைத்தேன். அதில் எனக்கு வேண்டிய பொருள்களைச் சேமித்தேன். ஒரு காட்டுப் பன்றியைக் கொன்று ஆற்றங்கரை வரையில் அதன் இரத்த அடையாளம் தெரியும்படி அதை இழுத்துச் சென்றேன். அதைப் பார்த்தவர்கள் நான்தான் இறந்து விட்டேன் என்று எண்ணுவதற்காக அப்படிச் செய்தேன். பிறகு படகில் ஏறி ஜாக்சன் தீவை அடைந்தேன். நான் காணாமல் போன பரபரப்பு ஊரில் அடங்கும் வரை தீவிலேயே மறைந்து வாழ்ந்தேன்.

சில நாட்கள் கழித்து அந்தத் தீவைச் சுற்றிப் பார்த்தேன். அப்போது என் நண்பனான ஜிம் என்ற நீக்ரோச் சிறுவனைக் கண்டுபிடித்தேன். அவன் வாட்சன் அம்மையார் வீட்டு அடிமை. அம்மையார் தன்னை ஒரு வியாபாரிக்கு விற்க ஏற்பாடு செய்வதை ஜிம் அறிந்தான். உடனே, அவன் வீட்டைவிட்டு ஓடிப்போய் அந்தத் தீவில் ஒளிந்து கொண்டான். தன்னை யாரிடமும் காட்டிக் கொடுக்க வேண்டாமென்று ஜிம் வேண்டினான். ஜிம்மைச் சந்தித்ததில் எனக்கு அள




வில்லா மகிழ்ச்சி. அவனைக் காப்பாற்றுவதாக உறுதியளித்தேன்.

ஜிம்மும், நானும் ஒன்ருக மீன் பிடித்தோம்; வேட்டையாடினேம்; விளையாடினேம். அவனுக்குத் தெரிந்த நீக்ரோக் கதைகளை எனக்குச் சொன்ஞன். இப்படிப் பல நாட்களை இனிமையாகக் கழித்தோம்.

ஒரு பெண்ணைப் போல வேடமணிந்துகொண்டு ஓர் இரவு நான் ஊருக்குள் சென்று விசாரித்தேன். பல செய்திகள் கிடைத்தன. நான் கொலை செய்யப்பட்டதாக ஊர் மக்கள் நம்பினர். அதன் காரணமாக

கவலையின் காரணம்

கண்ணன்: ஏண்டா கவலையாக இருக்கிருய்?
முரளி: அப்பா என்னை நட்சத்திர இரவுக்கு அழைச்சுக்கிட்டுப் போறதா சொன்னர். வானம் மூடிக்கொண்டு இருக்கே. நட்சத்திரமே தெரியாதே! அதான் கவலையாக இருக்கு.
—லலிதா செல்லப்பா.



என் அப்பா தலைமறைவாகி விட்டார். என்னுடைய கொலை சம்பந்தமான வதந்திக்குப் பிறகு, ஜிம்மும் காணமல் போகவே, ஜிம்தான் என்னைக் கொன்றதாக ஊரார் எண்ணினர். காணமல் போன ஜிம்மைப் பிடிப்பவர்களுக்கு முந்நூறு டாலர் பரிசு அறிவிக்கப்பட்டிருந்தது.

ஜிம்மைத் தேடும் ஆட்கள் அந்தத் தீவுக்கு வரும் முன்பே நாங்கள் ஒரு தெப்பத்தைக் கட்டிக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டோம். மிசிசிபி ஆற்றின் போக்கோடு மிதந்து சென்ருேம். ஒகியோ என்னும் கிளை நதியின் வழியாகத் திசை மாறினேம். அடிமைத்தனம் இல்லாத வடக்கு மாநிலங்களுக்குச் சென்று உழைத்துப் பிழைக்க விரும்புவதாக ஜிம் சொன்ஞன்.

வழியில் எங்களுக்குப் பல தடங்கல்கள்; சோதனைகள். அவற்றைத் தாண்டி முன்னேறினேம். விடுதலையை விரும்பித் தப்பி ஓடும் ஓர் அடிமைக்கு உதவி செய்யலாமா என்ற ஐயம் என் மனத்தில் எழுந்தது. ஆனல், ஜிம்மைப் போன்ற ஒரு நல்ல நண்பனைக் காட்டிக் கொடுத்தால், என் மனம் அதிக வேதனைப்படும் என்ற நினைப்பும் கூடவே வந்தது. ஆகவே, எவ்வளவு கஷ்டப்பட்டாலும் ஜிம்மைக் காப்பாற்றியே தீருவது என்று தீர்மானித்தேன்.

இரவு நேரம். மூடு பனி. நதியில் போக்குவரத்து அதிகம் இருந்தது. சப்தம் கேட்டதே தவிர எதிரில் வரும் எந்தப் படகையும் கண்ணல் பார்க்க முடியவில்லை. எங்களை நோக்கி ஒரு நீராவிப் படகு வேகமாக வந்து கொண்டிருந்தது. அதில் விளக்குகள் வரிசையாக எரிந்தன. எதிரில் வரும் கட்டுமரங்களைப் பற்றி அந்தப் படகில் இருந்தவர்கள் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. பெரிய இரைச்சல், கணகணவென்ற மணியோசை, 'கூ'வென்ற ஊதல் சப்தம் — இவற்றேடு அந்த நீராவிப் படகு எங்கள் தெப்பத்தின் மீது மோதியது.

ஜிம் ஒரு புறமும், நான் மற்ருேர் புறமுமாகக் கடலில் குதித்தோம். ஜிம்மைக் காணவில்லை! நான் மட்டும் நீந்திக் கரையேறினேன். அருகில் இருந்த வீட்டை அணுகினேன். அவர்கள் என்னை வரவேற்று அன்பு காட்டினர். அவர்கள் அனுவசியமாக என் விஷயத்தில் தலையிடவில்லை. என்னைக் கவனிக்க ஒரு நீக்ரோச் சிறுவனை அமர்த்தியிருந்தனர்.

அந்தச் சிறுவன் பாம்புகளை வேடிக்கை பார்ப்பதற்காக ஒருநாள் என்னைக் காட்டுக்கு அழைத்துச் சென்றுன். எதிர்பாராத விதமாக அங்கே ஜிம்மைச் சந்தித்தேன். உடைந்து போன தெப்பத்தைச் சீர் செய்துவிட்டு எனக்குச் செய்தி அனுப்புவதற்காக ஜிம் அங்கே காத்திருந்தான். நாங்கள் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தோம். பிறகு வீடு திரும்பினேன்.

அன்றிரவு என்னை ஆதரித்த வீட்டாருக்கும், அவர்களுடைய அண்டை வீட்டாருக்கும் இடையே பெரிய சண்டை மூண்டது. அந்தக் குழப்பத்தில் நானும், ஜிம்மும் தப்பித்துக்

கொண்டு ஓடினோம். தெப்பத்தை எடுத்துக்கொண்டு மிசிசிபி நதியில் மீண்டும் மிதந்து சென்றோம். ஜிம கவனமாகத் தெப்பத்தைச் செலுத்தி வந்தான்.

இரண்டு, மூன்று நாட்கள் அமைதியாகக் கழிந்தன. அந்த அகன்ற ஆற்றில் இரவில் மட்டும் பயணம் செய்தோம். பகலில் கரையில் ஒதுங்கி ஓய்வெடுத்தோம். ஒருநாள் நாங்கள் அவ்வாறு ஓய்வெடுக்கையில்,''ஆபத்து! ஆபத்து! காப்பாற்றுங்கள்!'' என்று கதறிக்கொண்டே இரண்டு ஆட்கள் எங்களை நோக்கி ஓடி வந்தனர். அந்த இருவரையும் நாங்கள் தெப்பத்தில் ஏற்றிக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தோம்.

முதல் ஆளுக்குச் சுமார் எழுபது வயது இருக்கும். வேடிக்கையான தோற்றம். வழுக்கைத் தலை. வெள்ளை வெளேரென்று நரைத்து நீண்டிருந்த தாடி, மீசை. இரண்டாவது ஆளுக்கு முப்பது வயதிருக்கும். இருவரும் ஆளுக்கு ஒரு பெட்டியைத் தூக்கிக் கொண்டு வந்திருந்தனர்.

''பிரெஞ்சு அரசரான பதினாறும் லூயியின் வம்சத்தில் வந்தவன் நான். இப்போது மிகவும் கஷ்ட நிலையில் இருக்கிறேன். என்னை 'அரசன்'என்றே கூப்பிட்டு, மரியாதை கொடுக்க வேண்டும்'' என்று முதல் ஆள் சொன்னான்.

''நான் பிரிட்ஜ் வாட்டர் என்ற பிரபு பரம்பரையில் வந்தவன். இன்று மிகவும் அல்லல்படுகிறேன். ஒரு பிரபுவுக்குரிய மரியாதையோடு என்னை நடத்துங்கள்'' என்றான் இரண்டாவது ஆள்.

நாடகம் போடுகிறேன் என்று சொல்லி ஊர் மக்களை ஏமாற்றி இருவரும் பணத்தைப் பறித்திருக்கின்றனர். பின்பு ஊரார் கோபத்துக்குப் பயந்து ஓடி வந்திருக்கின்றனர் என்று அவர்கள் பேச்சிலிருந்து தெரிந்தது. 'அரசன்', 'பிரபு' — என்ற பேச்செல்லாம் வெறும் பொய் என்று புரிந்தது. இருந்தாலும், பயணத்தை அமைதியாகத் தொடருவதற்காக, அவர்களுடைய பேச்சை எல்லாம் அப்படியே ஏற்றுக்கொண்டோம்.

பெட்டியைத் திறந்து அவர்கள் நாடகப் பாத்திரங்களுக்குரிய ஆடைகளை அணிந்தனர். ஆளுக்கொரு மரக் கத்தியை எடுத்து அவர்கள் ஓடும் தெப்பத்திலேயே ஒத்திகை பார்த்தனர். எனக்கும், ஜிம்முக்கும் அது வேடிக்கையாக இருந்தது.



அடுத்த ஊரை அடைந்தோம். அரசனும், பிரபுவும் வழக்கம்போல ''ரோமியோ ஜூலியட்'', ''ரிச்சர்டு அரசனின் கத்திச் சண்டை'' —முதலிய நாடகங்களை நடத்தப் போவதாகப் பிரமாதமாக விளம்பரம் செய்தனர். முன்னதாகவே பண வசூல் செய்தனர். ஆனல், நாடகம் மட்ட ரகமாக இருந்தது. கோபமடைந்த மக்கள் அவர்களைப் பிடித்துத் தண்டனை அளிப்பதற்குள், அவர்கள் தப்பித்துக் கொண்டனர். எங்களுடைய பயணம் தொடர்ந்தது.

அடுத்த ஊரில் அந்த நயவஞ்சகக் காரர்கள் 'தங்கள் கைவரிசையை வேறுவிதமாகக் காட்டினர். மூன்று அப்பாவிப் பெண்களை ஏமாற்றி அவர்களுடைய பணத்தைப் பறிக்க முயன்றனர். நான் தந்திரமாக அவர்களை அந்த ஊராரிடம் சிக்க வைத்தேன். பிறகு ஜிம்மும், நானும் சந்தோஷமாகத் தெப்பத்தில் ஏறி மிதந்து போனேம். எங்கள் சந்தோஷம் நீடிக்கவில்லை. அந்த வஞ்சகர்கள் இருவரும் தப்பித்துக்கொண்டு, ஒரு படகில் ஏறி, எங்களைத் தொடர்ந்தனர். வேறு வழியில்லாமல் நாங்கள் நால்வரும் ஒன்று கூடிப் பயணத்தைத் தொடர்ந்தோம்.

ஆற்றின் போக்கோடு நாங்கள் தெற்கு நோக்கிப் போனேம். அருகில் இருந்த ஊர்களைத் தவிர்த்து விட்டு, நீண்ட தூரம் போனேம். பைக்ஸ்வில் என்ற ஊர் வந்தது. ஜிம்மை வழக்கம் போலப் புதர்களில் ஒளிந்து கொள்ளச் சொன்னேன். பிறகு ஊருக்குள் போனேன். ஒரு தெருமுனையில், 'அரசனும்', 'பிரபுவும்' நன்ருகக் குடித்து விட்டுச் சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். அவர்களிடமிருந்து நழுவிச் செல்ல அதுதான் ஒரு நல்ல சந்தர்ப்பமாகத் தோன்றியது. உடனே ஆற்றங்கரைக்கு விரைந்தேன்.

ஜிம்மைக் கூவி அழைத்தேன். பதில் வரவில்லை. புதர்களில் தேடினேன். அவனைக் காணவில்லை. ஆற்றின் படிக்கட்டிலேயே உட்கார்ந்துகொண்டு அழுதேன்.'

மனத்தைத் தேற்றிக் கொண்டு மறுபடியும் ஊருக்குள் சென்றேன். ஒரு சிறுவனிடம் ஜிம்மைப் பற்றி விசாரித்தேன். அவன் ஒரு திடுக்கிடும் செய்தியைச் சொன்னுன். வழுக்கைத் தலையும், வெள்ளைத் தாடியும் உள்ள ஒரு மனிதன் ஒரு நீக்ரோச் சிறுவனை நாற்பது டாலருக்கு அந்த ஊர் ஆளிடம் விற்று விட்டதாகக் கூறினுன். மேலும் விசாரித்ததில் மிஸ்டர் பெல்ப்ஸ் என்பவரின் பண்ணையில் ஜிம் ஓர் அடிமையாக உள்ளதாகத் தகவல் கிடைத்தது.

திரும்பவும் எங்கள் தெப்பத்தின் அருகில் போய் உட்கார்ந்து கொண்டு யோசித்தேன். ''ஜிம்மும், நானும் அந்த அயோக்கியர்களுக்கு எவ்வளவு உதவிகள் செய்தோம்! அவற்றையெல்லாம் மறந்துவிட்டு அவர்கள், கேவலம், நாற்பது டாலருக்காக ஜிம்மை விற்று விட்டார்களே!'' என்று எண்ணி மிகவும் வருந்தினேன். அந்த அயோக்கியர்களின் உறவை முறித்துக்கொண்டு, ஜிம்மைத் தேடத் திட்டமிட்டேன்.

ஜிம் எனக்கு எவ்வளவு நெருங்கிய நண்பன்! அந்த ஆற்றுப் பயணத்தின் போது நாங்கள் ஒன்ருகக் கழித்த இனிய நாட்களை எண்ணி எண்ணி மகிழ்ந்தேன். ஜிம்முக்குத்தான் என்னிடம் எத்தனை அன்பு! அவன் எனக்குச் செய்த உதவிகள்தான் எத்தனை! அவன் எவ்வளவு பொறுமையாகத் தெப்பத்தை ஓட்டிக்கொண்டு வந்தான்! இரவெல்லாம் கண் விழித்து அவன் எனக்காகக் காவல் இருந்தான்.

ஓடிப்போன அடிமையைப் பிடித்து அவனுடைய எஜமானனிடம் சேர்ப்பிப்பதுதான் நியாயம். இருந்தாலும் ஜிம்மைப் போன்ற ஓர் உயர்ந்த நண்பனின் சுதந்திரத்தைக் குலைக்க நான் விரும்பவில்லை. அவனுக்கு நான் ஒரு நல்ல நண்பன் என்று நிரூபிக்க விரும்பினேன். ஆகவே, ஜிம்மைப் புதிய எஜமானனிடமிருந்து கள்ளத்

என்ன சொல்வது!

ஆசிரியர்: தினமும் லேட்டாக வந்து ஏதாவது ''சாக்கு'' சொல்லுவியே, இன்னிக்கு என்ன சொல்லப் போறே...

மாணவன்: சாக்கு வாங்கப் போனேன் சார்!...

—நெ. இராமன்.



தனமாகக் கடத்தியாவது விடுவிக்க நிச்சயித்தேன்.

ஜிம்மை விலைக்கு வாங்கிய மிஸ்டர் பெல்ப்ஸ் என்பவரின் பண்ணைக்கு விரைந்தேன். அங்கே வாசலில் யாரையோ எதிர்பார்த்து நின்று கொண்டிருந்த பெல்ப்சின் மனைவியார் என்னை வரவேற்று, அன்போடு அணைத்து உள்ளே அழைத்துச் சென்றார். குழந்தைகளுக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார்.

அவருடைய மருமான் அன்று வருவதாக இருந்தது. ஆகவே, நான்தான் அந்த மருமான் என்று தவறாக நினைத்து விட்டார்! நான் அவர்களுடைய கேள்விகளுக்கெல்லாம் 'அம்மா' என்று மரியாதையாக விளித்துப் பதில் சொன்னேன்.

''என்னடா 'அம்மா'ன்னு சொல்லி என்னைக் கூப்பிடறே! சாலி அத்தைன்னு சொல்லு!'' என்றார்.

''சரி, சாலி அத்தை!'' என்றேன்.

எனக்குத் தர்ம சங்கடமான நிலைமை. ''சாலி அத்தை என்னுடைய உண்மையான நிலையைக் கண்டுபிடித்து விடக் கூடாதே!'' என்று உள்ளூரக் கவலை!

அதற்குள் வெளியே போயிருந்த மிஸ்டர் பெல்ப்ஸ் வீட்டுக்குள் நுழைந்தார்.

''யார் வந்திருக்கிறான் என்று பாருங்கள்! இதோ, டாம் சாயர்!'' என்று சொல்லி அவரிடம் என்னை அறிமுகம் செய்தார். அதைக் கேட்ட பிறகுதான் எனக்கு உயிர் வந்தது.

''சில நாட்களுக்கு டாம் சாயராக நடிப்போமே!'' என்ற ஆசை என் மனத்தில் எழுந்தது. டாமுடைய சின்னம்மா பாலியைப் பற்றியும், உடன் பிறப்புக்களான 'சித்', 'மேரி' ஆகியோரைப் பற்றியும் மனம்போன படி விஷயங்களை அளந்தேன்.

ஒருநாள் திடுதிப்பென்று அசல் டாம் சாயரே அங்கு வந்து விட்டான்! அத்தையிடம் அவனை என் தம்பி 'சித்' என்று அறிமுகப்படுத்தினேன். பிறகு டாமைத் தனியாகச் சந்தித்து ஜிம்மின் கதையையும், நான் டாம் சாயராக நடிக்க நேர்ந்த சூழ்நிலையையும் விளக்கினேன். உடனே ஜிம்மை விடுவிக்க டாமும் உதவுவதாகக் கூறினான்.


எனக்கு அது ஆச்சரியமாக இருந்தது. டாம் ஓர் உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவன். உயர் குடியைச் சேர்ந்தவர்கள் ஓடிப் போன நீக்ரோ அடிமைகளுக்கு ஒருபோதும் உதவ மாட்டார்கள். பிறர் அவ்வாறு உதவி செய்வதையும் அவர்கள் அவமானமாகக் கருதினர்.

''டாம்! நீ புரிந்து கொண்டுதான் பேசுகிறாயா?'' என்று கேட்டேன்.

''புரிகிறது. முழு மனத்தோடு உங்களுக்கு உதவி செய்வேன்'', என்றான் டாம் தீர்மானமாக.

''வீட்டுக்கு வெளியில் உள்ள ஒரு குடிசையில் ஜிம்மைச் சிறை வைத்திருக்கின்றனர். நன்றாக இருட்டிய பிறகு பூட்டை உடைத்து நாம் ஜிம்மை விடுவிக்கலாம்!'' என்று ஆலோசனை சொன்னேன். ''நீ சொல்வது மிகமிக எளிதான, சுவாரஸ்யமில்லாத ஒரு திட்டம்... நாம் ஜிம்மை விடுவிக்கும் முயற்சி நாவல்களில் வருவது போலத் திகில் நிறைந்ததாகவும், உற்சாகமாகவும் இருக்க வேண்டாமா?'' என்று டாம் பதில் சொன்னான். அவ்வாறே டாம் ஒரு திட்டம் தீட்டினான். அதை நிறைவேற்ற அத்தையிடம் ஆயிரம் பொய்யைச் சொல்ல வேண்டியிருந்தது.

மூவருக்கும் முக்கிய நகரம்



பாலஸ்தீன நாட்டின் தலைநகரம் எருசலேம் (Jerusalem). இந்த நகரம் யூதர்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் ஆகிய மூன்று மதத்தினருக்கும் முக்கிய புண்ணிய நகரமாக விளங்குகிறது

பண்டைக் காலத்தில் தங்கள் கோயில்களை யூதர்கள் இங்கே கட்டியதால், இதைப் புண்ணிய பூமி என்கிறார்கள், யூதர்கள்.

யேசுநாதரைச் சிலுவையில் அறைந்த இடம் இதுதான் என்பதால் இதைப் புண்ணியபூமி என்கிறார்கள் கிறிஸ்தவர்கள்.

மக்கா, மதினாவுக்கு அடுத்த இடமாக இதைக் கருதுவதால், இதைப் புண்ணிய பூமி என்கிறார்கள் முஸ்லிம்கள்.

ஜிம்மை விடுவிக்க முதலில் ஒரு நாள் குறிப்பிட்டோம். பிறகு தோட்டத்திலிருந்து ஜிம்மின் குடிசைக்கு ஒரு ரகசிய சுரங்கப் பாதை தோண்டினோம். அத்தைக்கும், பெல்ப்ஸ் மாமாவுக்கும் பல மிரட்டல் கடிதங்கள் எழுதி ''உங்கள் நண்பன்'' என்று கையெழுத்திட்டு அனுப்பி வைத்தோம். ஆற்றங்கரையில் ஒரு தெப்பத்தை மறைத்து வைத்து அதில் எங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களைச் சேமித்தோம்.

குறிப்பிட்ட இரவில் மிஸ்டர் பெல்ப்சின் இல்லத்தில் அவருடைய நண்பர்கள் பலர் கூடினர். கையில் துப்பாக்கியை வைத்துக் கொண்டு அவர்கள் வீட்டைச் சுற்றி வந்தனர். எந்தவித ஆபத்தையும் சமாளிக்கத் தயாராக இருந்தனர்.

ஜிம்மை அந்த ரகசியப் பாதையின் வழியாக டாமும், நானும் வெளியே அழைத்து வந்தோம். முள்வேலியைத் தாண்டும் போது டாமின் கால் சட்டை முள்ளில் மாட்டிக் கொண்டு 'டர்' என்று கிழிந்தது. இரவின் அமைதியைக் கிழித்துக் கொண்டு அந்தச் சப்தம் எழுந்ததால், காவல் ஆட்கள் உஷாராயினர். ''யாரது? பதில் சொல்லுங்கள்! இல்லாவிட்டால் சுட்டுவிடுவோம்!'' என்று அவர்கள் அதட்டினர்.

நாங்கள் மூவரும் வாயைத் திறக்கவில்லை. ''டுமீல்! டுமீல்! டுமீல்!'' —துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்தன. நாங்கள் காற்றாய்ப் பறந்தோம். இருட்டில் அவர்கள் எங்களைத் துரத்திக் கொண்டு வந்தனர். அவர்களுடைய துப்பாக்கிகளிலிருந்து வெளி வந்த குண்டுகள் 'விர், விர்' என்று எங்களைச் சுற்றி நாலா புறங்களிலும் பறந்தன!

''அவர்கள் ஆற்றுப் பக்கம் ஓடுகின்றனர்! பிடியுங்கள்! வேட்டை நாய்களை ஏவுங்கள்!'' என்று ஒரு குரல் ஒலித்தது. நாங்கள் ஒரு புதரில் புகுந்து மறைந்து கொண்டோம். அவர்கள் நேரான பாதையில் ஓடிச் சென்றனர். நர்ங்கள் குறுக்கு வழியாகச் சென்று ஆற்றை அடைந்தோம். அங்கு தயாராக வைக்கப்பட்டிருந்த தெப்பத்தில் ஏறிக்கொண்டு அருகிலிருந்த தீவுக்குப் பயணமானோம்.



''ஜிம்! மறுபடியும் நீ சுதந்திர மனிதன்!'' என்று சொன்னேன்.

''உனக்கும், டாமுக்கும் எப்படி நன்றி சொல்லுவதென்றே தெரியவில்லை. துணிச்சலோடு செயலாற்றியிருக்கிறீர்கள்!'' என்றான் ஜிம்.

''எனக்கு இரட்டிப்பு சந்தோஷம்! ஏனென்றால், என் காலில் ஒரு குண்டு பாய்ந்திருக்கிறது'', - பெருமையோடு டாம் பேசினான்.

டாமின் கால்களிலிருந்து இரத்தம் கசிவதையும், அது அவனுக்கு வேதனை அளிப்பதையும் கண்டு நானும், ஜிம்மும் திகைத்தோம்.

''ஊரார் ஜிம்மைத் துரத்துகின்றனர். நேரத்தை வீணடிக்காமல் சீக்கிரம் தெப்பத்தைச் செலுத்துங்கள்!'' என்று டாம் அவசரப்படுத்தினான். ''டாமுக்கு மருத்துவ உதவி அளிக்கும் வரையில் இங்கிருந்து நகர மாட்டேன். எவ்வளவு நேரமானாலும் பரவாயில்லை'', என்று ஜிம் உறுதியாகச் சொன்னான்.

டாமுக்குக் காவலாக ஜிம்மை வைத்துவிட்டு நான் ஒரு மருத்துவரை அழைத்து வந்தேன். அவர் சிகிச்சை அளிக்கையில் ஜிம் கூடவே இருந்து எல்லா உதவிகளையும் செய்தான். அதற்குள் ஊரார் எங்களைத் தேடிக் கண்டுபிடித்தனர். ஜிம் ஓடவில்லை. அமைதியாக அவர்களைத் தொடர்ந்தான். அவனை மறுபடியும் அத்தை வீட்டில் சிறை வைத்தனர்.

டாமினால் நடக்க முடியவில்லை. அவனைத் தூக்கிச் சென்றனர். அவனைச் 'சித்' என்று எண்ணிக் கொண்டிருந்த அத்தை பதறிப் போனாள். சில நாட்களில் ''சித்'' குணமடைந்தான். அவன் ஓர் உண்மையை வெளியிட்டான். ஜிம்மின் எஜமானியான வாட்சன் அம்மையார் சமீபத்தில் இறந்து விட்டதாகவும், அவர் இறக்கும் முன் ஜிம்முக்கு விடுதலை அளித்துப் பத்திரம் எழுதி வைத்துள்ளதாகவும் தெரிவித்தான்.

ஒருநாள் திடீரென்று சாலி அத்தை வீட்டுக்கு டாமின் சின்னம்மாவான பாலி அம்மையார் வந்தார். அதனால் எங்கள் குழப்பங்கள் அதிகரித்தன. அவர்விரைவில் எங்களுடைய உண்மைத் தன்மையை எல்லோருக்கும் எடுத்துச் சொல்லி நிலைமையைச் சீர்படுத்தினார்.

ஜிம் விடுதலை ஆனான். ஜிம்மின் நல்ல குணத்திற்காக எல்லோரும் அவனைப் பாராட்டிப் பரிசுகள் அளித்தனர். நாங்கள் எதற்காகப் பெயர்களை மாற்றிக் கொண்டு ஆள் மாறாட்டம் செய்தோம் என்று எடுத்துரைத்தோம். ''ஏற்கெனவே விடுதலை ஆன ஒருவனை விடுதலை செய்வதற்காகவே இவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறீர்கள்!'' என்று பாலிச் சின்னம்மா கேலி செய்தார்.

என்னுடைய பணம் நீதிபதி தாட்சரிடம் பத்திரமாக உள்ளதாக டாம் கூறினான்.

''என்னுடைய அப்பாவுக்குத் தெரிந்தால் அதைப் பெறுவதற்காக மறுபடியும் அவர் வாதாடுவார்!'' என்றேன்.

''உன் அப்பாவின் உயிரற்ற உடலை ஒரு படகில் கண்டேன். அது ஆற்றோடு மிதந்து போய்க் கொண்டிருந்தது'' என்றான் ஜிம்.


சாலி அத்தை என் மீது அனுதாபப்பட்டார். என்னைத் தத்து எடுத்துக்கொண்டு நல்ல பிள்ளையாக வளர்க்க விரும்பினார். வாட்சன் அம்மையார் வீட்டில் ஏற்கெனவே நான் அனுபவித்த ஒழுங்குகளும், கண்டிப்புகளும் நினைவுக்கு வரவே, நான் அந்த யோசனைக்கு இணங்கவில்லை. டாம் ஊருக்குப் புறப்படும் போது நானும் அவனுடன் புறப்பட்டேன். காலிலிருந்து எடுத்த குண்டை ஒரு சங்கிலியில் கோத்துப் பெருமையாகக் கழுத்தில் அணிந்திருக்கிறான் டாம். அதைப் பார்க்கும் போது எனக்கும் பெருமையாக இருக்கிறது.

MARK TWAIN எழுதிய THE ADVENTURES OF HUCKLE BERRY FINN என்னும் ஆங்கிலக் கதையின் சுருக்கமே இது.

பொய்க்கனி!

ஒரு மரத்திலுள்ள பூவின் காம்பை நாம் பழம் என்கிறோம். பழத்தைக் கொட்டை என்கிறோம். அது எந்த மரம்?

முந்திரி மரம்தான்! முந்திரிக்கொட்டை என்கிறோமே அதுதான் இந்த மரத்தின் உண்மையான பழம். முந்திரிப் பழம் என்று நாம் சொல்வது, பூவின் காம்புதான். அது தடித்து, சதைப்பற்றுடன் இருக்கிறது. இதன் சாறு இனிப்பும் கரகரப்பும் உள்ளதாக இருக்கிறது. இதைப் 'பொய்க்கனி' என்கிறார்கள்.



பிருந்தாவனக் கதையரங்கம்



முருகன் நல்லவன்

முருகன் ஏழைச் சிறுவன். அனாதை. அவன் சோர்ந்த கண்களுடன் அந்தப் பெரிய பச்சைப் பங்களாவின் முன் வந்து நின்றான். தாய், தந்தையற்ற முருகனை அவன் மாமா தான் வளர்த்தார். இப்போது மாமாவும் ரயில் விபத்தில் இறந்து விட்டார். முருகன் சிறுவனாக இருந்தாலும் வேலை செய்து பிழைக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் பெரிய மனிதர்களின் வீட்டு வாசலில் தவம் கிடந்தான். கெஞ்சினான். அழுது, அழுது தன் குறையைச் சொன்னான். பரிதாபக் குரலில் ஏதாவது வேலை கொடுக்கும்படி கேட்டுப் பார்த்தான். யாரும் அவனுக்கு வேலை கொடுக்க முன் வரவில்லை. கிடைத்ததெல்லாம் அடியும் திட்டும் தான்!

இப்போதும் அவன் அந்தப் பங்களா வாசலில் நிற்பதுவும் வேலைக்காகத் தான். அங்கே செடிகளுக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்த தோட்டக்காரன் முத்து, முருகன் தயங்கி நிற்பதைப் பார்த்துவிட்டு ஓடிவந்தான். ''டேய், திருட்டுப் பயலே, ஏண்டா, இங்கே நின்னுக்கிட்டு முழிக்கிறே? ஓடிப் போடா?'' என்று கத்தியபடி முருகனை அடிக்கக் கையை ஓங்கினான்.

''ஐயா, ஐயா! அடிக்காதீங்க ஐயா. நான் ஒரு அனாதை. சாப்பிட்டு இரண்டு நாளாகிறது. பிச்சை எடுக்க வெட்கமா இருக்கு. இந்த வீட்டிலேயே ஏதாவது வேலை வாங்கிக் கொடுத்தா, நல்லா உழைப்பேன், ஐயா'' என்று கண்ணீருடன் கெஞ்சினான்.

''வேலையில்லை போடா. மூஞ்சியைப் பார்த்தால் திருட்டுப் பயல் மாதிரி இருக்கே. போடா மரியாதையா!'' என்றான் தோட்டக்காரன்;

அதற்குள் அந்த வீட்டுப் பெரியவரே அங்கு வந்தார். ''என்னடா இங்கே ரகளை?'' என்று கர்ஜித்தார். தோட்டக்கார முத்து விஷயத்தைச் சொன்னான்.

பெரியவர் கோபம் மேலிட்டவராய் ''டேய் முத்து இந்த மாதிரித் திருட்டுப் பசங்களை நம்பக் கூடாது. அடித்து விரட்டுடா'' என்று கூறி விட்டு உள்ளே சென்று விட்டார்.

வேலைக்காரன் முருகன் முதுகில் இரண்டு அடி கொடுத்து விரட்டினான். முருகன் கண்ணீருடன் தள்ளாடியபடி ஒரு பாழும் மண்டபத்துத் தூண் ஓரத்தில் வந்து படுத்தான்.

திடீரென்று கண் விழித்தபோது ஒரே இருட்டாக இருந்தது. பயந்த முருகன் கண்களை மூடிக் கொண்டான். யாரோ மெல்லிய குரலில் பேசும் சப்தம் கேட்டது. முருகன் ஒன்றும் புரியாமல் பயத்துடன் ஒடுங்கிப் படுத்தபடி பேச்சை உற்றுக் கேட்டான். அவர்கள் பேச்சிலிருந்தே அவர்கள் பெரிய திருடர்கள் என்பதைப் புரிந்து கொண்டான் முருகன்.

''டேய் மாரி, நாளைக்கு எங்க எஜமானர் குடும்பத்தோடு ஊருக்குப் போறார். நீயும், சோமுவும் வந்து என்னைக் கட்டிப் போட்டுவிட்டு பீரோவில் இருக்கிற நகைகளையும் பணத்தை

யும் எடுத்துக்கிட்டு ஓடிடுங்க. இது தான் நல்ல சமயம்.''

இந்தக் குரலைக் கேட்டு முருகன் திடுக்கிட்டான். 'எங்கேயோ கேட்ட குரலாக இருக்கிறதே! சமீபத்தில், ஆ! இன்றுதான். ஆம். இது தோட்டக்கார முத்துவின் குரல்தான்! சந்தேகமே இல்லை. அந்தத் தடித்த முரட்டுக் குரலை முருகன் மறக்கவில்லை. முருகன் தன் எஜமானருக்குத் துரோகம் நினைக்கும் முத்துவை நினைத்துத் துடிதுடித்தான். மேலும் அவர்கள் பேச்சைக் கவனித்தான்.

''சபாஷ் முத்து! அதுதான் நல்லது. நீயும் நல்லா நடி. அப்போதுதான் உன் மேல் சந்தேகம் வராது. அப்புறம் மெதுவாக வந்து உன் பங்கை வாங்கிக் கொண்டு போய் விடு'' என்றான் ஒருவன். பிறகு மூவரும் எழுந்து சென்று விட்டனர்.

மறுநாள் விடிந்த உடனே தன் பசியையும், சோர்வையும் மறந்தவனாக போலீஸ் ஸ்டேஷனுக்கு விரைந்தான், முருகன். இன்ஸ்பெக்டரிடம் எல்லா விவரங்களையும் கூறிவிட்டு மயங்கி விழுந்து விட்டான்.

அவன் கண் விழித்தபோது அந்தப் பச்சைப் பங்களாவில் இருப்பதை உணர்ந்தான். அவன் எதிரே அந்தப் பெரியவர் அமர்ந்திருந்தார். அருகே இருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர், ''ஸார்! நீங்க இந்த முருகனுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். இவனால்தான் உங்க பணமும் விலை மதிப்புள்ள நகைகளும் தப்பின. முருகன் வந்து சொன்ன தகவல்களை வைத்தே திருடர்களையும் வசமாகப் பிடிக்க முடிந்தது'' என்றார்.

பெரியவர் நன்றியுடன் முருகன் கைகளைப் பற்றி, ''தம்பி, நேற்று உன்னை நான் அடித்து விரட்டச் சொன்னேன். ஆனாலும், நீ அதைப் பெரிதாக எண்ணாமல், எனக்கு உதவி செய்து விட்டாய். அந்த நம்பிக்கைத் துரோகி முத்து இப்படிச் செய்வானென்று நான் நினைக்கவே இல்லை. இனி, நீ வேலை தேடி அலைய வேண்டாம். இனி நீதான் இந்த வீட்டுத் தோட்டக்காரன். நீ எந்தக் குறையுமில்லாமல் இங்கேயே இருக்கலாம்'' என்று அன்புடன் கூறினார்.

''நன்றி ஐயா, என் மாமா, அம்மா சொல்லிக் கொடுத்தபடி ஒருபோதும் திருட மாட்டேன்; பொய் சொல்ல மாட்டேன்; பிச்சை எடுக்க மாட்டேன்; உண்மையாக உழைப்பேன்'' என்று நன்றியுடன் கூறினான் முருகன்.

—எஸ். ஜெயஸ்ரீ (1254), திருச்சி-14.

நல்லதே செய்யும் நாய்க்குட்டி

அன்று சோமு மகிழ்ச்சியாக இருந்தான். ஏனென்றால், அவனுக்கு அன்று ஒரு நாய்க்குட்டி கிடைத்தது. அது மிகவும் அழகாக இருந்தமையால் அன்று சோமு மிகவும் சந்தோஷமாக இருந்தான். அதன் கழுத்தில் அவன் மாமா போன மாதம் சிங்கப்பூரிலிருந்து அனுப்பிய ஓர் அழகிய சங்கிலியைப் போட்டு அழகு பார்த்தான். ஆனால் அவனுடைய மகிழ்ச்சி இரவு 7.30 வரைதான் நீடித்தது.



அவன் நாய்க் குட்டியை வைத்துக் கொண்டு கொஞ்சிக் கொண்டிருந்தான். அப்போது அவனது தந்தை ராஜாராம் அலுவலகத்திலிருந்து வீட்டிற்குத் திரும்பி வந்தார். அவர், அந்த நாய்க் குட்டியைப் பார்த்து விடவே சோமு நாய்க்குட்டியை மறைக்க முயன்றான். இருந்த போதிலும் அவன் தந்தை ராஜாராம் நாய்க் குட்டியைப் பிடுங்கித் தூர எறிந்தார். பாவம், நாய்க்குட்டி, திரும்பவும் சோமுவிடம் வந்தது. அப்போதும் ராஜாராம் தம் கைத்தடியால் அடிக்க முயன்றார். அப்போது சோமு ஓடிவந்து தடுத்து, ''அப்பா, இதை அடிக்காதீங்க, இது வாயில்லா ஜீவன். நானே எடுத்துக் கொண்டு போய் வெளியே விட்டு விடுகிறேன்'' என்று அழாத குறையாகக் கூறிவிட்டு வெளியே சென்றான். அன்று முழுவதும் வருத்தமுடன் இருந்தான். தனக்கு ஒரு தங்கக் கட்டி கிடைத்து, அது பறி போய் விட்டதாக எண்ணி வருத்தப்பட்டான்.

அன்று முழுவதும் அவன் உண்ணவே இல்லை. நாட்கள் ஓடின.

ஒருநாள் சோமு தினசரிப் பேப்பரை வாங்கிப் பார்த்தபோது சந்தோஷத்துடன் துள்ளிக் குதித்தான். உடனே தன் தந்தையிடம் சென்று, ''அப்பா, இந்தப் பேப்பரைப்பாருங்க'' என்று சந்தோஷத்துடன் கூறினான். ராஜாராம் பேப்பரைப் பார்த்ததும் ''அடேடே, நாம் விரட்டிய நாய்க் குட்டியேதான்! கழுத்தில் நீ போட்ட செயின்கூட அப்படியே இருக்குதே! இப்போது இது திருடர்களைப் பிடித்துக் கொடுத்திருக்கிறது. நாய்க்குச் சொந்தக்காரருக்கு ரூ. 500/- தருவதாக அறிவித்திருக்கிறார்களே!'' என்று வியப்புடன் கூறினார்.

அப்போது அவருக்கு ஒரு கெட்ட எண்ணம் தோன்றியது. போலீஸாரிடம் சென்று அந்த நாய் தாங்கள் வளர்க்கிற நாய்தான் என்றும், அது ஒரு நாள் ஓடிவிட்டதாகவும் கூறி நாயையும், ரூபாயையும் வாங்கிக்கொண்டு, வழியில் நாயை விரட்டி விடலாம் என்று நினைத்தார். உடனே சோமுவை அழைத்துக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றார். அங்கு சென்றவுடனேயே அந்த நாய் சோமுவை அடையாளம் தெரிந்து கொண்டு ஓடி வந்தது. அந்த நாயைக் கண்டவுடன் சோமு சந்தோஷமடைந்தான். அதனுடன் விளையாடிக் கொண்டிருந்தான். அதற்குள் அவனது தந்தை சப் — இன்ஸ்பெக்டரிடம் சில விவரங்களைக் கூறி நாயையும், பணத்தையும் பெற்றுக் கொண்டு சோமுவுடன் காரில் ஏறி வந்தார். பாதி வழி வந்தவுடன் நாயைச் சாலையில் எறிந்து விட்டு, காரை ஓட்டிக் கொண்டு வந்து விட்டார். அவரது செயலைக் கண்ட சோமு, ''அப்பா! அப்பா! இது அநியாயம் அப்பா'' என்று அலறினான். ராஜாராம் அவனை மிரட்டி அடக்கி விட்டார்.

நாட்கள் உருண்டோடின. அன்று சாப்பிடுவதற்காக இலை பறிப்பதற்குத் தோட்டத்திற்குச் சென்றார், ராஜாராம். அங்கு அவர் இலையைப் பறித்துக் கொண்டிருந்த போது ஒரு பாம்பு வந்துவிட்டது! இவர் அந்தப் பாம்பைப் பார்க்காமல், இலையைப் பறித்துக் கொண்டிருந்தார். பாம்பு அருகில் வந்தும் விட்டது! அந்தச் சமயத்தில் எங்கிருந்தோ இவரால் அநாதையாக விடப்பட்ட அந்த நாய் ஓடோடி வந்து, அந்தப் பாம்பை வாயால் கவ்வித் தூர எறிந்தது. அப்போதுதான் எவ்வளவு பெரிய ஆபத்திலிருந்து தன்னை அந்த நாய் காப்பாற்றியிருக்கிறது என்பதை உணர்ந்தார். உடனே அதே நாயை எந்தக் கையால் துரத்தினாரோ அதே கையால் தழுவிக் கொண்டார். அன்றிலிருந்து அந்த அன்பு ஜீவனை அன்போடு வளர்த்தார். சோமுவும், தன் பறிபோன தங்கக்கட்டி திரும்பக் கிடைத்ததாக எண்ணி ஆனந்தமடைந்தான்.

—வி. சதீஷ்குமார் (4727), செங்கை—2.

கர்வம் ஒடுங்கியது!

குமரன் நல்ல பழக்கவழக்கத்தோடு அடக்கமும் உள்ளவன். அவன் எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருப்பான். அவன் நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்தவன். அவன் தந்தை ஒரு தொழிற்சாலையில் ஆரம்ப முதல் வேலை செய்து வந்தார். குமரன் தன் ஊரில் பள்ளி இல்லாததால், அடுத்த ஊரில் உள்ள பள்ளியில் எட்டாம் வகுப்பு படித்து வந்தான். குமரன் படிப்பிலும் சிறந்து விளங்கினான். அவன் விடுமுறை நாட்களில் தந்தையின் தொழிற்சாலைக்குச் செல்வது வழக்கம்.

நாட்கள் கடந்தன. அத்தொழிற்சாலையின் கட்டிட வேலை முடிந்து, இயந்திர வேலை தொடங்கியது. அப்போது ராஜேஷ் என்பவர் அங்கு மானேஜராக நியமிக்கப்பட்டார். அவர்



படித்தவர். ஆனாலும் பண்பில்லாதவர். குமரனின் தந்தை முதல் அனைவரும் அவரது கண்காணிப்பில் வேலை செய்தனர். எனவே தன்னைத் தட்டிக் கேட்க இந்தக் கம்பெனியில் யாருமே இல்லை என்று அவர் கர்வம் கொண்டார்.

யாராவது அவரிடம் வந்து ஏதாவது கேட்டால், ''இப்ப என்ன வந்தது? போய்யா, போய் வேலையைப் பார்'' என்று மிரட்டுவார். அங்கு எல்லோரும் சரியாக வேலை செய்தாலும், ஒவ்வொருவரையும் மட்டம் தட்டியே பேசுவார்; அதிலே அவருக்கு ஒரு மகிழ்ச்சி!

''ஏன், நீயெல்லாம் இங்கு வந்து தொலைஞ்சே'' என்று கூறுவார். யாராவது எதிர்த்துக் கேட்டால் அவர் உடனே, ''நான் நினைத்தால் உன்னை இந்த வேலையை விட்டே நிறுத்தி விடுவேன்'' என்று மிரட்டுவார். சம்பளம் கொடுக்கும்போதும் அவர் மற்றவர்களை நோக்கி, ''நீங்கள் செய்த வேலைக்குச் சம்பளம் ஒரு கேடா?'' என இட்டுவார். இதையெல்லாம் அவர்கள் காதில் போட்டுக் கொள்வதில்லை.

குமரனுக்குத் தேர்வு முடிந்தது. கோடை விடுமுறையில் அவன் வீட்டில் இருந்ததால், அவனுடைய தாய், அவன் அப்பாவுக்குச் சாப்பாடு எடுத்துக் கொண்டு செல்லும்படி கூறினாள். அவன் சாப்பாட்டை எடுத்துக்கொண்டு வெயிலில் வேகமாக நடந்தான். தொழிற்சாலையை அடைந்ததும் வழக்கமாகச் சாப்பாடு வைக்கும் இடத்தில் சாப்பாட்டை வைத்துவிட்டுத் திரும்பினான். அப்போது அவனது காதை ஒரு கரம் பிடித்தது. அது வேறு யாருமல்ல. ராஜேஷ்தான்!

''டேய், யாருக்குடா சாப்பாடு?'' என்று கேட்டார்.

''அப்பாவுக்கு'' என்றான் குமரன்.

''ஸ்கூலுக்குப் போகலையா?''

''தேர்வு முடிந்து விடுமுறையில் இருக்கிறேன்''

''தேர்வில் வெற்றி பெறுவாயா?''

''நிச்சயம் வெற்றி பெறுவேன்.''

''உன் முகத்தைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லையே!''

''வீண் பேச்சு எதற்கு? என்னைப் பொறுத்த வரையில் எனக்கு நம்பிக்கையிருக்கிறது.''

இதைக் கேட்டதும் ராஜேஷ் அவனை மடக்க நினைத்தார். உடனே அவர், ''அது போகட்டும். இந்தக் கம்பெனி என்ன, உங்க அப்பன் வீட்டுக் கம்பெனி என்று நினைத்தாய்? உங்க அப்பா இங்கு வேலை செய்தால் யாரையும் கேட்காமல் உள்ளே நுழைந்து விடுவதா?'' என்று கேட்டார்.

''இத்தனை நாட்களாக எனக்கு அப்படியொரு கட்டுப்பாடு இருப்பது தெரியாது. இனி, நான் வரலாமா என்று கேட்டுவிட்டே வருகிறேன்'' என்றான்.

''உன் பேச்சையும், முழியையும் பார்த்தால் திருட்டுப் பயலைப் போல் தெரிகிறது. எனக்கு உன் மீது நம்பிக்கை இல்லை'' என்று கூறி அவனைச் சோதனை போட்டுவிட்டு அனுப்பினார்.

குமரனுக்கு மிகவும் மன வருத்தமாக இருந்தது. அவரது கர்வத்தை அடக்க வேண்டும் என்று அவனுள் தோன்றியது. அதற்காக ஒரு திட்டத்தை அவன் தனக்குள் வகுத்தான். மறுநாளும் அவனே சாப்பாடு எடுத்துச் சென்றான். அவன் தொழிற்சாலையின் வாயிலில் நின்று கொண்டிருந்தான். அப்பொழுது முதலாளியுடன் பேசிக் கொண்டிருந்த ராஜேஷ் அவனைப் பார்த்து, ''என்ன வேண்டும்?'' என்று கேட்டார். ''உள்ளே வரலாமா?'' என்று கேட்டான் குமரன்.

''இத்தனை நாட்களாகக் கேட்டு விட்டுத்தான் உள்ளே வந்தாயா?''

''நேற்று நீங்கள் 'என்னிடம் கேட்டு விட்டுத்தான் உள்ளே வர வேண்டும்' என்று கூறினீர்கள்?''

அங்கு முதலாளி இருந்ததால் அவர் அதை மாற்ற, ''சரி, சரி, சாப்பாட்டை வைத்து விட்டுப் போ'' என்றார்.

''என் அப்பாவுக்கு அவசரமாக ஒரு கடிதம் வந்திருக்கிறது. அதை அவரிடம் சேர்க்க வேண்டும்'' என்றான் குமரன்.

''அப்படி என்ன அவசரம்? என்னிடம் அந்தக் கடிதத்தைக் கொடு. உன் அப்பாவிடம் கொடுக்கச் சொல்கிறேன்'' என்றார் ராஜேஷ்.

''இதை உங்களிடம் கொடுக்க முடியாது.''

''ஏன் முடியாது?''

''உங்கள் மீது எனக்கு நம்பிக்கை இல்லை. கிழித்துப் போட்டாலும் போட்டு விடுவீர்கள்.''

இவர்கள் உரையாடலைக் கேட்ட முதலாளி, ''என்ன, கம்பெனி மானேஜர் மீது உனக்கு நம்பிக்கையில்லையா!'' எனக் கேட்டார்.

''இவர் பிறரை நம்பினால்தானே மற்றவர்கள் இவரை நம்புவார்கள். நேற்று சாப்பாடு கொண்டு வந்த என்னைத் திருட்டுப்பயல் என்று திட்டி, சோதனை போட்டு அனுப்பினார். பெரிய பதவியில் இருக்கிறோம் என்ற கர்வத்தில் மற்றவர்களை இவர் மதிப்பதே இல்லை. இழிவாகப் பேசி வருகிறார்'' என்றான் குமரன்.

உடனே, கம்பெனி முதலாளி, ''தம்பி, நீ வருத்தப் படாதே'' என்று

கூறிவிட்டு ராஜேஜைப் பார்த்து, ''என்ன ராஜேஷ், இப்படியே எல்லோரும் உம்மைப் பற்றிப் புகார் கூறுகிறார்களே! தொழிலாளரை வீணுகப் பகைத்துக் கொள்ளக் கூடாது. வளர்ந்து வரும் நம் தொழிலை அது மிகவும் பாதித்து விடும். இனி மேலாவது...'' என்று முடிப்பதற்குள்,

''இனிமேல் யாரையும் இழிவாகப் பேச மாட்டேன். எல்லோரிடமும் நல்லபடியாக நடந்து கொள்வேன்'', என்று உறுதி கூறி, இதுவரை நடந்ததற்கு மன்னிப்பும் கோரினார்.

உடனே குமரனின் தந்தையை அங்கு அழைத்து வரச் சொன்னார். உடனே ராஜேஷ் ஓடிப் போய் அழைத்து வந்தார். ''தம்பி, அவசரமான கடிதம் என்றுயே, அதை உன் அப்பாவிடம் நீயே கொடுத்து விடு'' என்றார் முதலாளி.

உடனே குமரன், ''முதலாளி, மன்னித்துக் கொள்ளுங்கள். இது சாதாரணக் கடிதம்தான். மானேஜரின் கர்வத்தை அடக்கவே இப்படி ஒரு பொய் சொல்ல வேண்டிய தாயிற்று'' என்றான்.

''எப்படியோ உன் செயலால் மானேஜரின் மனம் மாறிவிட்டது. இனி, தொழிலாளரிடமும், உன்போல் இங்கு வருவோரிடமும் அவர் அன்பாக நடந்து கொள்வார்'' என்று கூறிக் குமரனை அவர் தட்டிக் கொடுத்தார்.

மானேஜர் ராஜேஷின் மனமாற்றத்தையும், அடக்க சுபாவத்தையும் கண்டு தொழிலாளர் அனைவரும் வியப்படைந்தார்கள். அதற்குக் காரணமாயிருந்த குமரனை மனமாரப் பாராட்டினார்கள்!

—கே. செங்கோட்டுவேலன் (1871),
தாதம்பட்டி.

காத்தமுத்துவின் பதில்

நேரம் 9.00.

அது ஓர் ஆரம்பப்பள்ளி. அந்த ஆரம்பப் பள்ளியில் சற்று முன்புதான் மணி அடித்த ஓசை கேட்டது. இப்போது வகுப்புகள் நடந்து கொண்டிருந்தன. நாம் இப்போது அந்தப் பள்ளியில் 4—ஆம் வகுப்புக்குச் செல்வோம். படிக்க அல்ல... பார்க்க. ஏனென்றால் நம் கதாநாயகனின் வகுப்பு இதுதானே!

அந்த வகுப்பில் முத்துராஜன், ஆசிரியர்க்கே உரிய பாணியில் அமர்ந்திருக்கிறார் நாற்காலியில். அவர் முன் உள்ள மேசைமேல் வருகைப் பதிவேடு, சாக் கட்டி, அழிப்பான் ஆகியவை வீற்றிருக்கின்றன. முத்துராஜன் வருகை'' பதிவேட்டைத் திறக்கிறார்.

''கு ன்.''

''எஸ சார்.''

''செல்லப்பன்.''

''உள்ளேன் ஐயா,''

''முருகன்.''

''பிரசன்ட் சார்.''

விதவிதமான பெயர்கள். விதவிதமான பதில்கள். இறுதியாக ''கருப்பையா''வை அழைத்து விட்டு எழுகிறார். சுவரில் வைத்திருக்கும் பிரம்பை எடுக்கிறார். கருப்பையாவின் முகத்தில் பயச் சாயலே தெரியவில்லை. ஏன் தெரிய வேண்டும்? அவனை அடிக்கப் போறுல்தானே? பின் யாரை அடிப்பதற்கு? நாம் வருகைப் பதிவேட்டை எட்டிப் பார்ப்போம். அட... அடுத்த பெயர் நம்ம கதாநாயகனுடையது.

பெயர் தெரிய வேண்டுமா? அங்குள்ள மாணவர்கள் சலசலக்கிறார்களே, அதைக் கூர்ந்து கேட்டால் தெரியும்.

''டேய்... நம்ம காத்தாடி முத்து வருகிறான்டோய்'' ஒருவன் கூற,



''ஹா ஹா ஹா'' சப்தம் பலமாய்ப் பின் தொடர்கிறது. அதற்குப் பின்னால் முத்துராஜன்,

''ஸ்ஸ்... கீப் கொய்ட்.''

அமைதி நிலவுகிறது. என்ன.... நமது கதாநாயகன் பெயர் காத்தாடி முத்துவா? இல்லை... காத்தமுத்து!

வயிற்றில் பாதி தெரியச் சட்டையை அணிந்து, கால் சட்டையில் பொத்தான்கள் இல்லாமல் அதற்குப் பதில் ஊக்குகளைக் குத்திக் கொண்டு, காத்தமுத்து ஓடிவருகிறான். வாசலில் வந்துநிற்கிறான். பாவம்!... மூச்சு வாங்குகிறது,

முத்துராஜன், ''வாங்க துரை. உங்களை உள்ளே சும்மா விட்டுடு வோமோ?'' என்று கூறிக்கொண்டே, 'பளீர், பளீர் என்று நான்கு அடிகள் கொடுக்கிறார். காத்த முத்துவின் கை சிவந்து விடுகிறது.

இது தினசரி நடக்கும் சம்பவம் தான். ஆனால் இன்றோ முத்துராஜன் அவனைப் பார்த்து, ''இன்றைக்கு நீ காரணம் சொல்லாமல் போனால் உன்னை உட்கார விட மாட்டேன்''— என்று கண்டிப்பாகக் கூறினார்.

''சமைக்க நேரமாயிடுச்சு சார்''— காத்தமுத்து.

''சாப்பிடாமல் வந்தா என்னடா? குறைஞ்சாப் போயிடும்?''

''சாப்பிடாமல் தான் வந்திருக் கேன் சார்'' வாய்க்குள்ளே கூறிக் கொண்டான்.

''சரி, இன்றைக்குச் சாயந்தரம் உங்கள் வீட்டுக்கு வர்றேன். உங்கப்பா வோட பேசணும். உன்னைப் பத்திப் பேசி நல்லாக் கண்டிக்கச் சொல்ல ணும்.''

''ஸார், எங்கப்பா சாயந்தரம் இருக்க மாட்டார் சார்.''

''நீ பொய் சொல்லுவே. என்ன ஆனாலும் கட்டாயம்வர்றேன். இப்போ நீ போய் உட்காரு.''

உட்கார்ந்தான் காத்தமுத்து. அவன் மனத்தில் முத்துராஜன்சொன்ன வார்த் தைகள் காற்றில் மூலக் கூறுகள்மேலும் கீழும் அசைவதைப் போன்று இருந் தன.

''இவர் போய் அப்பாகிட்ட சொன் னால், அப்பா என்னை ஸ்கூலுக்கு அனுப்புவதையே நிறுத்தி விடுவாரே! இங்கேயே கிடடான்னு சொல்லி விட்டால் ஐயோ என் படிப்பு பாழாகுமே!'' என்று வருந்தினான்.

''எல்லோரும் ஹோம்வொர்க் செஞ் சுட்டீங்களா?'' — என்று கேட்டார் ஆசிரியர் முத்துராஜன்.

''......''

''என்னடா ஒருத்தரும் கொண்டா ரல்லியா?''

''நான் கொண்டு வந்திருக்கிறேன் சார்'' — காத்தமுத்து.

''வெரிகுட்.''

காத்தமுத்து பள்ளிக்கு லேட்டா னாலும் படிப்பில் 'வெரிகுட்'தான்!

மாலை 5.00 மணி.

காத்தமுத்து வீடு. முத்துராஜன் அதோ தெருக் கோடியில் வந்து கொண்டு இருக்கிறார். இதோ வீட்டி னுள் நுழைகிறார். நன்கு குனிந்து நுழைகிறார். ஆசிரியர் வந்ததைப் பார்த்துப் பழைய கோரைப் பாயை விரித்துப் போடுகிறான் காத்தமுத்து.

''உன் அப்பா எங்கேடா?'' — குரலில் அதிகாரம் தொனித்தது.

''அப்பா எப்போதும் ராத்திரி ஏழு மணிக்குத்தான் வருவாரு. அதோ அங்கே படுத்திருக்கிறதுதான் சார் என் அம்மா. ஒரு மாசமா படுத்த படுக்கைதான் சார். எழுந்திருக்கக்கூட முடியாத நிலையில் இருக்காங்க சார். காலையில் எழுந்திருச்சு நான்தான் சார் எல்லா வேலைகளையும் பார்ப்பேன். சாமான்களையெல்லாம் விளக்கி வெச் சுட்டு, சாதம் சமைச்சு எங்க அப்பா வுக்குக் கட்டிக் கொடுத்தனுப்பிட்டு அம்மாவுக்குக் கஞ்சி வச்சக் கொடுத் துட்டு ஸ்கூலுக்குப் புறப்படுறதுக்கு மணி ஒன்பது ஆயிடுது சார். குளிக்க மாட்டேன். சரியாக்கூடச் சாப்பிட மாட்டேன். ஓடி வருவேன் சார். அதனால்தான் தினசரி லேட்'' அவன் சொல்லி முடிக்கையில் கண்ணீர் கீழே விழுந்து தெறிக்கிறது.

முத்துராஜனும் அழுது விட்டார். ஆனால், வெளியே காட்டிக் கொள்ள வில்லை. வேகமாக வெளியேறினார், கண்களைத் துடைத்துக் கொண்டே.

மறுநாள் காலை 9.00 மணி.

முத்துராஜன் வருகைப் பதிவேட்டை எடுத்தார். பெயரைக் கூப்பிட்டார். பதிலும் வந்தது. கருப்பையா பெயர் வந்தது. அவனும் பதில் சொல்லி விட்டமர்ந்தான். அவர் பிரம்பு எடுக்க எழுந்திருக்கவில்லை. காத்தமுத்துவின் பெயருக்கு நேரே புள்ளி வைத்தார். காத்தமுத்துவுக்கு அடுத்த பெயரான நடராஜனைக் கூப்பிட்டார். நடராஜ னும் பதில் கூறிவிட்டு அமர்ந்தான்.

''சார், என் பேரைக் கூப்பிடல் லியே!'' என்ற குரலைக் கேட்டு நிமிர்ந்தார் முத்துராஜன்.

காத்தமுத்துதான் நின்று கொண் டிருந்தான்.

''சார், இனிமேல் நான் லேட்டா வரமாட்டேன்...''

''ஏன், உங்கம்மாவுக்கு நல்லா ஆயிடுத்தா?''

''இல்லே சார், எங்க அம்மா நேத்து ராத்திரி செத்துப் போயிடுச்சு சார்'' என்று கூறி அழுதான்.... முத்துராஜனின் கண்ணீர்த் துளிகள் வருகைப் பதிவேட்டில் விழுந்தன.

—ச. செந்தில் முருகன் (1095),
காரைக்குடி.

கேள்வி இங்கே; பதில் எங்கே?

86. அதிசய உலகில் ஆலிஸ் (Alice in wonderland) என்ற புகழ் பெற்ற குழந்தைக்கதையை எழுதிய லூயி காரல் என்பவரின் இயற்பெயர் தெரியுமா?

87. ஒலிம்பிக் ஆட்டத்தின் முதல் விழா 1896-ல் நடந்தது. அது முதல் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடந்து வருகிறது. இடையிலே 3 முறை இந்த விழா நடைபெறவில்லை. எந்தஎந்தஆண்டுகளில்? ஏன் நடைபெறவில்லை?

88. சம்ஸ்கிருதத்தில் உள்ள இரண்டு முக்கியமான காப்பியங்கள் யாவை?

89. பைபிளில் காணப்படும் 'பழைய ஏற்பாடு' எந்த மொழியில் ஆக்கப்பெற்றது?

90. டாட்டா இரும்பு எஃகு நிறுவனம் எங்கே இருக்கிறது?

91. அரணை, ஓணான், பச்சோந்தி— இவை எந்த இனத்தைச் சேர்ந்தவை?

92. சென்னை உயர்நீதிமன்றத்தில், முதல் முதலாக ஷெரீப் ஆக நியமிக்கப்பெற்ற இந்தியர் யார்?



93. இந்தச் சின்னம் யாருடையது?

94. விஞ்ஞானி ஜேம்ஸ் வாட் பிறந்தது எங்கே?

95. 'முத்திரை வரி' என்றால் என்ன?

96. 'விக்கிரமாதித்தன் கதைகள்' என்கிறோமே, அக்கதைகளில் வரும் விக்கிரமாதித்தன் யார்?

97. மிருகங்களில் மிக வேகமாக ஓடக்கூடியது எது?

98. வட இந்தியாவில் உள்ள பெரிய நதிகளெல்லாம் இமயமலையில் தோன்றுகின்றன, ஒரே ஒரு நதியைத் தவிர. அது எந்த நதி?

99. இந்திராகாந்தி, முதல் முதல் பிரதமரானது எப்போது?

100. லினன் — எதிலிருந்து தயாரிக்கப்படுகிறது?

101. உலகிலுள்ள கட்டடங்களில் மிக உயரமானது எது?

102. ஐரோப்பாவிலிருந்து நம் தேசத்துக்கு முதல் முதலாகக் கடல் வழியைக் கண்டுபிடித்தவர், நம் தேசத்திலே (கொச்சியில்) இறந்தார். அவர் பெயர்?

103. பெரிய வெங்காயம் சின்ன வெங்காயம் — இரண்டிற்கும் உள்ள முக்கிய வேற்றுமை என்ன?

பதில் இங்கே!

86. சார்லஸ் லூட்விட்ஜ் டாக்சன்— இவர் ஒரு கணிதப் பேராசிரியர்.

87. 1916, 1940, 1944 ஆண்டுகளில், இரு உலக யுத்தங்கள் நடந்ததால், விழா நடைபெறவில்லை.

88. வால்மீகியின் இராமாயணம்; வியாசரின் மகாபாரதம்.

89. எபிரேய மொழியில் (HEBREW).

90. பீகார் மாநிலத்திலுள்ள ஜாம்ஷெட்பூரில்.

91. பல்லி இனத்தை.

92. பூண்டி அரங்கநாத முதலியார். இவர் 'கச்சிக் கலம்பகம்' என்ற நூலை இயற்றியவர்.

93. UNICEF (United Nations International Children's Emergency Fund) ஐக்கியநாடுகளின் 'சர்வதேசக் குழந்தைகளின் அவசரத் தேவைக்கான நிதி' என்ற நிறுவனத்தின் சின்னம்.

94. ஸ்காட்லாந்திலுள்ள கிரீனக் என்ற ஊரில்.

95. சொத்துக்களை விற்கும்போதும், வாங்கும் போதும் பத்திரங்களில் பதிவு செய்வதற்குச் செலுத்தப்படும் வரி.

96. விக்கிரமாதித்தன் என்ற பெயரில் வடநாட்டில் பல அரசர்கள் ஆண்டு வந்திருக்கின்றனர். ஆனால் அவர்களில், எவருக்குமே இக்கதைகளுடன் சம்பந்தமில்லை என்கிறார்கள் வரலாற்று ஆசிரியர்கள்.

97. சிறுத்தை.

98. மகாநதி — இது மத்தியப் பிரதேசத்திலுள்ள பஸ்தார் என்னும் இடத்திலிருந்து புறப்படுகிறது.

99. 24-1-1966.

100. ஒரு வகைச் சணல் செடியின் நாரிலிருந்து.

101. அமெரிக்காவில் சிக்காக்கோ நகரில் உள்ள சியர்ஸ் டவர் கட்டடம்தான். உயரம் 443 மீட்டர்; 110 மாடிகள்.

102. வாஸ்கோடகாமா

103. பெரிய வெங்காயத்தில் ஒரே பூண்டு இருக்கும். சிறிய வெங்காயத்தில் பல பூண்டுகள் சேர்ந்து கொத்தாக இருக்கும்.



சாகாத மரம் சாட்சிக்கும் வரும்!

எம். ஆர். ராஜன்

கண்ணாயிரத்துக்குக் கொஞ்சம் பணமுடை. அவசரமாக ஒரு ஐயாயிரம் ரூபாய் தேவைப்பட்டது. யாரிடம் கேட்பது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தான். சாத்தப்பனைச் சந்தையில் கண்டான் கண்ணாயிரம். நிலைமையை எடுத்துச் சொல்லிப் பணம் கேட்டான். சாத்தப்பன் தன்னிடம் பணம் இல்லை என்று கைவிரித்து விட்டான். ஆனால், செங்கோடன் நெல் விற்றுப் பணம் வைத்திருப்பதாகவும் அவனைக் கேட்டுப் பார்க்குமாறும் யோசனை கூறினான்.

கண்ணாயிரம் செங்கோடனைச் சந்தித்தான். ஒரு மாத காலத்தில் திருப்பித் தருவதாகவும் சொன்னான். இரண்டு பேருக்கும் தெரிந்தவனான ஏகாம்பரத்தைச் சாட்சி வைத்தார்கள்.

ஏகாம்பரம் சாட்சி நிற்கவே, செங்கோடன் — கடன் பத்திரம் எதுவும் வாங்கவில்லை. வாயளவுக் கணக்கோடு சரி! 'கண்ணாயிரம் ஐயாயிரத்தை வியாபாரத்தில் போட்டுக் கொஞ்சம் லாபம் அடைவான். பிறகு வட்டியோடு கடன் திரும்பி வரும். அதுவும் ஒரு மாத காலம்தானே!' — என்று எண்ணிக் கொண்டிருந்த செங்கோடனுக்குப் பெருத்த ஏமாற்றமே காத்திருந்தது.

ஒன்று — இரண்டு என்று ஆறேழு மாதங்கள் ஓடிவிட்டன. கண்ணாயிரத்துக்குப் பணத்தைத் திருப்பித்தர வசதியில்லாமல் போனது. இதற்குள் சாட்சி நின்ற ஏகாம்பரமும் ஒரு விபத்தில் இறந்து போனான்.

வழியும் வசதியுமில்லாது போன கண்ணாயிரத்துக்கு ஏகாம்பரம் இறந்து போனது சாதகமாகிவிட்டது. சாட்சியே இல்லாது போய் விட்ட காரணத்தால் தான் செங்கோடனிடம் பணமே வாங்கவில்லை என்று கூறிவிட்டான்.

செங்கோடன் செய்வதறியாது விழித்தான்.

வழக்குத் தொடருவதொன்றே வழி என்று தோன்றியது. பஞ்சாயத்தில் வழக்குத் தொடர்ந்தான்.

நெல் விற்ற பணத்தை வேறு செலவுக்காக வைத்திருந்ததாகவும் அந்த நேரத்தில் அவசரமாகத் தேவைப்படுவதாகக் கண்ணாயிரம் கேட்கவே—ஏகாம்பரத்தைச் சாட்சியாக வைத்துக் கொண்டு பணம் கடன் தந்ததாகவும் — ஏகாம்பரம் இறந்து போனதைச் சாதகமாக்கிக் கொண்டு, கடனைத் திருப்பித் தர வசதியற்றுப் போன கண்ணாயிரம் பொய்யும் சொல்ல ஆரம்பித்து விட்டதாகவும், மோசடி

செய்து ஏமாற்றுவதாகவும் செங்கோடன் வாதிட்டான்.

தனக்குப் பணத் தேவையே வரவில்லை எனவும் செங்கோடனிடம் பணம் வாங்கவே இல்லை எனவும் ஆணித்தரமாகக் கூறினான் கண்ணாயிரம்.

வழக்கு சிக்கலானதல்லவா?

சின்னானிடம் போயிற்று.

தீர விசாரித்தான் சின்னான். செங்கோடனைக் கடைசியாக ஒரு கேள்வி கேட்டான்—

''நீங்கள் பணம் கொடுத்ததாகச் சொல்கிறீர்கள். கண்ணாயிரமோ இல்லை என்கிறார். இருந்த ஒரே சாட்சியான ஏகாம்பரமும் இறந்து விட்டார் என்கிறீர். சரி. போகட்டும் — கடன் கொடுத்ததாகச் சொல்கிறீரே, வீட்டில் கொடுத்தீரா, கோயிலில் கொடுத்தீரா — பஸ் ஸ்டாண்டு, ரயிலடியில் கொடுத்தீரா, வெட்ட வெளியில் கொடுத்தீரா, அல்லது மரத்தடியில் கொடுத்தீரா கடைத் தெருவில் கொடுத்தீரா?''

கொஞ்சம் யோசித்தபடியே செங்கோடன் பதில் சொன்னான்:

''ஒரு வேப்ப மரத்தடியில் கொடுத்தேன்.''

''அப்படியானால், நாளைக் காலையில் அந்த வேப்ப மரத்தடியில் விசாரணையை வைத்துக் கொள்வோம். சாட்சியாயிருந்த ஏகாம்பரம் இறந்து விட்டாலும், வேப்பமரம் சாகவில்லையல்லவா? அதனைக் கேட்போம். சாகாத மரம் சாட்சி சொல்லும்'' என்று சொல்லி பஞ்சாயத்தை அன்று கலைக்கச் சொன்னான், சின்னான்.

கூட்டம் கலைந்தது.

''என்னப்பா சின்னான் — ஒரு வேப்ப மரம்னுதானே செங்கோடன் சொன்னான் — அது எந்த இடத்திலே இருக்கிற வேப்பமரம்னு நீயும் கேட்கலே. வழக்கிலே சம்பந்தப்பட்டவங்களும் சொல்லவேயில்லையே — கேட்க மறந்து போச்சா? — நாளைக்கு எந்த வேப்ப மரம்னு போய் நிக்கிறதாம்?'' என்று நாட்டாண்மைக்காரர் கேட்டார்.

''நாட்டாண்மைக்காரய்யா, அங்கேதான் இருக்கு விஷயமே.... நாளைக்குக் காலையிலே நான், செங்கோடன் எல்லோரும் உங்க வீட்டுக்கு வர்றோம் — இடம் தெரிஞ்ச செங்கோடனைக் கூட்டிக்கிட்டுப் போறோம். இல்லையா? சரியாப் போய்ச் சேர்ந்துடலாம்'' — என்றான் சின்னான்.

மறுநாள் காலை —

எங்கே சின்னான் தனக்கு முன்னால் வந்து ஏதாவது சதி செய்து விடுவானோ என்று எண்ணிய கண்ணாயிரம் — எட்டு மணிக்கெல்லாம் போய் உட்கார்ந்து கொண்டான். ''வேப்ப மரம் சொல்லுமாம் — கடன் வாங்கினது உண்மைதானென்று — அது எப்படி என்று பார்ப்போம்'' என்று எண்ணிக்கொண்டு மரத்தின் கிளையில் யாரையாவது முன்னேற்பாடாகச் சின்னான் உட்கார வைத்திருக்கிறானா என்று கிளைகிளையாய்ப் பார்த்தான். யாரையும் காணோம். நிம்மதியாய் மரத்தடியில் உட்கார்ந்தான்.

சின்னான், சொல்லியிருந்த நேரத்திற்கு முன்னதாகவே பஞ்சாயத்துக் காரர்களுடனும் செங்கோடனுடனும் வந்து சேர்ந்தான். செங்கோடன் சொன்னான்:

''வேப்பமரம் நான் கேட்பதற்கு முன்னாலேயே பதிலைச் சொல்லிவிட்டது... கண்ணாயிரம் கடன் வாங்கியது உண்மை. சாட்சி இறந்து விட்டபடியால் ஏமாற்றப் பார்க்கிறான் என்று.''

''பொய்... இது ஏமாற்றுவித்தை.. வேப்ப மரமாவது... பேசினதாவது... இதுமாதிரி ஏதாவது மோசம் செய்வீர்கள் என்று தெரிந்துதானே, நான் உங்களுக்கு முன்னாலிருந்தே வந்து இங்கு உட்கார்ந்திருக்கிறேன்'' —என்று கத்தினான் கண்ணாயிரம்.

சின்னான் சொன்னான்: ''கண்ணாயிரமே ஒப்புக் கொண்டு விட்டார்— நமக்கு முன்பாகவே இந்த மரத்தடியில் வந்து உட்கார்ந்திருந்ததாக. நேற்று பஞ்சாயத்தில் செங்கோடன்— ஒரு வேப்ப மரத்தடியில் கடன் கொடுத்ததாகச் சொன்னாரே ஒழிய— எந்த இடத்தில் இருக்கிற வேப்பமரம் என்று சொல்லவில்லை. — நாமும் வேண்டுமென்றேதான் கேட்கவில்லை. அப்படியிருக்க எவ்வாறு கண்ணாயிரம் சரியாக இந்த மரத்தடிக்கு வர முடியும்? எனவே செங்கோடனிடம் கண்ணாயிரம் கடன் வாங்கியது உண்மை. எனவே, உடனடியாகத் திருப்பிக் கொடுக்க வேண்டும். இல்லையெனில் கண்ணாயிரத்தின் வீடு ஏலம் போடப்பட்டுச் செங்கோடனுக்குச் சேரவேண்டிய கடன் தொகை வட்டியுடன் பஞ்சாயத்தாரால் வசூல் செய்யப்படும்'' — சின்னானின் தீர்ப்புக் கண்டு எல்லோரும் வியந்து போயினர்.

கண்ணாயிரத்தின் முகத்தில் அசடு வழிந்தது!



உயர்வும் தாழ்வும்

இளையவன்

பாரதப் போரினை முன்னிட்டுப்
பரந்தா மன்தன் உதவியினைக்
கோரிப் பெறவே துவாரகையின்
கோயில் வந்தான் அர்ச்சுனனே.

துரியோ தனனும் அவ்வாறே
துவாரகை வந்தான் உதவிபெற.
இருவரும் வந்த நேரத்தில்
இறைவன் இருந்தான் உறக்கத்தில்;

கண்ணன் கால்மாட் டருகினிலே
காத்திருந் தால்அது இழிவுஎன,
மன்னன் துரியன் தலைமாட்டில்,
மதிப்பாய்ச்சென்று அமர்ந்தானே!


மாதவன் புகழை எப்போதும்
மனத்தால் வழிபாட் டிருப்பதனால்
பாத மலரே உயர்வுஎனப்
பார்த்தன் அமர்ந்து கொண்டானே!

நீலக்கண்ணன் பொய்த் தூக்கம்
நீங்கி எழுந்த போதினிலே
கால்மாட் டிருந்த அருச்சுனனைக்
கண்டான்; மகிழ்ந்து அழைத்தானே!

அருச்சுனன் கூறிய பின்னாலே
''அடடா, துரியா, வா''என்றே
விரும்பி அழைத்தான் கண்ணபிரான்.
வெட்கம் கொண்டான் துரியனுமே!

உயர்வும் தாழ்வும் நம்முடைய
உள்ளத் தால்தான் கிடைக்கிறது;
இயல்பாய்ப் பணிவு கொண்டார்க்கே
என்றும் புகழே நிலைக்கிறது!

கிளைடர் விமானமும் ஒரு கரடியும்



M.சோலையன்

கிளைடர் விமானம் நீல மலைகளுக்கு மேலே பறந்து கொண்டிருந்தது. அதன் நெடிய பயணம் (சும்மாவா, 5,000 கி. மீ. அல்லவா?) முடியும் நிலையில் இருந்தது. காஷ்மீரில் தொடங்கிக் கன்னியாகுமரியில் முடியும் பயணம் அது!

ஆனால் இதென்ன! திடீரென்று மின் பொறிக்கட்டை, சரம் சரமாகப் பொறிகளைக் கொட்ட ஆரம்பித்து விட்டதே! இது நீடித்தால் சிலிண்டரே வெடித்து விடும். அப்புறம் விமானம் தீப்பற்றி...

விமானத்தை ஓட்டிவந்த இராணுவ அதிகாரி கடவுளை வேண்டிக் கொண்டார். அதே நேரத்தில் கீழே தொட்டபெட்டாவின் அடர்ந்த புதர்களுக்கு இடையே கட்டப்பட்டுக் கிடந்த சிறுவனும் கடவுளை வேண்டிக் கொண்டான்.

யார் அந்தச் சிறுவன்? அவனுக்கு ஏன் இந்த நிலை?

நேற்று நண்பகல் 'டாண்' என்று 2.37—க்கு மேட்டுப் பாளையத்திலிருந்து ஊட்டிக்குப் புறப்பட்ட பேருந்தில் நீங்கள் இருந்திருந்தால் கதை கொஞ்சம் புரிந்திருக்கும்.

அப்பேருந்து மேட்டுப்பாளையம் நகர எல்லையைத் தாண்டிய வேளையில் குறுக்கே சிறுவன் ஒருவன் ஓடிவந்து கையை நீட்டினான்.

''ஏனுங்கோ, கண்டக்கா முத்தூருக்கு இது போகுமுங்களா?'' என்று அவன் கேட்டான்.

''சுண்டக்கா முத்தூருக்கும் போகாது; வெண்டக்கா முத்தூருக்கும் போகாது! விலகப்பா... ரைட்... ரைட்...'' என்று குரல் கொடுத்தார் கண்டக்டர்.

பேருந்து கிளம்பிய வேகத்தில் பையனும் கூடவே தொற்றிக்கொண்டான்.

''என்னப்பா?'' என்று முறைத்தார் கண்டக்டர்.

''ஊட்டிக்கே ஒரு டிக்கெட் கொடுத்திடுங்க!'' என்று ஐம்பது ரூபாய் நோட்டு ஒன்றை நீட்டினான் அவன்.

கண்டக்டர் அவனை மேலும் கீழும் பார்த்தபடி டிக்கெட் கிழித்துக்கொடுத்தார். அவருடைய ஊகம் சரிதான்.

வீட்டைவிட்டு ஓடிவந்த பையன்தான் அவன். கடந்த தேர்வில் அவன் தோல்வி அடைந்து விட்டான். அப்பாவுக்குத் தெரிந்தால் தோலை உரித்து விடுவார். எனவேதான் ஐம்பது ரூபாயைப் பெட்டியிலிருந்து எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டான். முதலில் அவன் அக்கா ஊரான கண்டக்கா முத்தூருக்குப் போவதாக முடிவு செய்திருந்தான். ஆனால், கணப்பொழுதில் முடிவை மாற்றிக்கொண்டான்.

''முன்னால் போய் அந்தப் பாட்டியின் பக்கத்திலே உட்கார்!'' என்று கட்டளையிட்டார் கண்டக்டர்.

நரைத்த தலை! வரிசையாக வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் முன்னம் பற்கள்! கறுப்புக் கண்ணாடி! முகத்தில் அங்கும் இங்கும் கறுப்புச் சாயம் பூசியது போன்ற ஒப்பனை! வேடிக்கையான பாட்டிதான்!

அவன் அருகில் அவன் அமரப் போகும் நேரத்தில், ''கந்தா!'' எனப் பாட்டி முணுமுணுத்தாள். பையனுக்கு வெலவெலத்தது. தன் பெயர் அவளுக்கு எப்படித் தெரிந்தது? ஆனால் அவள் தொடர்ந்து... ''...கதிர்வேலா, கடம்பா!'' என்றதும் கந்தனுக்குப் போன உயிர் மீண்டும் வந்தது.

''சரிதான்; பாட்டி கடவுள்பெயரைச் சொல்கிறாள்!''

முன் இருக்கையில் அமர்ந்திருந்தவர்கள், ''சரியான தொண தொணப்பு'' என்று சற்று உரக்கவே கூறினார்கள்.

கந்தன் அவர்களை உற்றுப் பார்த்தான். ஒருவன் தலையோ மொட்டை. அடுத்தவனோ ஹிப்பி போல் தலைமுடி வளர்த்திருந்தான். சரியான ஜோடிப் பொருத்தம்.

பஸ் மலைப்பாதையில் ஏற ஆரம்பித்தது. 'மலைகளின் அரசி உங்களை வரவேற்கிறாள்' என்ற விளக்கப் பலகை கந்தனின் கண்களில் பட்டது. அடேடே, மலைகளின் அரசி என்பது ஊட்டி தானா?

அப்போது பஸ் குலுங்கிக்கொண்டு ஒரு வளைவில் மடங்கித் திரும்பியது. ''அப்பாடா! இதுபோல் குன்னூர் போகிற வரை இன்னும் பதிமூன்று ஹேர்பின் வளைவுகள் கிடக்கின்றன!'' என்றான் மொட்டையன்.

''ஆத்தாடி! பதிமூணு ஹேர்பின்னா! அதிலே ரெண்டு ஹேர்பின்னை யாராவது எடுத்துக் கொடுங்களேன். என் பேத்தி ஹேர்பின் என்றால் உயிரையே விடுவாள்!'' என்றாள் பாட்டி. ஹேர்பின் வளைவு என்பது குறுகலான வளைவுகளைக் கொண்ட பாதை என்பது பாட்டிக்குத் தெரியாது போலும்!

பஸ் வளைந்து வளைந்து திரும்பிய போது ஏதோ ஒரு காகிதம் கந்தனின் காலில் வந்து மோதியது. அவன் குனிந்து அதை எடுத்துப் பார்த்தான். அது ஓர் அஞ்சல் அட்டை. அதில் நான்கே வரிகள் மட்டும் இருந்தன.


'தோடர் கோயிலைத் தொட்டுவா!
கல்மரத்தைப் பிட்டு வா!
தொட்டுப்பிட்டு வா!
தொட்ட பெட்டா வா!'

'புதுக்கவிதை மாதிரி இருக்கிறதே!' என்று முணுமுணுத்துக் கொண்டான் கந்தன். அவன் கையில் இருந்த கடிதத்தைப் பாட்டி எட்டிப் பார்த்தாள். மறுகணம் 'சடக்'கென்று பிடுங்கித் தன் சுருக்குப் பையில் போட்டுக் கொண்டாள். ஒருவேளை, புகையிலை மடித்து வைத்துக்கொள்ள அது உதவுமோ என்னவோ!

குன்னூர் பேருந்து நிலையம் வந்ததும் யாரோ வந்து பாட்டியின் காதில் ஏதோ கிசுகிசுத்தார்கள். அவள், ''கந்தா! கதிர்வேலா! கடம்பா!'' என்றபடி இறங்கிப் போய் விட்டாள்.

குன்னூரை விட்டு ஊட்டியை நோக்கிப் பேருந்து நகர ஆரம்பித்தது. அப்போதுமொட்டையன்,''ஐயையோ! அந்த லெட்டரைக் காணோமே!'' என்று அலறினான். அவன் நண்பன், ''பாவி! எங்கே போட்டாய்?'' என்றவாறு கீழே குனிந்து தேடினான்.

கந்தன் வாயைத் திறக்கவில்லை. அந்த லெட்டரில் ஏதோ மர்மம் அடங்கியிருப்பதை அவன் உணர்ந்தான். ஊட்டியும் வந்தாயிற்று. கதிரவன் மறையப் போகிற நேரத்தில் ஊட்டியில் 'பொட்டானிகல் கார்ட'னில்



அலைந்து கொண்டிருந்தான் கந்தன். அங்கேயிருந்த 'கல்மரம்' என்ற விளக்கப் பலகை அவன் கண்களில் பட்டது. அங்கே கல்லாகிப் போன மரம் ஒன்றை நட்டு வைத்திருந்தார்கள். சுமார் இருநூறு லட்சம் ஆண்டுகளுக்கு முன்னால் அது மரமாக இருந்ததாம். பிறகு வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுப் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் பூமியில் புதைபட்டுக் கிடந்ததாம். அப்புறம் கல்லாகவே மாறி விட்டதாம்! தென்னார்க்காடு மாவட்டத்தில் திருவக்கரை என்னும் இடத்தில் அக் கல்மரம் கண்டெடுக்கப் பட்டதாம்.

கந்தன் மேலே நடந்து போனான். தொலைவில் கூரை வேயப்பட்ட குடில் ஒன்றைக் கண்டான். முன்புறக் கற்சுவரில் எருமைத் தலை செதுக்கப்பட்டிருந்தது. அதுதான் மலைவாசிகளான தோடர்களின் கோயில் என்று சிலர் பேசிக் கொண்டார்கள்.

தோடர் கோயில்! கல்மரம்! தொட்டபெட்டா! இந்த வார்த்தைகளுக்குள் ஏதோ மர்மம் அடங்கியிருக்கிறது. அதுதான் என்னவென்று தெரியவில்லை. கந்தனுக்குத் தலையை வலித்தது. கார்டனை விட்டு வெளியே வந்தான். கையில்தான் காசு இருக்கிறதே! நேராகத் திரையரங்கத்தைத் தேடிப் போனான்.

இரவு மணி பத்தரை. திரைப்படக் காட்சி முடிந்து கொட்டாவி விட்டபடி வெளியே வந்தான் அவன். பேருந்து நிலையத்தில் இரவு நேரத்தைக் கழிக்க முடிவு செய்தான். வழியிலிருந்த தேநீர்க் கடைக்குள் புகுந்து தேநீரைப் பருகினான். அப்போது அங்கே ஒரு சிறிய 'வேன்' வந்து நின்றது. நண்பகலில் அவனுடன் பேருந்தில் பயணம் செய்த மொட்டையனும், ஹிப்பித் தலையனும் இறங்கி வந்தார்கள்.

''தொட்டபெட்டா வரைக்கும் தாக்குப் பிடிக்க வேண்டுமே! ஆளுக்கு இரண்டு கோப்பை குடிப்போம்!'' என்றான் மொட்டையன்.

கந்தனின் உள்ளத்தில் தெளிவு ஏற்பட்டது. 'எதையோ அவர்கள் பொட்டானிக்கல் கார்டனிலிருந்து கடத்திக் கொண்டு போகிறார்கள். அவர்களை விடக் கூடாது'. ஓசைப்படாமல் நழுவி 'வேனின்' பின்புறக் கதவைத் திறந்து உள்ளே குதித்தான். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் களைப்பு மேலிட அவன் தூங்கிப் போனான்.

'வேன்' தொட்டபெட்டா சிகரத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. கந்தன் பிதற்ற ஆரம்பித்தான்.

''...தொட்டுப் பிட்டு வா!
தொட்ட பெட்டா வா!''

முன் இருக்கையில் அமர்ந்திருந்த மொட்டையனும், டிரைவர் ஹிப்பித் தலையனும் திடுக்கிட்டார்கள். உள்ளே விளக்கைப் போட்டார்கள். அவர்கள் கொண்டு போகும் மூட்டைகளின் நடுவில் ஒரு சிறுவன்!

''அடேடே! இவனை எங்கோ பார்த்தது போல இருக்கிறதே! ஆமாம்... ஊட்டிக்கு வந்த பேருந்தில் பாட்டிக்குப் பக்கத்தில் இருந்தானே.... நம் இரகசியத்தைத் தெரிந்து கொண்டானா? ஆளைத் தீர்த்துக் கட்டிவிடுவோமா?'' ஹிப்பித் தலையன் அவசரப்பட்டான்.

''பொறு. தலைவர் காலையில் ஹெலிகாப்டரில் வருவார் அல்லவா? அவரே முடிவு செய்யட்டும். பயலைக் கட்டிப் போட்டு வைத்திருப்போம் அதுவரை!'' என்றான் மொட்டையன்.

இவ்வளவும் நேற்றைய செய்திகள்.. இன்றைய நிலைமை என்ன?

தொட்டபெட்டா சிகரத்தில் புதர்களுக்கு இடையில் கந்தன் கிடந்தான். அவனுடைய கைகளையும் கால்களையும் கயிறு இறுக்கிக் கொண்டிருந்தது. அருகில் முரடர்கள் பேசுவது அவன் காதில் விழத்தான் செய்தது.

''அண்ணே! கொஞ்சமா நஞ்சமா? அஞ்சு பாங்கில் கொள்ளை அடித்தாச்சே! போலீசுக்குப் பயந்து இத்தனை நாளா நகைகளைத் தோடர் கோயிலுக்குப் பக்கத்திலே புதைச்சு வெச்சிருந்தோம். பணத்தைக் கல்மரத்துக்குப் பக்கத்திலே புதைச்சிருந்தோம். போலீஸ் கெடுபிடி ஓஞ்சதும் தலைவர் நமக்கு லெட்டர் போட்டாரு! நேத்து ராத்திரி போய் நல்லபடியாத்தோண்டி எடுத்து வந்திட்டோம். ஆனா அந்த லெட்டர்தான் இந்தப் பய கையிலே இடைச்சுடுச்சு!'' என்றான் ஒருவன்.

''போகட்டும்! பயதான் மாட்டிக்கிட்டானே! கடைசியிலே அந்த லெட்டரை எழுதப் படிக்கத் தெரியாத கிழவி கொண்டு போயிட்டாளாம்! அது சரி! ஏதோ சத்தம் கேட்குதே! தலைவர் ஹெலிகாப்டரில் வந்திட்டாரா? வா! மேட்டிலே ஏறிப் பார்க்கலாம்!'' என்றான் அடுத்தவன்.

இருவரும் போன பின் கந்தன் கையைப் பிணைத்த கயிற்றைத் தரையில் பலங்கொண்ட மட்டும் தேய்த்தான். என்ன வியப்பு! கயிறு அறுந்து விட்டதே! விரைந்து கால் கட்டையும்

அவிழ்த்துக் கொண்டான். எதிர்த் திசையில் ஓட ஆரம்பித்தான்.

மேட்டிலே ஏறி நின்றார்கள் முரடர்கள். ''அண்ணே, அது ஹெலிகாப்டர் இல்லே! கிளைடர் விமானம்! கழுகு வடிவிலே முக அமைப்பு தெரியுது பாரு! இராணுவ அதிகாரிங்க கன்னியாகுமரி வரை போறாங்களாம்! பேப்பரிலே படிச்சேன்! எதற்கும் நாம் ஒளிஞ்சுக்கலாம்!'' என்றான் ஒருவன். இருவரும் புதரில் தஞ்சம் புகுந்தார்கள்.

கிளைடர் விமானத்தை இயக்கிய இராணுவ அதிகாரி திடலைப்பார்த்து விமானத்தை இறக்க ஆரம்பித்தார். மின்பொறிக் கட்டையைச் சரி செய்த பிறகு பயணத்தைத் தொடர அவர் முடிவு செய்து விட்டார்.

கீழே ஓடிக் கொண்டிருந்த கந்தனின் சட்டையைப் பின்புறத்தில் யாரோ இழுத்தார்கள். 'முரடர்களோ?' என்று அவன் திரும்பிப் பார்த்தான். ஆனால் அது ஒரு கரடி! 'வீல்' என அலறினான் கந்தன். கரடி சாவகாசமாக அவன் கையைப் பற்றி முறுக்க ஆரம்பித்தது...


திடலைப் பார்த்து விமானத்தை இறக்கிக் கொண்டிருந்த விமானியின் கண்களில் கரடியிடம் அகப்பட்ட சிறுவன் பட்டான். விமானம் தரையில் நின்றதும் அவர் கீழே குதித்துப் புதர்களை விலக்கிக் கொண்டு ஓடினார். கைத்துப்பாக்கியால்வானத்தைநோக்கி சுட்டார். கரடி மிரண்டு சிறுவனை விட்டுவிட்டு ஓட ஆரம்பித்தது. 'சரசர' என ஓடிப் புதரிலே மறைந்தது.

நல்லவேளை! கரடி கந்தனைத் தாக்கவில்லை. இராணுவ அதிகாரி தக்க சமயத்தில் வந்து காப்பாற்றி விட்டார். தொலைவில் பதுங்கி இருந்த மனிதக் கரடிகளைப் பற்றி அவரிடம் அவன் எடுத்துச் சொன்னான்.

அப்புறம் என்ன? மொட்டையனும், ஹிப்பித் தலையனும் கைகள் கட்டப்பட்டுத் திடலுக்குக் கொண்டுவரப்பட்டார்கள். அவர்கள் கொள்ளையடித்த மூட்டைகளும் கைப்பற்றப் பட்டன.

அப்போது—

போலீஸ் ஜீப் ஒன்று அங்கே வந்து நின்றது. அதிலிருந்து பாட்டி இறங்கி வந்தாள். அவள் பின்னால் காவலர்கள்! ''சரிதான்! கேடிகளைப் பிடித்துக் கட்டிப் போட்டாயிற்று?'' என்று கேட்டவாறு பாட்டி பல் செட்டைக் கழற்றினாள்! நரைத்த டோப்பா முடியைக் கழற்றினாள்! கறுப்புக் கண்ணாடியையும் கழற்றினாள்!



கொக்கு: ''கட்டிக்கிட்டா உன் பெண்ணைத்தான் கட்டிப்பேன்னு என் பையன் ஒற்றைக் காலில் நிற்கிறான்.''
-கீழை அ. கதிர்வேல்

அடேடே! இது பாட்டியல்ல! மாறு வேடத்தில் வந்த பெண் போலீஸ் அதிகாரி!

இராணுவ அதிகாரியைப் போலீஸ் அதிகாரி மிகவும் பாராட்டினார். கேடிகளைப் பிடித்து வைத்திருந்தாரே! ஆனால் இராணுவ அதிகாரியோ, ''கந்தனைப் பாராட்டுங்கள்!'' என்றார்.

''பாட்டி... ஸாரி... மேடம்! நேற்று குன்னூர் வரை வந்தது நீங்கதானே?'' என்று கேட்டான் கந்தன்.

''ஆமாம் தம்பி! கிழவி வேடத்தில் இரண்டு கேடிகளைப் பின்தொடர்ந்து வந்தேன். ஆனால் இடையில் அவர்களுடைய தலைவன் குன்னூரில் இருப்பதாகத் தகவல் வந்தது. முதலில் அவனைப் பிடிக்கப் போனேன். பிடித்தாகி விட்டது. இல்லாவிடில் ஹெலிகாப்டரை எடுத்து வந்து கொள்ளை அடித்த பொருள்களுடன் வெளிநாட்டிற்குப் பறந்திருப்பான்! எனக்கு முன்பாக நீங்களே காரியத்தை முடித்து விட்டீர்கள்!'' என்றார் பெண்போலீஸ் அதிகாரி.

சற்று நேரத்திற்கெல்லாம் கிளைடர் விமானத்தில் இருந்த மின்பொறிக் கட்டை சரி செய்யப்பட்டது. ராணுவ அதிகாரி கந்தனிடம், ''தம்பி! என் பயணத்தில் பல தடவை எஞ்சினில் கோளாறு ஏற்பட்டது. ஆனாலும் அங்கங்கே நிறுத்திச் சரி செய்து கொண்டேன். என் இலட்சியப் பயணத்தை முடிக்கப் போகிறேன். நீயும் தோல்வியைக் கண்டு துவண்டு விடக் கூடாது. அடுத்த முறை முயன்று படி! வெற்றி கட்டாயம் கிடைக்கும்! வாழ்க!'' என்று கூறி விமானத்தில் ஏறிக் கொண்டார்.

கிளைடர் விமானம் பறந்து மேலே போன போது கண்ணீர் மல்க 'சல்யூட்' செய்தபடி நின்றிருந்தான் கந்தன்.

லாஸ் ஏஞ்சேல்ஸ் ஒலிம்பிக்ஸ்

—குண்டுமணி

1932—ம் வருஷம் ஒலிம்பிக் நடத்திய லாஸ் ஏஞ்சேல்ஸ் மறுபடியும் 52 வருஷங்களுக்குப் பிறகு 1984—ஆம் ஆண்டில் ஒலிம்பிக் பந்தயம் நடத்தும் பாக்கியத்தை அடைந்திருக்கிறது. அகில உலக ஒலிம்பிக் கமிட்டி நிர்வாகப் பொறுப்பை நிதி 'காரண்டி' கொடுத்த பிறகே லாஸ் ஏஞ்சேல்ஸுக்கு வழங்க முன் வந்தது!

1932—ம் வருஷம் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகள் லாஸ் ஏஞ்சேல்ஸ் நினைவு கொலாசியம் (Los angeles Memorial Coliseum) பல புதிய வசதிகளோடு 1984 ஒலிம்பிக்ஸை நிறைவேற்றப் போகிறது. சைக்கிள் போட்டிக்காக ஒரு புது அரங்கு — 'வெலோடிரோம்' நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. நீச்சல்போட்டிகளுக்கும் ஒரு புதிய ஸ்டேடியம் உருவாகியிருக்கிறது. இவை தவிர லாஸ் ஏஞ்சேல்ஸ் அருகிலுள்ள பல சர்வ கலாசாலைகளிலுள்ள ஸ்டேடியங்கள், ஹால்களில் போட்டிகள் நடக்கும். மின் விசைப் படகுப் போட்டிகள், படகுப் போட்டிகள், லாங்—பீச்சில், காஸ்டாஸ் ஏரியில் நடைபெறவிருக்கின்றன. லாஸ் ஏஞ்சேல்ஸ் நினைவு விளையாட்டு அரங்கு புனர் நிர்மாணம் செய்யப்பட்டு, ரப்பர்த் தரைகள் அமைக்கப்பட்டுப் புது மெருகு பெறும். இந்த அரங்கில் 92,604 ரஸிகர்கள் அமர்ந்து போட்டிகளைப் பார்த்து மகிழலாம்.

✕ அமெரிக்க ஜிம்னாஸ்டிக் கலைஞர் கேலார்ட்



1984 ஒலிம்பிக் போட்டிகளில் பல புதிய நிகழ்ச்சிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

பெண்கள் சைக்கிள் போட்டி முதல் தடவையாக லாஸ் ஏஞ்சேல்ஸ் ஒலிம்பிக்கில் இடம் பெற்றிருக்கிறது. நீச்சல் போட்டிகளில் 200 மீட்டர் மெட்லி ரேஸ், 4 × 100 மீட்டர் ப்ரீ ஸ்டைல் நீச்சல் போட்டிகள் மறுபடியும் சேர்க்கப்பட்டுள்ளன. பிஸ்டல், ஏர் ரைபிள், ஸ்டாண்டர்ட், ரைபிள் போட்டிகள் புதிதாகப் பெண்களுக்கு ஒலிம்பிக்கில் இணைத்திருக்கிறார்கள். ஓட்டப் பந்தயங்களில் பெண்களுக்கு மாரத்தான் பந்தயம் 300 மீட்டர், 400 மீட்டர் ஹர்டில் பந்தயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இவ்வாறு ஒலிம்பிக்கில் கிட்டத்தட்ட 215 அதிகார பூர்வமான பந்தய நிகழ்ச்சிகளும், பேஸ் பால் டிமான்ஸ்டிரேஷனும் நடைபெறவிருக்கின்றன. இந்த லாஸ் சேல்ஸ் ஒலிம்பிக்கில் சீனா இடம்பெறுவது தனி விசேஷம். 1932 லாஸ் ஏஞ்சேல்ஸ் ஒலிம்பிக்கில் தான் முதல் சீன ஓட்டப் பந்தய வீரர் செல் சூன் லியூ கலந்து கொண்டு சிறப்புற்றார் என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம்!

கலிபோர்னியாவிலுள்ள லாஸ் ஏஞ்சேல்ஸ் 'தேவதைகளின் நகரம்' என்ற புகழைப் பெற்றது. கிட்டத்தட்ட மூன்று மில்லியன் மக்கள் இந்த நகரத்தில் வசிக்கிறார்கள். லாஸ் ஏஞ்சேல்ஸ் நகரம் விஞ்ஞான தொழில் நுணுக்கங்களுக்குப் புகழ் பெற்ற நகரம். கலிபோர்னியா தொழில் நுணுக்கக் கழகம் 19 நோபெல் பரிசு வெற்றியாளர்களைத் தந்திருக்கிறது என்றால் அதன் பெருமையை உணரலாம்.

மூன்று வருஷங்களுக்கு முன்னால் தான் லாஸ் ஏஞ்சேல்ஸ் நகரம் தனது இருநூறாவது பிறந்தநாளைக் கொண்டாடியது. 1781—ம் வருஷம் மெக்ஸி



✖ ஓட்டப் பந்தய வீராங்கனை மேரி டெக்கர்.

கோவிலிருந்து வந்த பாதிரிமார்களினால் இந்த நகரம் உருவாக்கப்பட்டது. உலகில் ஹாலிவுட் சினிமா நகரமாகப் பிரசித்தியடைந்ததும் லாஸ் ஏஞ்சேல்ஸின் பெருமையை இன்னும் ஒரு படி உயர்த்தியது.

லாஸ் ஏஞ்சேல்ஸில் உலக உணவுகள் அனைத்தும் கிடைக்கும். ஒரு தனிக் காட்சி சாலையில், பல சரக்குக்கடைகளில் ஆங்கிலம், ஹீப்ரு, சீனம், பார்ஸி, குஜராத்தி மொழிகளில் போர்டுகள் இருக்கும்.

லாஸ் ஏஞ்சேல்ஸ் நகரத்தில் மத்தியானம் வெய்யில் கடுமையாக இருக்கும். ஆகவே லாஸ் ஏஞ்சேல்ஸ் ஒலிம்பிக் நிர்வாகிகள் பல போட்டிகளைக் காலை குளிர் நேரங்களிலும் மாலை நேரங்களிலும் நடத்தவிருக்கிறார்கள்.

லாஸ் ஏஞ்சேல்ஸ் ஒலிம்பிக்கை நடத்தும் பெரும் பொறுப்பை ஏற்றிருப்பவர் நாற்பத்தி ஐந்து வயது பீட்டர் உபரோத். இவர் வெற்றிகரமான வணிகர். ஓட்டப் பந்தய வீரர் கூட. 1956 ஒலிம்பிக் போட்டியில் வாட்டர் போலோ போட்டியில் கலந்து கொண்டிருக்கிறார். இந்த ஒலிம்பிக் போட்டிகளுக்கு ஆகும் செலவு 500 மில்லியன் டாலர் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். 1984 ஒலிம்பிக்கில் பதினேழு புதிய விளையாட்டுப் போட்டிகள் சேர்க்கப்பட்டுள்ளன. 150 நாடுகளிலிருந்து கிட்டத்தட்ட 12,000 விளையாட்டுக் கலைஞர்கள் 1984 ஒலிம்பிக்கில் பங்கேற்கிறார்கள். பத்திரிகை நிருபர்களின் எண்ணிக்கை எட்டாயிரத்தை எட்டுமாம்! முன்பெல்லாம் ஒலிம்பிக்குக்கு நன்கொடை, லாட்டரி வாயிலாக நிதிகளைச் சேகரிப்பார்கள். ஆனால் உபரோத் இந்த வழிகளைக் கையாளப் போவதில்லை என்று உறுதியளித்திருக்கிறார். லாட்டரிகளுக்குக் கலிபோர்னியாவில் தடை விதிக்கப்பட்

✖ ஹெல்சிங்கியில் உலக ரிகார்டு கண்ட கார்ல் லூயிஸ்



டிருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம்.

இந்தத் தடவைதான் ஒலிம்பிக் போட்டி ஒரு நகரத்துக்குக் கொடுப்பதற்குப் பதிலாக ஒரு வணிகக் குழுவுக்கு விடப்பட்டிருக்கிறது! ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கு உபரோத் 30 ஆதரவாளர்களை அணுகி நிதி வசதி பெற்றிருக்கிறார்.

நவீன ஒலிம்பிக்கைத் தோற்றுவித்த கோமகன் கூபர்டீன் 'தசைக்கும் மனத்துக்கும் திருமணம் என்பதுதான் ஒலிம்பிக்கின் குறிக்கோள்' என்கிறார். ஒலிம்பிக் போட்டி நிகழ்ச்சிகளோடு பன்னிரண்டு வாரங்கள் கலைநிகழ்ச்சிகள் நடைபெறவிருக்கின்றன. கனடா, ஜோர்டான், கொரியா குடியரசு, ஜப்பான், பிரிட்டன், மெக்ஸிகோ நடனக் கலைஞர்கள் இந்தக் கலைவிழாக்களில் பங்கேற்பார்கள். பல நாட்டு நாடகக் கலைஞர்களும், இந்தக் கலை விழாக்களில் கலந்து கொள்கிறார்கள்.

ஒலிம்பிக் ஒளிவிளக்கு கிரீஸிலிருந்து வந்திறக்கியதும் பத்தாயிரம் ஓட்ட வீரர்கள் ஐம்பது அமெரிக்க ராஜ்யங்களிலும், கொலம்பியா மாவட்டத்திலும் பவனி வருவார்கள். கடைசி ஓட்டப் பந்தய வீரர் லாஸ் ஏஞ்சேல்ஸ் நினைவு அரங்கினை வந்தடைந்ததும் 1984 ஜுலை 28-ந் தேதி மாலை அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ரீகன் அதிகாரபூர்வமாக 23-வது ஒலிம்பிக் போட்டியினைத் தொடங்கி வைப்பார்.

இந்த ஒலிம்பிக் ஒளிவிளக்கு ஓட்டத்தில் 1936 ஒலிம்பிக் போட்டி ஓட்ட வீரர் ஜெஸி ஓவனின் பேத்தியும், 1912 அமெரிக்க நட்சத்திரம் ஜிம் தோர்ப்பின் பேரனும், பங்கேற்கிறார்கள். தலைமுறைக்குக் கௌரவம் தருவது பாராட்டுக்குரியது.

கம்ப்யூட்டர்கள் அரை மில்லியன் டாலர் செலவில் ஒலிம்பிக்கில் நிறுவப்படுகின்றன. இவை துல்லியமாக, நுணுக்கமாக ஒரு 'ஷாட்புட்' கலைஞரின் சாதனையிலிருந்து வாலி பால் ஆட்டக்காரரின் திறமை வரை கோடிட்டுக் காட்டும். கம்ப்யூட்டர் ஒரு தட்டு வீச்சு சாம்பியனின் தவறை சுட்டிக் காட்டித் திருத்த வைத்திருக்கிறது. ஒலிம்பிக் தட்டு வீச்சு சாம்பியன் மேக் வில்கின்ஸ் அதை வீசுவதற்கு முன்னால் சுழற்சிக்கு அதிக அளவு ஓட்டத்தைக் கைக்கொண்டு வீசுவதனால் ஏற்படும் விளைவு, பாதகத்தை அறிந்து திருத்திக் கொண்டார். வெற்றிக்குக் கம்ப்யூட்டர் வழிவகுத்து விட்டது!

லாஸ்ஏஞ்சேல்ஸ் ஒலிம்பிக்கில் டயானா டர்ஹாம் என்ற பதினைந்து வயதுச் சிறுமி ஜிம்னாசியப் போட்டியில் கலந்து கொள்ளவிருக்கிறார். இந்தச் சிறுமியைப் பயிற்றுவிப்பவர் ரோமானியப் பயிற்சியாளர் பேலகாரோல்யி. இவர்தான் நாடியா கொமனஸ்யை ஒலிம்பிக் போட்டிக்குத் தயாரித்து அளித்தவர். டயானா டர்ஹாம் அமெரிக்க ஜிம்னாசியப் போட்டியில் முதல் தடவை விருது பெற்ற கறுப்புப் பெண்ணாகும்.

அமெரிக்கா 1936-ம் ஆண்டிலிருந்து கூடைப் பந்தாட்டத்தில்

நாய்களில் பல சாதி



அல்சேஷியன் (Alsatian)
டாக்ஷண்ட் (Dachshund)
டால்மேஷியன் (Dalmatian),
புல் டெரியர் (Bull Terrier)
புல் டாக் (Bull dog),
ஃபாக்ஸ் டெரியர் (Fox terrier)
ஃபாக்ஸ் ஹவுண்ட் (Fox hound)
காக்கர் ஸ்பானியல் (Cocker Spanial)
பீக்கிங்கீஸ் (Pekingese)
பாமரேனியன் (Pomeranian)
ஆஸ்திரேலியன் டெரியர் (australian terrier),
ஆபர்டீன் டெரியர் (aberdeen terrier)
ஸ்காட்ச் டெரியர் (Scotch Terrer)
கிரேட்டேன் (The great dane)





தென்னிந்தியாவில் உள்ள முக்கிய சாதி நாய்கள்:
கோம்பை,
இராஜ பாளையம்.

கல்லும் கடவுளும் - நா.சீ.வரதராஜன்

கல்லைத் தட்டிப் பார்க்கின்றான் — சிற்பி
கனவை அதிலே சேர்க்கின்றான்;
அல்லும் பகலும் உழைக்கின்றான்—பின்
அழகுச் சிலையாய் இழைக்கின்றான்.

யாரோ ஒருவர் வருகின்றார் — விலை
அதற்குக் கொடுத்துப் பெறுகின்றார்;
ஊரார் எழுப்பும் ஆலயத்தில் — தெய்வ
உருவாய் அதனைத் தருகின்றார்.

கல்லே சிலையாய் ஆகியதும் — பின்
கடவுள் எனவே மாறியதும்
எல்லாம் மனத்தின் நிலையாலே — நம்
எண்ணம் கொடுக்கும் ஒளியாலே!



ஒலிம்பிக் வெற்றி வீரராகத் திகழ்ந்திருக்கிறது. 1972—ம் வருஷம் சோவியத் நாடு கூடைப் பந்தாட்டத்தில் வென்று அமெரிக்காவைத் திணற அடித்தது. 1980 மாஸ்கோ ஒலிம்பிக்கில் அமெரிக்கா பங்கேற்கவில்லை. 1984 ஒலிம்பிக்கில் கூடைப் பந்தாட்டத்தில் அமெரிக்கா பலத்த போட்டியாளராகத் திகழக் கடுமையாகப் பயிற்சி செய்து வருகிறது.

ஓல்கா மெக்கார் மீக் நாலு தடவை ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கங்கள் சூடிய பாட்டின் புதல்வி. ஜிம்னாசியத்தில் முதலில் ஈடுபட்டுச் செல்வி மெக்கார்மிக் நீச்சல் போட்டிகளில் பயிற்சி பெற்றுப் பங்கேற்கிறார். இவர் தமக்குத் தங்கப் பதக்கம் கிடைக்கச் சீன ஐரோப்பிய வீராங்கனைகளை ஜெயிக்க வேண்டியிருக்கும்!

லாஸ் ஏஞ்சேல்ஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்கு டெலிவிஷன் உரிமை விற்பனையில் அதிக அளவு வருவாய் கிட்டியிருக்கிறது. அமெரிக்க பிராட்காஸ்டிங் கம்பெனி 225 மில்லியன் டாலர் ரிகார்டு ஏலத்தில் எடுத்து அந்த உரிமையைப் பெற்றிருக்கிறது. 220 மணி நேரம் அமெரிக்க பிராட்காஸ்டிங் கம்பெனி டெலிவிஷன் ஒலிபரப்பு நடத்தும். உலகம் முழுக்கப் பல டெலிவிஷன் கம்பெனிகளின் ஒத்துழைப்போடு ஒளிபரப்பும்!

ஒலிம்பிக் டிக்கெட் விற்பனையிலிருந்து 590 மில்லியன் டாலர் கிடைக்கும் என்று ஒலிம்பிக் நிர்வாகிகள் எதிர்பார்க்கிறார்கள். அகில உலகத்திலிருந்தும் வரும் ஒலிம்பிக் போட்டியாளருக்குப் பாதுகாப்புத் தருவதில் மிகுந்த அக்கறை செலுத்தவிருக்கிறார்கள். இந்தப் பாதுகாப்புப்படைக்குத் தலைமை வகிப்பவர் பெயர் என்ன தெரியுமா? பெஸ்ட்!

லாஸ் ஏன்செல்ஸ் நினைவு கொலோசியத்தில் ஒலிம்பிக் தொடக்க, நிறைவு விழாக்கள் நடைபெறவிருக்கின்றன. லாஸ் ஏஞ்சேல்ஸ் ஸ்போர்ட்ஸ் ஏரினாவில் பாக்ஸிங் பந்தயங்கள் நடக்கும். மாக்டொனால்ட் நீச்சல் ஸ்டேடியத்தில் நீச்சல் போட்டிகள் நடப்பதற்கான நவீன சாதனங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. லாஸ் பீச்சன்வென்ஷன் செண்டர் காம்ப்ளக்சில் வாலிபால் போட்டிகளை நடத்தவிருக்கிறார்கள். உலகத்திலேயே பிரசித்தமான ஸ்டேடியம் 'ரோஸ் பௌல்' கால் பந்தாட்டப் போட்டிகளை நடத்தும் இடமாகத் திகழும். பால்லி பெவிலியனில் ஜிம்னாசியப் போட்டிகள் கண்ணைக் கவரும்படி நிகழவிருக்கின்றன.

லாஸ் ஏஞ்சேல்ஸ் ஒலிம்பிக் நடக்கும் இடத்துக்கு அருகில்தான் குழந்தைகளுக்கான டிஸ்னிலாண்ட் இருக்கிறது.

1984 . ஒலிம்பிக் போட்டிகளின் தொடக்க நாளை அனைவருமே மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஜூலை 28—ந் தேதி என்று வரும் என்று ஒலிம்பிக் ரசிகர்கள் விரும்பிக் காத்திருக்கிறார்கள். வாழ்க்கையில் உன்னத வேளையல்லவா அது!



என் கதையைக் கேளுங்கள் என்கிறது நீர்யானை!

கைகளின் உதவியில்லாமலே உங்களால் கண்களை மூடிக்கொள்ள முடிகிறது. ஆனால், காதுகளை அப்படி மூடிக் கொள்ள முடியுமா? அல்லது, மூக்கை மூடிக்கொள்ள முடியுமா? உங்களால் முடியாது. ஆனால், என்னால் முடியும். ஆம், உண்மையைத்தான் சொல்லுகிறேன். நான் தண்ணீருக்குள் இருக்கும்போது காதுகளையும் மூக்கையும் இறுக மூடிக் கொள்வேன். ஒரு சொட்டுத் தண்ணீர்கூட அவைகளுக்குள் புக முடியாது!

பகல் நேரம் முழுவதும் நான் தண்ணீருக்குள்ளேதான் இருப்பேன். இரண்டு நிமிஷத்துக்கு ஒருமுறை தண்ணீருக்கு வெளியே தலையைத் தூக்குவேன். மூச்சுவிட்டுத் திரும்பவும் தண்ணீருக்குள் தலையை இழுத்துக் கொள்வேன்.

தண்ணீருக்குள் இருக்கும் போது எனக்கு பலம் அதிகம். தரையில் என்னால் வேகமாக நடக்க முடியாது. ஆனால், தண்ணீரில் வேகமாக நடப்பேன்; விரைவாகவும் நீந்துவேன்.

பகல் முழுவதும் நீரில் கிடந்தாலும் சூரியன் மறைந்ததும் வெளியில் வந்து விடுவேன். அங்குமிங்கும் அலைந்து இரை தேடுவேன். தினமும் 400 பவுண்டுக்குக் குறையாமல் ஆகாரம் சாப்பிடுவேன். அதற்குக் குறைந்தால், என் பசி அடங்காது. நெல் முதலிய தானியங்களையும் கரும்பு, செடி, கொடி முதலியவற்றையும் தின்பேன். இரை தேடுவதற்காக நான் சிலசமயம் 20, 30 மைல்கூட நடந்து போய் வருவேன். அந்தச் சமயம், என்னுடைய பெருமூச்சும் உறுமலும் ஒரு மைல் தூரத்துக்கு நன்றாகக் கேட்கும்.

வயல்களுக்குள் நான் புகுந்துவிட்டால், பயிர்களெல்லாம் அடியோடு நாசம் தான். நான் தின்பதைவிட என் கால்கள் பட்டு நாசமாகும் பயிர்களே அதிகமாயிருக்கும்.


என் வாயைப் பார்த்தீர்களா? எவ்வளவு பெரிதாயிருக்கிறது! பிராணிகளிலே திமிங்கிலத்திற்கு அடுத்தபடி பெரியது என் வாய்தான். மூன்று சக்கர சைக்கிள் வண்டியை என் வாய்க்குள் நிறுத்தி, அதன்மேல் ஒரு சிறுவன் அல்லது ஒரு சிறுமி தாராளமாக உட்கார்ந்து கொள்ளலாம். தலையில் இடிக்காது! அவ்வளவு பெரியது என் வாய்! என் வாய் மட்டும்தானா பெரியது? நான் விடும் கொட்டாவிகூடப் பெரிதாகவே இருக்கும்!

சிலர் சொல்லுகிறார்கள், என்னுடைய வாய் என்னுடைய உடம்புக்குத் தக்க அளவிலே இல்லையாம். உண்மைதான்; ஒப்புக் கொள்ளுகிறேன். வாய் பெரிதாயிருப்பதால், தலையும் பெரிதாயிருக்கிறது. இந்தப் பெரிய தலையைத் தூக்கிக்கொண்டு நிற்பதே எனக்குச் சிரமமாகத்தான் இருக்கிறது. அதனால்தான் பூமியில் நிற்கும்போது அடிக்கடி தரையின் மேல் அல்லது மரத்தின் மேல் தாடையை வைத்துக்கொண்டு நிற்கிறேன்.

எனக்கு இவ்வளவு பெரிய வாயைக் கொடுத்த கடவுள், வால் விஷயத்

திலும் கொஞ்சம் தாராளமாக இருந்திருக்கலாம். மிகவும் சிக்கனத்தைக் காட்டி விட்டார். பன்றி வால் போல் எட்டு அங்குல நீளமே வைத்திருக்கிறார்!

பன்றியைப் பற்றிச் சொன்னதும், பன்றிக்கும் எனக்கும் என்ன உறவு என்ற ஆராய்ச்சியில் இறங்கி விடாதீர்கள்! பன்றிக்கும் எனக்கும் நெருங்கிய உறவு இல்லை. எட்டத்து உறவுதான். ஆனாலும், ஐரோப்பியரில் சிலர் என்னை, 'ஆற்றுப் பன்றி' என்று அழைக்கிறார்கள். ஆனால், நீங்கள் மிகவும் நல்லவர்கள். நல்லவர்களாக இருப்பதால்தான், நீங்கள் என்னை 'ஆற்றுப் பன்றி' என்று அழைக்காமல் 'நீர் யானை' என்று கௌரவமாக அழைக்கிறீர்கள்.



உண்மையிலே யானைக்கு அடுத்தபடி பெரிய மிருகம் நான்தான். யானைக்கும் எனக்கும் உருவத்தில் ஓரளவு ஒற்றுமை இருந்தாலும், நான் யானையைப் போல் முதலையைக் கண்டு பயப்பட மாட்டேன். முன்னொரு காலத்தில் கஜேந்திரன் என்ற யானையின் காலை முதலை கவ்விப் பிடித்துக் கொண்டதாம். கஜேந்திரன் தப்ப வழி தெரியாமல், "ஆதி மூலமே!" என்று கதறி ஆபத்பாந் தவனை விஷ்ணுவை அழைத்ததாம். விஷ்ணு உடனே ஓடோடி வந்து, தம்முடைய சக்கராயுதத்தால் முதலையைக் கொன்று, கஜேந்திரனைக் காப்பாற்றினாராம் — இப்படி ஒரு கதை சொல்லுகிறீர்களல்லவா? ஆனால், அந்த முதலையின் ஜம்பம் என்னிடம் பலிக்காது!

என்னைக் கண்டாலே முதலை பயந்து நடுநடுங்கும். ஒரு சமயம், ஒரு பொல்லாத முதலை என் அருகில் வந்தது. உடனே, நான் என் பெரிய வாயால் அதன் முதுகைப் பலமாகப் பிடித்துக் கொண்டேன். என்னுடைய கோரைப் பற்களால் அதன் முதுகு ஓட்டைக் கடித்து நொறுக்கி, அன்றே அதை எமலோகத்துக்கு அனுப்பிவிட்டேன். முதலைகள் நிறைய இருக்கும் ஆற்றில்கூட நாங்கள் கவலையில்லாமல் வாழ்வோம்!

நானும் என் இனத்தவரும் கூட்டம் கூட்டமாக ஆப்பிரிக்காவிலுள்ள ஏரிகளிலும், ஆறுகளிலும் நிம்மதியாகப் பகல் நேரத்தில் தூங்கிக் கொண்டிருப்போம். அப்போது எதிர்பாராத விதமாக அந்தப் பக்கமாக ஒரு படகு வந்துவிட்டால், அதன் கதி அதோ கதிதான்! படகைக் கவிழ்த்து, உள்ளே இருக்கும் எல்லோரையும் மூழ்கடித்து விடுவோம்.

நானும் என் இனத்தவரும் பயிர்களை நாசம் செய்வதால், குடியானவர்களுக்கெல்லாம் எங்கள் மீது சொல்ல முடியாத கோபம். எங்களில் எத்தனையோ பேரை அவர்கள் வேட்டையாடிக் கொன்று விட்டார்கள். ஆப்பிரிக்காவிலுள்ள பூர்வ குடி மக்களுக்கு



எங்கள் மாமிசம் மிகவும் பிடிக்கும். அதற்காகவும் அவர்கள் வேட்டையாடுவார்கள்.

எங்களுடைய தந்தப் பற்களுக்கு முன்பெல்லாம் அதிகக் கிராக்கி இருந்தது. யானைத் தந்தத்தைப் போல் அவற்றிலும் பல சாமான்கள் செய்து வந்தார்கள். இப்போது அதற்கு அவ்வளவு கிராக்கியில்லை. எங்களுடைய தோலுக்குத்தான் இப்போது மதிப்பு அதிகம். மற்ற மிருகங்களின் தோல்களையெல்லாம் பதனிட்டு உபயோகப் படுத்த வேண்டும். இல்லாவிட்டால்...? சில நாட்களில் கரடு முரடாகிவிடும். ஆனால், எங்களுடைய தோல் எப்போதும் வழுவழுப்பாகவும், எளிதில் வளையக் கூடியதாகவும் இருக்கும். சவுக்கு செய்வதற்கு, எங்களுடைய தோலைப் போல் வேறு தகுதியான தோல் இந்த உலகத்திலேயே இல்லையாம்!

எட்டு மாதம் சுமந்து பெற்றேன், என் அருமைக் குழந்தையை. அது நடப்பதற்கு முன்பே நீந்த ஆரம்பித்துவிட்டது! சில சமயங்களில் நான் அதை என் முதுகில் சுமந்து கொண்டே நீந்துவேன். வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு அக்காட்சி வேடிக்கையாயிருக்கும். வாத்து தண்ணீரில் நகருவது போல், என் குழந்தையும் தண்ணீரில் தானாக நகருகிறதோ என்றுகூடச் சிலர் சந்தேகப் படுவார்கள். என் குழந்தைக்குப் பசி எடுத்தால், தண்ணீரில் இறக்கி விடுவேன். தண்ணீருக்குள் இருந்தபடியே அது என்னிடம் பால்குடிக்கும்!

ஆனாலும், எத்தனை நாட்களுக்குப் பாலைக் குடித்துக் கொண்டே இருப்பது? இரை தேடத் தெரிய வேண்டாமா? இன்னும் சில நாட்கள் சென்றதும், நான் அதை இரவு நேரத்தில் வெளியிலே அழைத்துச் செல்வேன். எங்கெங்கே உணவு கிடைக்கும் என்பதையும் சொல்லிக் கொடுப்பேன்.

இதையெல்லாம் நான்தானே சொல்லிக் கொடுக்க வேண்டும்? வேறு யார் சொல்லிக் கொடுப்பார்கள்?

(—'எங்கள் கதையைக் கேளுங்கள்' என்ற புத்தகத்திலிருந்து.)





கோகுலம் சிறுவர் சங்கம் உறுப்பினர் பட்டியல்—தொடர்ச்சி
உறுப்பினர் எண், பெயர், முகவரி

1758. கோ. மதனகோபால், 8, இரமணபுரம், மேட்டுப்பாளையம் அஞ்சல், பாண்டிச்சேரி —605 010.

1759. மு. சிவகுமார், 10, நர்ஸ் குடியிருப்பு, கோட்டைக்கரை, கும்மிடிப்பூண்டி-601 201

1760. ஜெ. வெங்கட்ராகவன், 21/120, சன்னதி தெரு, வடுவூர், தஞ்சாவூர் மாவட்டம்.

1761. டி. அருணா, 17, ராசா காடு தெரு, எஸ். கே. சி. ரோடு, ஈரோடு—638 001.

1762. ஜெ. சீனிவாசன், 2, செட்டியார் காலனி, தக்கா தெரு, விழுப்புரம்—605 602.

1763. அ. ராமசாமி, 36/2, வடக்குத்தெரு, சிந்து பூந்துறை, திருநெல்வேலி—1.

1764. எஸ். கங்கா, 2, 2—வது 9 வார்டு, வால்மீகி நகர், திருவான்மியூர், சென்னை—41.

1765. ஆர். ஆனந்த் 53, புஷ்பாவதி அம்மாள் தெரு, சென்னை—33.

1766. ஆர். பத்மனாபன், 53, புஷ்பாவதி அம்மாள் தெரு, சென்னை—33.

1767. வி. ஸ்ரீசரண், 427, கீழ மூன்றாம் வீதி, புதுக்கோட்டை.

1768. மு. சிராஜுதீன் அமீர், 4/2—12, முஸ்லிம் நடுத்தெரு, திருப்பத்தூர்—623 211.

1769. சி. ஸ்ரீவித்யா, 17, பராங்குச தேசிகர் அக்ரகாரம், ஹரித்திரா நதி போஸ்ட், மன்னார்குடி.

1770. எல். ஜான்சன், 32, சுப்பையா நகர், தட்டாஞ்சாவடி, பாண்டிச்சேரி—605 009.

1771. வி. சிவராமகிருஷ்ணன், 'ஸ்ரீகிருஷ்ண பவன்' ஆலங்குடி—622 301.

1772. K.C. Sudhakar, Gali No. 5, House No. 11770 Satnagar Karolbagh New Delhi-110005

1773. என். பாபு, 10, முக்கூட்டு ராமசாமி நாயுடு தெரு, பீளமேடு.

1774. க. ஹரிஹரன், 'ஸ்ரீவிஸ்வம்' பிளாட்—56, அம்பத்தூர், சென்னை—53.

1775. க. சாரதா, 'ஸ்ரீவிஸ்வம்' பிளாட் எண்—56, அம்பத்தூர், சென்னை—53.

1776. ஜி. சுந்தரி, 37/1518, திப்பு தெரு, கோட்டை, திருவனந்தபுரம்—695 023.

1777. வெ. சங்கரராமன், த/பெ. எம். ஆர். சந்திரா, டைப்பிஸ்ட், பாரஸ்டு காலனி, லண்டன் மிஷன், திருப்பத்தூர்—635 601.

1778. த. சிவகுமார், 16, சாலை விநாயகர் கோவில் தெரு, தர்மபுரி—636 701.

1779. எம். தமிழ்வாணன், 5, புதுத்தெரு, காவேரிப்பாக்கம், திண்டிவனம்—604 001.

1780. ஆர். அனுராதா, 154, மெயின் ரோடு, கிருஷ்ணா நகர், பம்மல், சென்னை—600 075.

1781. C. Maduvanthi, 68, Somwarpeth, Pune-411 011.

1782. எம். பாஸ்கரன், 117—பி, பழைய தபால் அலுவலகத் தெரு, கும்மிடிப்பூண்டி 601201.

1783. எம். எஸ். முரளி கிருஷ்ணன், 25, தெற்கு அக்ரஹாரம், பெரியகுளம்—626 501.

1784. எம். எஸ். ராம்மோகன், 25, தெற்கு அக்ரஹாரம், பெரியகுளம்—626 501.

1785. பி. ராமசுப்பிரமணியன், 23, நல்லி வீராசாமி செட்டி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை—5.

1786. தயாநிதி, த/பெ. எஸ். தங்கவேல்சாமி, அன்னுசாலை, பாலு செட்டி சத்திரம், காஞ்சிபுரம் (வழி) — 631 551.

1787. கே. பாலாஜி, 1—ஜி, பெருமாள் கோவில் கிழக்குத் தெரு, மடப்புரம், திருவாரூர் தாலுகா.

1788. பி. ஸ்ரீனிவாசன், 23, நீலி வீராசாமி செட்டித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை—5.

1789. ஏ. பி. இரவிகுமார், 8—ஏ, விஜயாதெரு, வடபழனி, சென்னை—26.

1790. எஸ். ரவி, 19/1, குண்டம்ம செட்டித்தெரு, வாலாஜாபேட்டை (வ. ஆ. மா.)

1791. எம். ராஜேஷ், 32, ரேஸ் வியூ ரோடு, ஊட்டி—1.

1792. கே. வைரமுத்து 11—4/24, நொய்யல் வீதி, காமாட்சிபுரம், ஒண்டிப்புதூர், கோவை—16.

1793. கே. பௌர்ணமி, 11—4/24, நொய்யல் வீதி, காமாட்சிபுரம், ஒண்டிப்புதூர், கோவை—16.

1794. ர. சுதர்சன், த பெ. எம். ரகுநாதன், ஆசிரியர், அரசு சீர்திருத்தப்பள்ளி, தட்டப்பாறை (போஸ்ட்) திருநெல்வேலி மாவட்டம்—628 304.

1795. வி. பிரபாவதி, 'தேவரகம்' கவுண்டன்பட்டி ரோடு, உசிலம்பட்டி போஸ்ட், மதுரை மாவட்டம்.

1796. ஜெ. அரங்கநாதன், த பெ. ஜெயசீலன், தலைமை அஞ்சலக, தலைமை அதிகாரி, திருக்கோவிலூர்—605 757.

1797. ஜெ. ரேவதி, த/பெ. ஜெயசீலன், தலைமை அஞ்சலக, தலைமை அதிகாரி, திருக்கோவிலூர்—605 757.

1798. சிவ. நெடுமாறன், கீழைப்பெருமழை (அஞ்சல்), (வழி), குன்னலூர், தஞ்சாவூர் மாவட்டம்.


1799. கோ. சௌமிய நாராயணன், 8/1488, தட்டாரசந்து, மேலவீதி, தஞ்சாவூர்—9.

1800. கோ. சந்திரசேகர், 12—பி, 7—வது தெரு, பிரைண்ட் நகர், தூத்துக்குடி—628 003.

1801. கே. ஆர். கௌரி, 38, பந்தடி 4—வது தெரு, மதுரை—625001.

1802. ந. ஆடலரசு, 9, விரிவுரையாளர் இல்லம், பல்கலைநகர், மதுரை—21.

1803. ஆர். மாரிசெல்வம், த/பெ. ராமச்சந்திரன், ரயில்வே ஸ்டேஷன் ரோடு, நாலாட்டின் புதூர் (போஸ்ட்), கோவில்பட்டி தாலுகா, திருநெல்வேலி—627 716.



1804. மீ. மீனாட்சி, 6—ஏ, பழைய சொக்கநாதர் கோவில் தெரு, மதுரை—1.
1805. எஸ். வி. ராஜசேகரன், 8, மாரியம்மன் கோயில் தெரு, வேடசந்தூர் (போஸ்ட்) —624 710.
1806. த. பாலசுப்பிரமணி 7 2, கிழக்கு மந்தை தெரு, ஜயம்பாளையம், மதுரைமாவட்டம் —624203.
1807. ந. மோகன், 13, மேட்டுத்தெரு, இராசிபுரம் (போஸ்ட்), சேலம் மாவட்டம்.
1808. ஆர். சந்திரசேகர், 6/122, காடாம்பாடி, காங்கயம், பாளையம் வழி, கோவை மாவட்டம்—641 404.
1809. மா. ஜஸ்மன், 9/12, கரைபரப்பா தேவர்வீதி, சூலூர்—641 402, கோவை மாவட்டம்
1810. எல். கணேஷ், 4, ஹட்கோ காலனி, டாடாபாத், கோவை-12.
1811. பா. ரூபன், 7/4, அரண்மனைத்தெரு, போடி நாயக்கனூர், மதுரை மாவட்டம்.
1812. ஏ. எச். உமர், ஃபாருக் 53, சின்னராவுத்தர் தெரு, வேட சந்தூர் (மதுரை) 624 710.
1813. ஜி. மீரா பிரியதர்சினி, பி—63, எச். டபிள்யூ. ப். காலனி, தூத்துக்குடி—628 007.
1814. எம். மகேஷ்வரன், 87 ஜே—4, சோலை இல்லம், கிழக்கு கோவிந்தாபுரம், திண்டுக்கல்.
1815. ஆர். ராதிகா, 'அவினாசி இல்லம்', அலமேலு மங்கம்மாள் லே அவுட், புலியகுளம், —கோவை—641 018.
1816. பா. சி. நந்தகுமார் 104, பென்னாடம் வெங்கடராமன் தெரு, சிங்கமெத்தை, சேலம்—1.
1817. ஆர். பி. விஜயராகவன், 'அவினாசி இல்லம்' 4/21, அலமேலு மங்கம்மாள் லே அவுட், புலியகுளம், கோவை—641 018.
1818. இ. அறிவழகன், ஓ—23, குண்டன்குளம் தெரு, பிளாக்—11, நெய்வேலி—3.
1819. நா. ஸ்ரீதரன், பிளாக்—2, டைப்—1, வீட்டு எண்—13, ஊராட்சிக் கோட்டை கேம்ப், குறுப்பநாயக்கன் பாளையம், (போஸ்ட்) பவானி மாவட்டம்.
1820. எஸ். பிரபு, த/பெ. டி. ஏ. சங்கரன், நிலவருவாய் ஆய்வாளர் குடியிருப்பு, கோட்டைமேடு. அந்தியன், பவானி மாவட்டம்.
1821. செ. சுப்பிரமணியன், த/பெ. வ. செல்லப்ப அய்யர், மாதர் சங்கத் தெரு, சலகண்டபுரம், —636 501, சேலம் மாவட்டம்.
1822. அ. ஸ்ரீவிஜயன், 8/6, ஜைன முதலியார் தெரு, கரந்தை, தஞ்சை—2.
1823. எல். முரளி, 85, ராஜா காலனி, கலெக்டர் ஆபீஸ் ரோடு, திருச்சி—620 001.
1824. ஜி. பாஸ்கர், 29—4பி, சிவன் வடக்குத் தெரு, பொறையார்—609 307
1825. ஜி பிரபாகர், 29பி, சிவன் வடக்குத் தெரு, பொறையார்-609307.
1826. ஜி. செந்தில், 10, பஜனை மடத்தெரு, மடப்புரம், திருவாரூர்—6100 02.
1827. வெ. கோபாலகிருஷ்ணன், 65, பக்தபுரி தெரு, கும்பகோணம்—612 001.
1828. எஸ். காயத்ரி; 1731, வெஸ்ட் மெயின் தெரு, தஞ்சாவூர்—613 009.
1829. க. பாலசுப்பிரமணி, 12, முனியசாமிபுரம், 2—வது தெரு, சிவந்தை, தூத்துக்குடி—3.
1830. பி. ஜெயகோபால், 62, பெரிய கடைத்தெரு, பழனி—624 601.
1831. ச. பூவண்ணன், 10—டி, பகவதி இல்லம், அண்ணாநகர், சண்முகபுரம், பழனி—2.
1832. எம். மீனு, 4, 2—வது தெரு, கிழக்கு சண்முகபுரம் காலனி, விழுப்புரம்—605 602.
1833. எம். பார்க்கவன், 4, 2—வது தெரு, கிழக்கு சண்முகபுரம் காலனி, விழுப்புரம்—605602
1834. ஜெ. ஹேமலதா, எம். 63/1, 4—வது குறுக்குத் தெரு, பெஸன்ட் நகர், சென்னை—90.
1835. எஸ். கணேஷ், பி—15, பி அன்ட் டி காலனி, ராயப்பேட்டை, சென்னை—14.
1836. சி. வெள்ளைச்சாமி சேகரன், 12, சின்னத்தாய் இல்லம், புதுநகர், திருமங்கலம், மதுரை மாவட்டம்.
1837. க. ஆனந்த கிருஷ்ணன், 9, போஸ்ட் ஆபீஸ் தெரு, பாளையங்கோட்டை—627 002.
1838. தி. மகேஷ், 17—பி, துராப் அலி தெரு, திருவண்ணாமலை—2 (வ. ஆ. மா.)
1839. சினி. பவானி லக்ஷ்மி, 185—ஏ, டாக்டர் அமிர்தசாமி ரோடு, இந்திராநகர், ஆத்தூர் சேலம் மாவட்டம்,
1840. பா. சிவசந்திரன், 40, புதுநகர், திருமங்கலம், மதுரை மாவட்டம்.
1841. சினி. கமலா, 185—ஏ, டாக்டர் அமிர்தசாமி ரோடு, இந்திரா நகர், ஆத்தூர், சேலம் மாவட்டம்,
1842. பி. சிதம்பர ஈஸ்வரி, 5—ஏ, வடக்குத் தெரு, மீனாட்சிபுரம், நாகர்கோவில்,
1843. கே. பாலசுந்தர வடிவேல், 9, சின்னமலை கவுண்டர் நகர், லக்ஷ்மிபுரம், உப்பிலிப் பாளையம், கோவை—15.
1844. ம. ரகோ, 33, சரஸ்வதி நகர், கடலூர், புது டவுன்.
1845. ஜி. ராஜா, 6, முத்துக்கிருஷ்ணன் தெரு, சென்னை—79.
1846. ஜி. பாஸ்கர், 84, பெரிய செட்டித் தெரு, செங்கல்பட்டு.
1847. கே. சரவணன், 7/3—ஏ, காந்திநகர், கரூர்—1.
1848. இரா. ஸ்ரீநிவாச ராகவன், 4, 29—வது தெரு, தில்லை கங்கா நகர், சென்னை—61.
1849. கே. அனுராதா, 18, பி.பி. ரோடு, பெரம்பூர், சென்னை—39.
1850. கோ. சி. தீபிகா, 333—எச், மணியம் காலனி, சுப்பிரமணியபுரம் (போஸ்ட்), கோவை—40.
1851. கோ. சி. ரூபா, 333—எச், மணியம் காலனி, சுப்பிரமணியபுரம் (போஸ்ட்) கோவை-40

(இன்னும் வரும்)



மோகினித் தீவு
அமரர் கல்கி
சித்திரக் கதை வடிவம்: ஆனந்தி படம்: வினு
இரண்டாவது உலக யுத்த காலம். பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியே தீர வேண்டிய நிர்ப்பந்த சூழ் நிலையில் தமிழர்கள்.
ஒரு பழைய கப்பலில் பிரயாணம் செய்தார்கள். ஜப்பானிய நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று பின் தொடர்வதாக அறிந்ததும் கப்பலின் காப்டன் அதனிடமிருந்து தப்ப ஒரு சிறிய தீவை நோக்கிக் கப்பலைச் செலுத்தினர்.
பாதுகாப்பான இடத்தில் நங்கூரம் பாய்ச்சினர்.
கப்பல் பயணிகளுள் ஒருவரான பாஸ்கரக் கவிராயர் கேட்டார்.
காப்டன்! எங்கே இருக்கிறோம்?
இலங்கைக்குத் தென் கிழக்கே. இதற்கு மோகினித் தீவு என்று பெயர்.
இந்தத் தீவில் பழங்காலத்து நாகரிகச் சின்னங்கள் இருக்கின்றன. போய்ப் பார்க்கலாமா?
உபதலைவனிடம் கப்பலை ஒப்படைத்து விட்டுக் கிளம்பினர் காப்டன்.
ஏதாவது ஒயர்லஸ் செய்தி வந்தால் கொடிகள் மூலம் தெரிவியுங்கள்.
யெஸ் ஸார்.


படகு கரை தட்டியதும் இறங்கி மலைச்சாரலில் கானகத்தினூடே சென்றனர்.
முன்னே நான் பார்த்ததற்குக் காடு அதிகமாக மண்டி விட்டது.
ஆகா!
என்ன அற்புதமான காட்சி!
வெகு நேரம் சென்று..
மிஸ்டர் பாஸ்கர்! போகலாம் வாருங்கள்.
நான் இன்றிரவு இங்கு தங்கி விட்டுப் பொழுது விடிந்ததும் கப்பலுக்கு வருகிறேன்.
எல்லோரும் சென்று விட, கவிராயர் மட்டும் தனித்திருந்தார்.
இது என்ன கனவா? மணிகளின் ஒலி கேட்கிறதே! தூபம் மணக்கிறதே!
ஆ! இந்தத் தீவில் யாரும் வசிக்கவில்லை என்றாரே காப்டன்! விசித்திரமான ஆடையணிகள் புனைந்த இவர்கள் யாராக இருக்கும்?




வாருங்கள்! வணக்கம்! தாங்கள் தமிழர்தானே?
ஆமாம்! நீங்களும் தமிழர்தான்; தெரிகிறது. இங்கு எப்போது வந்தீர்கள்?
நாங்கள் வந்து ஒரு யுகம் மாதிரித் தோன்றுகிறது. அந்தக் கப்பலில் நீங்கள் வந்தீர்களா? எங்கிருந்து?
பர்மாவிலிருந்து வருகிற கப்பல் இது. யுத்தம் காரணமாகத் தமிழர்கள் தாய் நாடு திரும்புகிறார்கள்.
என்ன! யுத்தத்தைக் கண்டு தமிழர்கள் பயப்படுவதா?
பயமில்லை; புத்திசாலித் தனம். ஒருவரை யொருவர் கொன்று மடிவதில் என்ன பெருமை?
அது சரி, நீங்கள் யார்? எப்படி இங்கு வந்தீர்கள்?
அது பெரிய கதை.
இந்த மோகன வெண்ணிலவை ஏன் வீணாக்க வேண்டும்? இப்படி உட்கார்ந்து பேசலாம்.
ஏழு நூறு ஆண்டுகளுக்கு முன்னால் தஞ்சாவூரில் உத்தமசோழர் என்ற மன்னர் அரசு புரிந்து வந்தார்....



இளங்கோ கூறிய கதையில் உத்தம சோழர் தம் புதல்வர்களை அழைத்து....
சுகுமாரா! ஆதித்தா! சோழநாடு தனது பழம் பெருமையை இழந்து குறுகி விட்டது. ஆனாலும் நீங்களிருவரும் நமது குலப் பெருமை குறையும் படியான எந்தக் காரியமும் செய்யக் கூடாது.
சரி அப்பா!
மதுரையிலிருந்து பராக்ரம பாண்டியர் வருகிறார். அவரை வரவேற்று உபசரிப்போம். அவர் நமது நாட்டையும் குலத்தையும் மதிக்கும்படி செய்ய வேண்டும்.
பராக்ரம பாண்டியர் பிரமித்து மகிழும் வண்ணம் உபசாரங்கள் நடந்தன.
குறுநில மன்னரானாலும் குலப்பெருமை குன்ற வில்லை. சோழ இளவரசர்கள் என்ன கம்பீரமாக இருக்கிறார்கள்!
விருந்தினராய்த் தங்கிய பாண்டியர் விடை பெறவேண்டிய தருணத்தில்....
உத்தமசோழரே! என் ஒரே மகள் புவன மோகினியைத் தாங்கள் மருமகளாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.
என்ன சொன்னீர்? கரிகால்வளவனும், ராஜ ராஜ சோழனும் தோன்றிய வம்சத்தில் பிறந்தவன் சுகுமாரன். நீரோ ஒரு குருட்டு அதிர்ஷ்டத்தினால் மதுரையை ஆள்கிறீர். உம் புதல்வி இந்த அரண்மனைக்கு ஒரு பணிப் பெண்ணாகத்தான் வர முடியும்.
விருந்தினரை அழைத்து அவமானப் படுத்துவது தான் உமது பண்பா? இதற்கு நீர் பதில் சொல்லியே தீரவேண்டும்.


பெரும் படையுடன் வந்தார் பாண்டியர்.
சுகுமாரா! ஆதித்தா! நான் தோற்றால் யுத்தத்தில் நீங்களிருவரும் கொல்லி மலைச் சாரலில் ஒளிந்திருந்து சமயம் வரும் போது சோழ நாட்டைத் திருப்பக் கைப்பற்ற வேண்டும்.
எதிர் பார்த்தபடியே தோல்வி கண்டு சிறைப் பட்டார் உத்தம சோழர். மதுரையில்....
சோழமன்னரைத் தேர்க் காலில் கட்டி இழுத்து வருகிறார் பராக்கிரம பாண்டியர்!
கர்வம் பிடித்த உத்தம சோழனுக்குச் சரியான தண்டனை!
இந்தக் காட்சியைப் பார்த்துப் பாண்டிய இளவரசி புவன மோகினி மயங்கி விழுந்தாள்.
ஐயோ! இது என்ன கொடுமை?
அரசரை உடனே வரச் சொல்லுங்கள்.
மகள் மயங்கியது கேட்டு ஓடி வந்தார் தந்தை.
மகளே! என்னம்மா நேர்ந்தது?
அப்பா! ஒரு பேரரசர் போரில் தோல்வியடைந்தால் தெருவிலே கட்டி இழுத்துக் கொண்டு போவது அநாகரிகம் அல்லவா?
உன்னை அவனுடைய அரண்மனைப் பணிப் பெண்ணாக அனுப்பும்படி சொன்னானே! அகம்பாவத்தை அடக்க வேண்டாமா நான்?


அப்பா! சோழன் பண்பறியா விட்டாலும் பாண்டியன் பெருந்தன்மையோடு நடந்து கொள்ள வேண்டாமா? வைத்தியரை உடனே சிறைச்சாலைக்கு அனுப்புங்கள்.
உன் மன நிம்மதிக்காக அப்படியே செய்கிறேன்.
இதற்கிடையில்.. கொல்லி மலைக் காட்டில் ஆதித்தனும் சுகுமாரனும் ஆலோசனை....
சற்றுப் பொறுமையாக இருந்து படை திரட்டிக் கொண்டு பாண்டி நாட்டில் புக வேண்டும்.
ஆதித்தா! படையெடுத்துச் சென்றால் தந்தையின் கதி என்ன ஆகும்? யோசித்தாயா?
சுகுமாரன் மாறுவேடத்தில் மதுரை சென்று உத்தம சோழர் இருக்குமிடத்தைக் கண்டு பிடித்து அவரை எப்படியாவது தப்பு விப்பது, அது தெரிந்த பிறகு ஆதித்தன் தலைமையில் படைதிரண்டு வந்து மதுரையைத் தாக்குவது என்ற முடிவுக்கு வந்தார்கள்.
படையெடுப்புக்கு முன்பே எப்படியாவது அவரைத் தப்புவிக்கச் செய்து விட்டால்?
சுகுமாரனை வழியனுப்பினான் ஆதித்தன்.
அண்ணா! உங்களை அனுப்பி விட்டு நான் எப்படி நிம்மதியாக இருப்பேன்.
தந்தையைக் கைப்பற்றி மதுரையையும் வெல்லும் வரை நிம்மதி கிடையாது. ஆனால் எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவோம்.
மோகினித்தீவில் இளைஞன் பாஸ்கர கவிராயருக்குக் கதை சொல்லி வந்தான். இந்தக் கட்டத்தில் யுவதி கதையைத் தொடர்ந்தாள்.
உத்தம சோழரைத் தெருவில் இழுத்து வந்ததைப் பார்த்த நாளிலிருந்து புவன மோகினிக்கு வாழ்க்கையில் உற்சாகமே இல்லை.




புவன மோகினியிடம் தோழி செய்தி கூறினள்.
தேவி! சோழ இளவரசர் இருவரையும் தேடிச் சிறைப் பிடித்து வர ஒற்றர்களை அனுப்பியிருக்கிறார் நம் அரசர்.
என்னுடைய கலியாணப்பேச்சு காரணமாக எத்தனை இடர்கள்!
தேவி! தேவேந்திர சிற்பியின் கலைக்கூடத்துக்குச் சென்று வருவோமா?
ஆம்! அவரைப் பார்த்து வெகு நாட்களாகி விட்டது. போகலாம் வா!
இதற்கிடையில் சுகுமார சோழன் மாறுவேடத்தில் பெயரை மாற்றிக் கொண்டு மதுரை வந்து சேர்ந்தான். பிரசித்தி பெற்ற தேவேந்திர சிற்பியின் கலைக் கூடத்துக்கு வந்து அவர் சீடனானான்.
மதிவாணா! மீனாட்சியம்மன் ஆலயத் திருப்பணி நடந்தேற வேண்டும். நல்ல காலமாக உன்னைப் போன்ற சிறந்த சிற்பி வந்து சேர்ந்திருக்கிறாய்!
சுவாமி! இளவரசி வந்து கொண்டிருக்கிறாள்.
மதிவாணா! உன் திறமை பற்றி இளவரசியிடம் கூறுகிறேன்.
வேண்டாம் சுவாமி! நான் பெண்களையே பார்ப்பதில்லை என்று என் குருவுக்கு சத்தியம் செய்து கொடுத்திருக்கிறேன்.
புவன மோகினியின் பேரழகில் பற்றி கேள்விப் பட்டிருந்த மதிவாணன் அவளைப் பார்த்தால் தன் மனம் பேதலிக்கும், வந்த காரியம் நிறைவேறாது என்று அஞ்சினன்.
இதென்ன ஆச்சரியமான விரதம்?.. சரி மறைவாக இரு.
மன்னித்து விடுங்கள் குருநாதா.
மதிவாணன் தலை மறையவும்...
இளவரசி! வருக! வருக! நலந்தானே!
புதிய பல சிற்பங்கள் தயாராகியிருக்க வேண்டுமே!






புவன மோகினிக்கு மதிவாணனைப் பார்க்க ஆவல் அதிகமாயிற்று. அவனிடம் சோழ இளவரசர்களைப் பற்றியும் கேட்டறிய விரும்பினாள்.






தேவேந்திர சிற்பிக்கு உள்ளூர கலக்கம்.





சிற்பக் கூடத்துக்கு ஒரு நாள் ஒற்றர் படைத்தலைவன் வந்தான்.
சிற்பியாரே! உங்களிடம் ஒரு சோழ நாட்டு சிற்பி சீடனாக இருக்கிறானாமே! அவனுக்கு ஒரு நண்பனும் இருக்கிறானாமே!
என் கலைக் கூடத்துக்கு உலகமுழுவதிலுமிருந்து ரசிகர்கள் வருவார்கள். என்னைத் தொந்திரவு செய்தால் மன்னரிடம் சொல்வேன்.
ஒற்றர் தலைவன் சந்தேகம் தீராது வருக மற்றொரு நாள் கோவிந்தனாக வேடமிட்டு வந்த புவன மோகினியின் தலைப்பாகையை இழுத்து விட்டுத் திகைத்தான்.
இளவரசி! மன்னியுங்கள்!
அமைதியாக வேலை செய்யும் சிற்பிகளுக்குத் தொந்திரவு கொடுக்கிறாயா? போ! இனிமேல் இங்கு வராதே.
மதுரைக்கு வந்து பல மாதங்களாகியும் காரியம் நிறைவேற வழி காணவில்லை. உத்தம சோழர் இருந்த சிறைக்குக் கட்டுக் காவல் மிக அதிகம். சுகுமாரன் கலங்கினான். பராக்கிரம பாண்டியனை வேல் எறிந்து கொன்று விடலாமா என்று யோசித்தான்.
ஒரு நாள் வீதி உலா வந்தார் பாண்டிய மன்னர். மதிவாணன் சாலை ஓரத்தில்...
அரசர் அருகில் அமர்ந்திருப்பது அவர் குமாரியாகத்தான் இருக்க வேண்டும்!
இவளை எங்கோ பார்த்தமாதிரி இருக்கிறதே! ஆகா! பகைவனுடைய மகளை நண்பனாக மதித்துப் பழகினேனே! என்னை ஏமாற்றி விட்டாள். பழி வாங்க வேண்டும்.
மறு நாள் சிற்பக் கூடத்தில்....
இளவரசி! நேற்றோடு என் விரதத்தைக் கை விட்டு விட்டேன். இனித் தாங்கள் இளவரசியாகவே விஜயம் செய்யலாம்.
மதிவாணரே! தங்களிடம் உள்ள கலையை அனுபவிக்கும் ஆசையால் ஏமாற்றத் துணிந்தேன். மன்னிக்க வேண்டும்.


சில தினங்கள் சென்று...
மதிவாணரே! ஏன் இத்தனை சோகம்?
இளவரசி! சிலை வார்க்கும் கலை எனக்கு வர வில்லை. என் குருவுக்கும் தெரிய வில்லை. வாழ்க்கையே வெறுத்து விட்டது.
செப்புச் சிலை வடிப்பதை அறிந்தவர் வேறு யாருமே இல்லையா?
ஒரே ஒருவர் இருக்கிறார். உத்தம சோழரை இரவில் தனியாகச் சந்திக்க முடியுமானால் அந்த ரகசியத்தை அறிந்து கொண்டு விடுவேன்.
என் தந்தை குடகு நாட்டுக்குப் போயிருக்கிறார். முத்திரை மோதிரம் என்னிடம் இருக்கிறது. இதை எடுத்துக் கொண்டு இன்று இரவு சிறைச்சாலைக்குப் போ. கதவுகள் திறக்கும். நாளை என்னிடம் பத்திரமாகத் திருப்பிக் கொடுத்து விடு.
உதவிக்கு நன்றி.
முத்திரை மோதிரம் கிடைத்தாலும் ஒற்றர் தலைவன் தினகரனைச் சமாளிப்பது எப்படி? இருட்டிய பின் சுகுமாரன் தினகரனை அணுகி...
ஐயா! இந்த ஊரில் சிறைக் கூடம் எங்கே இருக்கிறது?
பன்னிரண்டு சிறைச்சாலைகள் இருக்கின்றன. எதைக் கேட்கிறாய்?
உத்தம சோழரை வைத்திருக்கும் சிறைச்சாலை. கொஞ்சம் வழி காட்ட முடியுமா?
ஏதோ கபட நாடகம் நடக்கிறது. இவனைத் தனியே விடக் கூடாது என்று தீர்மானித்த தினகரன் மதிவாணனுக்குக் குதிரை கொடுத்து உதவினான். சிறைச்சாலையை நள்ளிரவில் அடைந்தார்கள்.
முத்திரை மோதிரம்; அருகே தினகரன் வேறு! சிறைத் தலைவனால் அனுமதி மறுக்க முடியவில்லை. தினகரன் தீவட்டி ஒன்றை வாங்கிக் கொண்டான்.
நில்லுங்கள்!
முக்கியமான காரணமாக உத்தம சோழரைப் பார்க்க வந்திருக்கிறேன். இதோ முத்திரை மோதிரம்!



இருவரும் உத்தம சோழர் இருந்த தனி அறையை அடைந்தனர்.
கொட்டடிக்குள் நுழைந்ததும் சட்டென்று கதவைச் சாத்தித் தாள் போட்டு விட்டு மின்னல் வேகத்தில் தினகரனைக் கீழே தள்ளி வாயில் துணியை அடைத்தான் மதிவாணன். சுவரில் தொங்கிய வளையத்தோடு பிணைத்தான்.
பேச நேரமில்லை. வாருங்கள். இந்தத் தலைப் பாகையை வைத்துக் கொள்ளுங்கள்.
இருளில் தினகரனுடைய உடையில் வெளியேறிய உத்தம சோழரைக் காவலர்கள் கவனிக்கவில்லை. மோதிரத்தைப் பார்த்து வழி விட்டனர்.
இதற்கிடையில் புவன மோகினி அரண்மனையில்...
குதிரைகள் மீது பாய்ந்தேறி இருவரும் தப்பினர்.
யாரோ ஊர்பேர் தெரியாதவனிடம் முத்திரை மோதிரத்தைக் கொடுத்து விட்டேனே! என்ன விபரீதம் விளையுமோ? நானே சிறைக்குச் சென்று பார்த்தால்..?
யார் அங்கே. உடனே குதிரை பூட்டி ரதத்தைக் கொண்டு வரச் சொல்லு!.


சிறைச் சாலையை அடைந்தாள் இளவரசி.
அழகு தான்! அவர்கள் ஓடிப் போகும் படி ஏன் விட்டாய்?
அம்மணி! ஊர் பேர் தெரியாத சிற்பியிடம் முத்திரை மோதிரத்தைக் கொடுத்தது நாமா, நீங்களா?
வாயை மூடு! உத்தம சோழர் தப்பிச் செல்ல நீ உடந்தையாக இருந்திருக்கிறாய்!
தேவி! மோசம் போனேம்! உத்தம சோழரும் இளவரசர் சுகுமாரனும் தப்பிவிட்டார்கள்!
அம்மணி! விவாதித்துக் கொண்டிருக்க நேரமில்லை!
சரி! பத்து வீரர்களுடன் சென்று அவர்களைப் பிடித்துக் கொண்டு வா.
தன் குற்றத்தை மறைக்க ஒற்றர் தலைவனை மிரட்டினாளே தவிர புவன மோகினி ரொம்பக் கலங்கிப் போனாள். முதன் மந்திரியிடம் நடந்ததைக் கூறினாள். தன்னை ஏமாற்றிய சோழ ராஜகுமாரன் மீது சினம் பொங்கிய போதிலும்...
குடகு நாட்டில் போரில் காயமுற்றுத் திரும்பினார் பாண்டியர். விஷயமறிந்து...
எல்லாருமாகச் சேர்ந்து ஏமாந்து விட்டீர்களே! தேவேந்திர சிற்பியைச் சவுக்கால் அடித்துச் சிறையில் அடையுங்கள்.
அப்பா! அவர் குற்றமற்றவர். எனக்குத் தண்டனை கொடுங்கள்.
தாயே மீனாக்ஷி! அவர்கள் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பி விட அருள் புரிவாய்.
அவசரச் செய்தியுடன் வந்தார் அமைச்சர்.
அரசே! சோழ நாட்டுப் படை வந்து கொண்டிருக்கிறது!
தந்தையே! நான் செய்த குற்றத்துக்குப் பரிகாரமாக சேனைக்குத் தலைமை வகித்துச் சென்று அவர்களை முறியடிக்கிறேன். சோழ ராஜகுமாரனைப் பிடித்து வருகிறேன்.


புவன மோகினியின் துணிச்சல் பாண்டிய வீரர்களுக்கு உற்சாக மளித்தது. சோழ வீரர்களோ திகைத்தார்கள்.
ஆகா! மீனாட்சி யம்மனே போரிட வந்திருக்கிறாள்.
இவள் மானிடப் பெண்ணே அல்ல.
இரண்டு நாள் போருக்குப் பிறகு..
சுகுமாரா! ஒரு பெண்ணுக்குப் பயந்து நீ ஒளிந்து கொள்வதா? படைகளுக்குத் தலைமை தாங்கிச் செல்!
ஐயோ! புவன மோகினியை ஏமாற்றினேன். அவள் முகத்தில் எப்படி விழிப்பேன்?
மறு நாள் பாண்டியப் படை வீரரிடையே கலக்கம்..
நம் இளவரசியைக் காணோம்!
மன்னர் இறந்து விட்டாராம்.
ஐயோ! பின் வாங்குங்கள்.
இடக்குப் போரில் காய முற்றிருந்த பாண்டியர் மரணத் தருவாயில் இருந்தார். அவரைக் காணப் போர்க்களத்திலிருந்து திரும்பியிருந்தாள் புவன மோகினி. அவள் மடியில் பராக்கிரம பாண்டியரின் உயிர் பிரிந்தது.
மறு நாள் வீராவேசமாகப் புவன மோகினி போரிடும் போது சுகுமாரன் எதிரில் வந்து நின்றான். அவனுடன் யுத்தம் செய்ய விரும்பாமல் வாளைக் கீழே போட்டாள். சிறைப்பட்டாள். சுகுமாரனின் மனம் துடித்தது.
உத்தம சோழருக்கோ ஒரே மகிழ்ச்சி...
பாண்டியன் மகளைப் பழி வாங்குவேன்.
அப்பா! தங்கள் விடுதலைக்கு உதவியவளைப் பழி வாங்கலாமா? மரியாதையாக நடத்துங்கள்.


அது உன் யுக்த தந்திரத்தின் வெற்றி. அதற்காக நன்றி பாராட்டத் தேவையில்லை!
தந்தையே! நான் புவன மோகினியை மணந்து கொள்ள விரும்புகிறேன்.
அடப் பாவி! அவள் வலையில் சிக்கி விட்டாயே! என்னைக் கொன்று விட்டு அவளை மணந்து கொள்.
தந்தையாரின் மனத்தை மாற்ற முடியாத சுகுமாரன் சோழநாட்டு முத்திரை மோதிரத்தை ஒரு பணிப் பெண்ணிடம் கொடுத்தனுப்பி சிறையிலிருந்து புவனமோகினி தப்ப உதவினான். ஆனால்....
பெண்ணே! நய வஞ்சகம் சோழருக்கே உரியது. அதற்கும் பாண்டிய குலத்துக்கும் வெகுதூரம்
இதை மறைந்திருந்து கேட்ட சுகுமாரன் வெளி வந்து...
மோகினி! அந்த நய வஞ்சகனை நீ காதலித்தாய் அல்லவா? இப்போது தப்பி விடு. நல்ல காலம் ஏற்படும் போது நம் மனோ ரதம் நிறைவேறும்.
நான் சோழ நாட்டு இளவரசனையா விரும்பினேன்! கபட மறியாத ஏழைச் சிற்பியை அல்லவா காதலித்தேன்!


இதைக் கேட்ட உடனே சுகுமாரன் உத்தம சோழரிடம் சென்று...
அப்பா! சோழ சிம்மாசனத்தில் பாண்டியன் மகள் ஏறக் கூடாது என்று தானே திருமணத்துக்குச் சம்மதிக்க மறுக்கிறீர்கள்?
தம்பி ஆதித்தனுக்குப் பட்டம் சூட்டுங்கள். புவனமோகினியுடன் நான் கடல் கடந்து சென்று விடுகிறேன்.
அண்ணா! என்ன சொல்கிறாய்?
சரியான முடிவு தான். கடல் கடந்து சென்று சோழ நாட்டின் புகழ் பரப்புவாயாக.
ஆரவாரம் இல்லாமல் புவனமோகினிக்கும் சுகுமார சோழனுக்கும் திருமணம் நடைபெற்றது.
சோழ ராஜ்யத்தை விரிவாக்க மூன்று கப்பல்கள் நிறைய ஆயுதங்களையும் போர் வீரர்களையும் அழைத்துப் போக அனுமதி தந்தார் உத்தம சோழர். சுகுமாரன் சிற்பக் கலைக் கருவிகளையும் சிற்பிகளையும் ஆவலுடன் சேகரித்தான். தேவேந்திர சிற்பியையும் அழைத்துக் கொண்டான்.
புவனமோகினியும் சுகுமாரனும் அனைவரிடமும் விடை பெற்றுக் கப்பலேறினர்.
வீரவேல்! வெற்றிவேல்
ஆனந்தமாக வாழ்வீர்களாக.


நடுக்கடலில் கப்பல்கள்
சென்றபோது சுகுமாரனின்
உத்தரவுப்படி வாள்களும்
வேல்களும் தூக்கி எறியப்
பட்டன.
மோகினி! இனி கப்பலில் உன்களையும் அத்தி கனையும் தவிர வேறு ஏதுவும் இல்லை.
நாம் போகும் இடத்தை சொர்க்க புரியாக்குவோம். யுத்தமே இல்லாத நாட்டை உருவாக்குவோம்.
மோகினித்தீவில் கதை கூறி முடித்தாள் யுவதி.
ஐயா! எங்கள் ஆசை நிறை வேறியிருக்கி றதா இல்லை யா?
கட்டாயம் நிறை வேறி யிருக்கிறது. இது சொர்க்க புரி மட்டுமல்ல மாயா புரியான மோகினித்தீவு.. நீங்களிருவருந் தான் சுகுமாரனும் புவன மோகினியு மாக இருக்க வேண்டும். ஆனல்..
பாஸ்கரக் கவிராயரின் சந்தேகம் கேள்வி
யாக உருப்பெறுவதற்கு முன்னால் மெல்லிய
பனிப் படலம் மோகினியையும் சுகுமார
னையும் மறைத்தது. இருவரும் கை
கோத்துக் கொண்டு நடந்து போனர்கள்.
ஆ! நான் மோகினித் தீவிலேயே இன்னும் இருக்கிறேனே! கப்பல் எங்கே?
கப்பலில் புகை கிளம்பியது. கரை யோரமாக ஒரு படகு புறப்படத் தயார் நிலையில்!
இதோ! நானும் வருகிறேன். என்னை விட்டு விட்டுப் போய் விடாதீர்கள்!

டூம்புல்லா

வான்முகில்



திப்பிலி ராஜா ஊட்டி பங்களாவில் தங்கியிருந்தார். அவருக்கு நாடும், அதிகாரமும் நாற்பத்து ஏழுடன் போய்விட்டது. ஆனால் பணம், பங்களா, ஆள், அம்பு எல்லாம் இருந்ததால், அவரை மக்கள் ராஜா என்றே அழைத்தனர். அவரும் தமது செயலாளரை 'மந்திரி' என்றே அழைத்தார்.

திடீர்த் திட்டங்கள் தீட்டுவதில் திப்பிலி ராஜா வல்லவர். ஒருநாள் அவர்,

''மந்திரி! இவ்வளவு பெரிய பங்களாவில் நான் மட்டுமே தனியாகச் சுற்றுவது என்னவோ போல் இருக்கிறது. ஏதாவது ஒரு செல்ல மிருகம் வளர்க்கலாம் என்று திட்டம் தீட்டியுள்ளேன்'' என்றார்.

''ஆகா! நல்ல திட்டம். அல்சேஷன் நாய்—''

''சே! வேண்டாம். அன்னூர் ராஜாகூட அல்சேஷன் வளர்க்கிறார்.''

''அப்படியென்றால் குதிரை.''

''குன்னூர் ராஜாகூட குதிரை வளர்க்கிறார். அது வேண்டவே வேண்டாம்.''

ஒரு காலத்தில் ராஜா ஒல்லியாயிருந்தார். நாடு நகரமெல்லாம் போய்விட்ட பிறகு, அதே கவலையில் உடல் பருத்துப் போய் விட்டது. இப்பொழுது குதிரையின் மேல் தாவி ஏற முடியாது. ஏறினாலும் குதிரை நகர முடியாது.

''அப்படியென்றால் உங்கள் திட்டம் தான் என்ன?''

''மிருகத்தில் சிறந்தது காண்டா மிருகமே.''

''அய்யோ! காண்டா மிருகமா?''

''ஆமாம் மந்திரி! அதன் பெயரில் மட்டுமே 'மிருகம்' என்று வருகிறது. அதனால் அதுவே சிறந்த மிருகம்.''

''நல்லவேளை 'நீர்யானையை' வளர்க்கத் திட்டம் போடவில்லையே!''

''மந்திரி! முதலில் அப்படித்தான் நினைத்தேன். அதன் பக்கத்தில் நான் நடந்து செல்லும் போது, யாராவது 'நீர் யானை' — என்று கூப்பிட்டால், யானையைச் சொல்கிறார்களா? நீர்—யானை —. என்று என்னைச் சொல்கிறார்களா? என்பது தெரியாது. அதனால் நீர்—யானையை விட்டுவிட்டுக் காண்டாவை மனத்தில் பிடித்துக்கொண்டேன்.''

''அரசே! நீங்கள் மனத்தில் பிடித்துக் கொண்டதை நான் கூண்டில் பிடித்துக் கொண்டு வர வேண்டுமென்றால் அசாமுக்கு அல்லவா போக வேண்டும்?''

''அசாமுக்கோ? ஆப்பிரிக்காவுக்கோ? இன்னும் பத்து நாட்களில் நம் தோட்டத்தில் ஒரு குட்டிக் காண்டா மேய வேண்டும். இல்லை என்றால் உங்களை வேலையிலிருந்து விரட்டி விடுவேன். நீங்கள் வேறெங்காவது பூங்காவில் புல் மேய வேண்டியதுதான்'' —என்று சொல்லி விட்டு அரசர் பூங்காவில் நுழைந்தார். அமைச்சர் அடுப்பங் கரைக்குள் நுழைந்தார். காண்டா கிடைக்கிறதோ இல்லையோ, அங்கே அவருக்குப் போண்டா கிடைக்கும்.

எண்ணிப் பத்தாவது நாள் காலையில் பூங்காவுக்குச் சென்ற திப்பிலி ராஜா—

மகிழ்ச்சி மிகுதியால் குட்டிக்கரணம் போட முயன்றார். உடல் பருமன் காரணமாக முடியவில்லை. எனவே அதற்குப் பதிலாகப் புல் தரையில் உருண்டார். சிறு கற்கள் பொடியாயின.

அங்கே ஒரு மூங்கில் கூண்டில் ஒரு குட்டிக் காண்டா மிருகம் படுத்துக் கொண்டிருந்தது.

''ஹலோ — புஸ்ஸி'' — என்றார்.

பதில் இல்லை. மீண்டும்,

''ஹலோ! ஹலோ! புஸ்ஸி'' — என்றார்.

மெதுவாக ''மியாவ்'' — என்ற குரல் கேட்டது. ராஜாவுக்கு ஒரே கொண்டாட்டம். மீண்டும் குட்டிக் கரணம் போட முயன்று முடியாமல் புல்தரையில் உருண்டார். அதற்குள் அமைச்சரும் வந்துவிட்டார்.

''முதல்லே நான் 'புஸ்ஸி'ன்னு கூப்பிட்டு விட்டேனே! இப்பொழுது மாற்றினால் அது குழம்பிப் போயிடுமே.''

''அப்படின்னு — புஸ்ஸின்னு வீட்டிலே கூப்பிடலாம். பீமன்னு பள்ளிக் கூடத்திலே கூப்பிடட்டுமே'' —என்று உளறினார் மந்திரி.

''வேண்டாம். இரண்டு பெயர்களையும் சேர்த்து 'பீம்புஸ்ஸி'ன்னு வைச்சுடலாம்'' என்று தீர்ப்புச் சொல்லி விட்டார் ராஜா. பின்னர் கூண்டைச் சுற்றி வந்தார்.

''மந்திரி! என்ன இது? காண்டாவுக்கு மூங்கில் கூண்டா?''

''அரசே! மெதுவாகப் பேசுங்கள்! மூங்கிலின் உள்பக்கம் இரும்பு மாதிரி வர்ணம் பூசியிருக்கு. இரும்புன்னு



''அமைச்சரே! இது நல்ல காண்டா. நான் 'புஸ்ஸி' — என்று கூப்பிட்டேன். 'மியாவ்' என்று பதில் கொடுத்தது''.

''காண்டாவைப் போய். யாராவது 'புஸ்ஸி' — என்று கூப்பிடுவார்களா?''

''பின்னே என்ன பெயர் வைக்கலாம்?''

மந்திரி விழித்தார். காண்டாமிருகத்துக்கு என்ன பெயர் வைப்பது? யாரைக் கேட்பது? யாராவது காண்டா வளர்த்தால் அல்லவா தெரியும். ஏதோ சமாளித்து —

''பீமன்'னு வைக்கலாமே!''

நினைச்சுக்கிட்டுக் காண்டாமிருகம் பேசாம படுத்திருக்கு.''

''சரி! சரி! பீம் புஸ்ஸிக்குப் பசிக்குமே!''

இரண்டு முறை புல் தரையில் உருண்டதால் ராஜாவுக்குப் பசித்தது. அதனால் காண்டாவுக்கும் பசிக்கும் என நினைத்து.

''மந்திரி! பீம்புஸ்ஸி என்ன சாப்பிடும்?'' என்று கேட்டார்.

''பாலும், பன்னும்.''

''பாலும், பன்னும் காட்டிலே யார் கொடுப்பாங்க?''

"காட்டிலே கிடைக்காததைக் கொடுத்தால்தான் நம்ம கிட்டேயே அன்பா இருக்கும்னு வேட்டைக்காரங்க சொன்னாங்க."

"அப்போ சரி! போய் — 100 பன்னும் பத்து லிட்டர் பாலும் கொண்டு வாங்க."

பாலும், பன்னும் வந்தன. கூண்டுக்குள் வைக்கப்பட்டன. ஆனால் பீம்புஸ்லி — எழுந்திருக்கவே யில்லை!.

"புஸ்லியில்லை! பீம்புஸ்லியில்லை— கண்ணு, சாப்பிடும்மா"— என்று ராஜா கொஞ்சினார்.

"பாலும் பன்னும் கைகளில் ஏந்தி" —என்று பாட ஆரம்பித்தார்.

உடனே மந்திரி "அய்யோ ராஜா, பாட்டுப் பாட வேண்டாம். இப்படிப் பாடினால் பீம்புஸ்லி மிரண்டு கூண்டை உடைத்துக்கொண்டு ஓடிவிடும். நான் ஒரு வழி செய்கிறேன்" —என்று சொல்லி விட்டுப் பங்களாவுக்குள் ஓடினார். உள்ளேயிருந்து காடு, மலை, மான், மரங்கள் வரையப்பட்ட பல ஓவியங்களைக் கொண்டு வந்து கூண்டைச் சுற்றித் திரைபோல் கட்டினார்.

"காட்டில் இருந்து பழகிவிட்ட மிருகம், திடீரென்று ஒரு கூண்டிலே அடைபட்டால் இப்படித்தான். இப்பொழுது சுற்றிலும் ஓவியங்களைப் பார்த்துக் காட்டில் இருப்பதாக நினைத்துக் கொள்ளும்" — என்று விளக்கினார்.

"சரி! கொஞ்ச நாளைக்கு அதன் போக்கிலேயே விட்டு விடுவோம்" — என்று ராஜா சொல்லிவிட்டு அடுப்பங்கரையில் நுழைந்தார்.

அடுத்த நாள் முதல், இட்லி, தோசை, லட்டு, ஜிலேபி, ஹார்லிக்ஸ், போர்ன்விட்டா என்று வகை வகையாகக் கூண்டுக்குள் வைக்கப்பட்டன. ஆனால், யாராவது முன்னாலே இருந்தால், பீம்புஸ்லி சாப்பிட வெட்கப்பட்டது. ஓவியத் திரை போட்டால் நான்கு இட்லி சாப்பிடும். அவ்வளவுதான்!

ஒருநாள், "நாளைக் காலையில் நான் உலா செல்லும்பொழுது பீம்புஸ்லியும் கூட வர ஏற்பாடு செய்யுங்கள். எப்பொழுது பார்த்தாலும் படுத்துக் கிடக்கிறதே" — என்றார் ராஜா.

"அய்யய்யோ! வேண்டாம் ராஜா வழியெல்லாம் கூட்டம் கூடிவிடும். நாய் குரைத்தால் பீம்புஸ்லி மிரண்டு விடும். மேலும் சங்கிலியால் கட்டினால் கழுத்து புண்ணாகி விடும். நாகாலாந்தில் ஒரு பச்சைக் கொடி வளருகிறதாம். அதைக் கொண்டு தான் கட்ட வேண்டும் என்று வேட்டைக்காரங்க சொல்லி அனுப்பினார்கள்! அந்தக் கொடியின் வேரை நம்ம தோட்டத்திலே நட்டிருக்கேன். அது கொடியா வளர்ந்தவுடனே..."—என்று மந்திரி நீட்டினார்.

"அப்போ — அடுத்த சீசனுக்குத்தான் என்கூட பீம்புஸ்லி வரும்" — என்று அலுத்துக் கொண்ட ராஜா — தனியாக உலாவச் சென்றார்.

அன்றிரவு — திடீர் மழை பெய்தது. சடசடவென்று ஆலங்கட்டிகள் விழுந்தன. தூங்கிக் கொண்டிருந்த ராஜா விழித்துக் கொண்டார். கையில் கிடைத்த கம்பளிகளைச் சுருட்டிக் கொண்டு கையில் ஒரு டார்ச் விளக்கை எடுத்துக்கொண்டு தோட்டத்துக்கு ஓடினார். வாயிலில் காவலாளி நின்று கொண்டு குறட்டை விட்டுக் கொண்டிருந்தான்.

மூங்கில்களின் இடைவெளியில் கம்பளிகளை உள்ளே போட்டார். டார்ச்

பரீட்சையா? பயம் வேண்டாம்!

1. பள்ளிக்கு, நாள் தவறாமல் செல்ல வேண்டும்.
2. பாடங்களை ஆசிரியர் சொல்லும் போதே கருத்தூன்றிக் கவனிக்க வேண்டும்.
3. அன்றன்று நடத்திய பாடங்களை அன்றன்றே படிக்க வேண்டும். நாளை, நாளை என்று நாட்களைத் தள்ளக்கூடாது.
4. பாடங்களில் ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டால் ஆசிரியரிடம் கேட்டு அதை உடனே நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும்.
5. ஒவ்வொரு நாளும் பாடங்கள் படிக்க நேரம் ஒதுக்க வேண்டும். அதிகாலையில் படிக்கும் பாடங்கள் மனத்தில் நிற்கும்.
6. எதையும் புரிந்து கொண்டே படிக்க வேண்டும். புரியாமல் மனப்பாடம் செய்தல் கூடாது.
7. பழைய வினாத் தாள்களையும் அவற்றின் விடைகளையும் தெரிந்து கொள்ளுதல் நலன் பயக்கும்.
8. விடுமுறை நாட்களை நல்ல முறையில் படிப்பதற்குப் பயன்படுத்த வேண்டும்.
9. தேர்விற்கு முதல் நாள் அதிக நேரம் கண் விழித்துப் படித்தல் நல்லதன்று.

—ஆர். நாச்சியப்பன் (75) தென்னூர்

விளக்கை அடித்துப் பார்த்ததும் திடுக்கிட்டார். உள்ளே காண்டாவை யும் காணோம்! போண்டாவையும் காணோம்! மூலையில் கறுப்பாக ஏதோ தோல் கிடந்தது. என்ன இது! காட்டைப் பிரிந்த ஏக்கத்தில் பீம்புஸ்லி — எலும்பும் தோலுமாகி விட்டதோ? புரியவில்லை. தான் காண்பது கனவாக இருக்கும் என்று நினைத்துக்கொண்டு பேசாமல் படுக்கைக்குத் திரும்பி விட்டார்.

காலையில் மந்திரியுடன் கூண்டின் அருகே சென்றார் ராஜா. பீம்புஸ்லி நல்ல பிள்ளை போலக் கம்பளிகளைக் கீழே போட்டுக்கொண்டு படுத்துக் கிடந்தது. ராஜாவுக்குச் சந்தேகம். கூண்டைச் சுற்றி வந்து, உற்று உற்றுப் பார்த்தார். திடீரென்று —

''கொண்டு வா சவுக்கை''—என்றார்.

கூச்சல் கேட்டு விழித்துக்கொண்ட காவலாளி உள்ளே ஓடி ஒரு பழைய சவுக்கினைக் கொண்டு வந்தான்.

''வந்த நாளிலிருந்து இந்தக் காண்டா படுத்துக் கொண்டே ஏமாற்றுகிறதே! இழுத்து வாருங்கள் வெளியே'' — என்று ராஜா கம்பீரமாக ஆணையிட்டார். பளீர் — என்று சவுக்கினைச் சொடுக்கினார். அந்தப் பழைய காலத்துச் சவுக்கினை எலி கடித்திருந்ததனால், பாதி அளவுக்கு அறுந்து மேலே பறந்தது. பின்னர் கீழே விழும்போது மந்திரியின் கழுத்தில் மாலையாக விழுந்தது. ராஜாவுக்குக் கோபம் மாறிச் சிரிப்பு வந்தது.

''அ ஹ ஹா'' என்று சிரித்தார். இன்னொரு முறை கூண்டின் மேல் அடிக்க அரைச் சவுக்கை ஓங்கினார்.

''வேண்டாம்! வேண்டாம்!''—என்று மந்திரி அலறினார்.

அப்பொழுது ஒரு வேடிக்கை நடந்தது.

பீம்புஸ்லி — தடுமாறி எழுந்தது; விழுந்தது. விழுந்த வேகத்தில் இரண்டாக உடைந்தது. உடைந்த வேகத்தில் தோல் கிழிந்தது! என்ன மந்திரமோ? மாயமோ? உள்ளேயிருந்து இரண்டு பையன்கள் தோலைப் பிய்த்துக் கொண்டு வந்தனர். மூங்கில் கூண்டைத் திறந்து கொண்டு வந்து ராஜாவின் காலடியில் விழுந்தனர்.

ராஜாவுக்கு ஒன்றும் புரியவில்லை. மூளை குழம்பியது. எதற்காக மூளையைக் குழப்பிக் கொள்வதென்று நினைத்த ராஜா —


''மந்திரி! என்ன வேடிக்கை?'' என்றார்.

''வேடிக்கை இல்லை, மன்னவா! வேதனை. நீங்கள் பத்து நாட்கள் தவணை தந்தீர்கள். அதற்குள் அசாமுக்குப் போய் எப்படிக் காண்டாவைப் பிடித்துக் கொண்டு வருவது? அதன் விலையென்ன? செலவென்ன? என்று நானும் காவலாளியும் பேசிக் கொண்டிருந்தோம். அப்பொழுது இந்தப் பொடியன்கள் வந்தார்கள். ஒருவன் என் பையன். ''இன்னொருவன்காவலாளியின் பையன். அசாம் போய் வருகிற செலவைக் கொடுங்கள். நாங்கள் காண்டாமிருகம் போல வேஷம் போட்டுப் படுத்துக் கொள்கிறோம்'' என்றார்கள். காலையில் நீங்கள் வரும் பத்து நிமிடத்துக்குத் தானே — என்று ஒப்புக் கொண்டேன். தோல் வாங்கி, 'ஜிப்' வைத்துத் தைத்து நன்றாகவே வேஷம் போட்டார்கள். உங்கள் முன்னாலேயே சாப்பிட வேண்டும் என்றவுடனே — ஒலியத் திரை போட்டேன். இரவில் நீங்கள் வந்ததால் வேஷம் வெளிப்பட்டு விட்டது. அடுத்த சீசனுக்குள் அசாமிலிருந்து...'' —

''காண்டாவும் வேண்டாம்! போண்டாவும் வேண்டாம். என் திட்டம் முட்டாள்தனமானது என்று இந்தப் பொடியன்கள் காட்டி விட்டார்கள்''— என்று பெருமூச்சு விட்டுக் கொண்டே ராஜா அடுப்பங்கரைக்குள் நுழைந்தார்.

லட்டும், ஜிலேபியும் இனிமேல் காலையில் கிடைக்காதே என்ற ஏக்கத்துடன் பொடியன்கள் தோட்டத்திற்குள் ஓடினர்.

அறுந்து போன சவுக்கை ராஜா தைக்கச் சொல்வாரே என்று நினைத்துக் கொண்ட மந்திரி — துண்டுகளைப் பொறுக்கத் தொடங்கினார்.



சொன்னவர் யார்?

''உங்கப்பா காரை வித்திட்டாராமே!''
''ஆமாம், உனக்கு யார் சொன்னது?''
''பேரிச்சம்பழ வியாபாரிதான்.''

-கீழை அ. கதிர்வேல்

கவலையில்லாதவன்

பழைய கதை
புதிய பாடல்

கந்த சாமி யிடத்திலே
கணக்கில் லாத செல்வமாம்.
சொந்த மாக வீடுகள்,
தோட்டம், வயல்கள் பலவுமாம்.

செல்வம் அதிகம் இருந்துமே
சிறிது கூட நிம்மதி
இல்லை. அதனால் அவருமே
என்றும் கவலை கொண்டனர்.

ஒருநாள் அந்த ஊரிலே
உலகம் போற்றும் பெரியவர்
வருகை தந்தார்; அவரிடம்
மனம் திறந்து கூறினார்:

''நிறையச் செல்வம் இருந்துமே
நிம்ம திக்குப் பஞ்சமே.
இரவில் தூக்கம் இல்லையே!
என்ன செய்வேன்'' என்றனர்.

''கவலை யில்லா மனிதனைக்
கண்டு பிடித்து நீயுமே
அவனின் சட்டை ஒன்றினை
அணிந்தால் கவலை தீருமே!''

அந்தப் பெரியார் சொற்படி
அலைந்து இளைமும் தேடியே,
கந்த சாமி ஒருவனைக்
கண்டு பிடித்தார் கடைசியில்.

ஆடிப் பாடி அவனுமே
ஆனந் தமாய் இருக்கவே,
நாடிச் சென்றார் அவனிடம்;
நயந்து பேச்சுக் கொடுத்தனர்:

''உனக்கே ஏதும் கவலைகள்
உண்டோ இந்த உலகிலே?
எனக்குத் தெரிய வேண்டுமே!
எடுத்துச் சொல்வாய், நண்பனே''

''வானம் மழையைப் பொழியுது.
மண்ணில் உணவு விளையுது.
நானும் நன்கு உழைக்கிறேன்;
நான்ஏன் கவலை கொள்ளணும்?''

''எனது கவலை நீங்கிட
இன்றே நீயும் உதவுவாய்.
உனது சட்டை ஒன்றினை
உடனே தருவாய், புண்ணியம்.''

''ஐயோ! சட்டை வேண்டுமா?
அதுதான் இல்லை என்னிடம்!
பிய்ந்த சட்டை கூடநான்
போட்டுப் பார்த்த தில்லையே!''

குழந்தைக்கவிஞர்



உயிரின விந்தைகள்

கோவி. சஞ்சீவி—

பச்சோந்தியின் கண்கள்
ஒன்றுக்கொன்று
தொடர்பின்றி தாமாக
இயங்கும், ஒரே நேரத்தில்
இரு திசைகளிலும் பார்க்க இயலும்.







பெலிக்கன் ஈல் என்ற
பாம்பு போன்ற மீன் பெர்முடா
கடலுக்கடியில் 1 கிமீ
ஆழத்தில் வாழ்கிறது.
இதன் சிவந்த வாய்
கறுத்த உடலை விட 3 மடங்கு
நீளமானது.



கடல்முயல் என்ற நீர் வாழ்
பிராணி 4 மாத காலத்தில்
47 கோடி 80 லட்சம்
முட்டைகளிடும்.



கடமண்ட் ஆமை
என்ற இரட்டைத்
தலை ஆமை
1937-ம் ஆண்டு
அமெரிக்காவின்
பவல்ஸியில் காணப்
பட்டது!



எறும்புக் கூட்டுடன்
வாழும் சிப்பி பூ
எதிரிகளிடமிருந்து
எளிதாக தப்பிக்கும்.

என்ன தண்டனை? யார் கொடுப்பது?



— சரஸன்

ஹைதராபாத் காந்தி வித்யாலவியால் நான்காம் வகுப்பில் படிக்கும் சுரேஷ்பாபு கன குஷியுடன், ''அம்மா, அம்மா!'' என்று கத்திக்கொண்டே உள்ளே நுழைந்தான். அவன் தாய் யசோதம்மா, ''என்னடா சுரேஷ்? என்ன விஷயம்? ஏன் இப்படி கத்திண்டே வர்றே?'' எனக் கேட்டாள் வியப்புடன்.

''அம்மா ஒரு நல்ல செய்தி!''

''என்னடா அந்த நல்ல செய்தி?''

''நாளைக்கு எங்கள் பள்ளி ஆண்டு விழா நடக்கப் போகிறது. அதற்கு யார் தலைமை தாங்கப் போறாங்க தெரியுமா அம்மா?'' எனக் கேட்டான் சுரேஷ்.

''எனக்கென்னடா தெரியும்? நீ சொன்னால்தானே!'' என்று கூறினாள் யசோதம்மா.

''மந்திரி வரப் போகிறார்!'' என்று குஷியுடன் கூறினான் சுரேஷ்பாபு.

''அப்படியா! பலே, பலே!'' என்றாள் தாய்.

''அம்மா, மந்திரி எங்களுக்கெல்லாம் பரிசு கொடுக்கப் போறார்! அம்மா! பள்ளிக்கூடத்திற்கு இந்த வருஷம் ஒரு நாள் கூட நான் லேட்டாய்ப் போனது கிடையாது. அதற்காக எனக்குத் தனிப் பரிசு கிடைக்கப்போகிறது! மந்திரியின் கையினால் பரிசு வாங்கப் போகிறேனாக்கும்! ஹை! குஷி! ஜாலி!'' என்று குதித்தான் சுரேஷ்பாபு.

மறுநாள் சுரேஷ்பாபு தன்னை நன்றாய் அலங்கரித்துக்கொண்டு பள்ளிக்குச் சென்றான். அவன் மகிழ்ச்சியை வர்ணிக்க வார்த்தைகள் கிடையாது. 'மந்திரியின் கையினால் பரிசு வாங்கப் போகிறோம். மந்திரியிடமிருந்து பரிசு வாங்கும் போது போட்டோ எடுப்பார்கள்! ஆகா! எப்படிப்பட்ட அருமையான வாய்ப்பு!' என்ற குதூகல உணர்ச்சி!

மாலை நாலரை மணிக்குப் பள்ளியின் திறந்த மைதானத்தில் விழா நடத்த ஏற்பாடு ஆகியிருந்தது. விழா துவங்க அரை மணிக்கு முன்னதாகவே மைதானம் நிரம்பி வழிந்தது. பரிசு பெறும் மாணவர் — மாணவியர்களை ஒரு புறமாய் அமரச் செய்தார்கள். (அவர்களுள் சுரேஷ்பாபுவும் ஒருவன்.)

மணி நாலரை. எல்லோருடைய பார்வையும் வீதிக்கு ஓடிற்று. இன்னும் மந்திரியைக் காணவில்லை! மணி நாலே முக்கால்! ஐந்து, ஐந்தேகால், ஐந்தே முக்கால், ஆறும் அடித்தது! ஆனால், மந்திரி வந்த பாடில்லை. கூட்டத்திலே சலசலப்பு! அமைதி இன்மை! வீதியில் ஏதாவது கார் ஓசை கேட்டால் மந்திரியின் கார்தான் என்று எதிர்பார்த்து ஏமாந்தார்கள் அனைவரும். பள்ளி நிர்வாகியும், தலைமை ஆசிரியரும், மற்ற ஆசிரியர்களும், கவலையுடனும், அலுப்புடனும் தவித்தார்கள்.

ஆபீஸ் அறையில் டெலிபோன் ஒலித்தது. ஓடிச் சென்று எடுத்தார் தலைமை ஆசிரியர். 'அமைச்சர் இன்னும் இருபது நிமிடத்தில் வந்து விடுவார்' எனச் செய்தி வந்தது. கூட்டத்திற்கு அது அறிவிக்கப்பட்டது. மாணவர்கள் மிகவும் அவதிப்பட்டார்கள். விழாத் துவங்க ஒரு மணி நேரத்திற்கு முன்பே அவர்கள் மைதானத்தில் உட்கார



வைக்கப்பட்டார்கள். சுமார் மூன்று மணி நேரம் அவர்கள் எப்படி ஒரே இடத்தில் அமர்ந்திருக்க முடியும்? யாரும் எழுந்திருக்கக் கூடாது என்று கட்டளை வேறு.

மொத்தத்தில் கூறப் போனால், கூடியிருந்த அனைவருமே பொறுமை இழந்து விட்டார்கள். சிலர் வெளியேறத் தொடங்கினார்கள். மீண்டும் போன்!

'முக்கியமான ஒருவரை வரவேற்க, திடீரென்று அமைச்சர் விமான நிலையம் செல்ல வேண்டியிருப்பதால், இந்நிகழ்ச்சிக்கு அவரால் வர இயலாது'' என்று செய்தி வந்தது! எப்படி இருக்கும் பள்ளி நிர்வாகிக்கும், ஆசிரியர்களுக்கும், மற்றும் கூடியிருந்த பெற்றோருக்கும், பொது மக்களுக்கும்? கடைசியில் பள்ளி நிர்வாகியே பரிசுகளை வழங்கி, விழாவை நடத்தி வைத்தார், ஏதோ காமாசோமா என்று.

மிக்க ஏமாற்றத்துடன் வீடு திரும்பிய சுரேஷ்பாபுவை அவன் தாய் ஆவலுடன் எதிர்கொண்டாள்.

''ஏண்டா சுரேஷ்! மந்திரியைப் பார்த்தாயா? அவர் கையால் பரிசு வாங்கினாயா? போட்டோ எடுத்தார்களா?'' என்று துடிப்புடன் யசோதம்மா மகனைக் கேள்விகளால் துளைத்தெடுத்தாள்.

''அம்மா, என் வயிற்றெரிச்சலை ஏனம்மா கிளப்பறே!'' சோகத்துடன் பதிலளித்தான் சுரேஷ்.

''ஏண்டா என்ன ஆச்சு?'' மேலும் துடிப்புடன் கேட்டாள் தாய்.

''அம்மா நாலரை மணிக்கு நடக்க வேண்டிய விழா ஏழு மணிக்குத்தான் ஆரம்பமானது. அதுவும் அந்த அமைச்சர் வரவில்லை. வருவார், வருவார் என்று காத்திருந்ததுதான் மிச்சம்! ஏழுமணி வரை எல்லோரையும் காக்க வைத்து விட்டுக் கடைசியில் வரமுடியவில்லை என்று போன் பண்ணினாங்க அம்மா! எங்க எல்லோருடைய ஆசையிலும், மகிழ்ச்சியிலும் மண் விழுந்தது. ஹூம்!'' சுரேஷ்பாபுவின் குரலில் ஏக்கமும் ஏமாற்றமும் கலந்திருந்தன.

''பாவம்! குழந்தைகளை இப்படியா ஏமாற்றுவது! சே, சே!'' என்று தன் அனுதாபத்தைத் தெரிவித்தாள் யசோதம்மா.

''அம்மா! ஒரு சந்தேகம்!'' என்றான் சுரேஷ்.


''என்னடா சந்தேகம் கண்ணு?''


''மாணவர்கள் பள்ளிக்கூடத்திற்கு லேட்டாகப் போனால் அவர்களை வகுப்புக்கு வெளியே நிற்க வைத்துத் தண்டனை தருகிறார் டீச்சர்! இல்லையா?'' என்று கூறி நிறுத்தினான் சுரேஷ்.

''ஆமாம்! அதற்கு என்னடா இப்போ, சுரேஷ்?'' என்று கேட்டாள் தாய்.

''வெகு ஆவலோடு எதிர்பார்த்து உட்கார்ந்திருந்த எங்களையெல்லாம் மூணு மணி நேரம் காக்கவைத்து விட்டுக் கடைசியில் வர முடியவில்லை என்று செய்தி அனுப்பினாரே அந்த மந்திரி, அவருக்கு என்ன தண்டனை கொடுப்பது? யார் கொடுப்பது அம்மா?'' என்று கேட்டான் சுரேஷ்பாபு! என்ன பதில் சொல்வது!

விந்தையான பூச்சிகள்





1. எறும்பு தன் எடையைப் போன்று 60 மடங்கு எடையைத் தூக்கிச் செல்லும் வலுவுடையது.

2. வண்டு செண்பகப் பூவில் அமராது.

3. ஆப்பிரிக்காவில் 'டெர்மைட்' என்ற பூச்சி இருக்கிறது. கரையான் இனத்தைச் சேர்ந்த இந்தப் பூச்சி தான் அதிக அளவு முட்டையிடும் இனமாகும். இப்பூச்சி ஒரு நாளுக்கு 36,000 முட்டைகள் இடும்.

4. பூச்சி இனங்களிலேயே மிகவும் குறுகிய காலம் வாழ்வது ஈசல். இது ஒரே நாளில் பிறந்து வளர்ந்து இறந்து விடும். இதற்கு வயிறோ, ஜீரண உறுப்புகளோ கிடையாது.

5. தட்டாம்பூச்சி ஒரே இடத்தில் நின்று பறக்கும் ஆற்றல் பெற்றது.

6. அமெரிக்காவில் டெக்ஸாஸ் என்ற இடத்தில் 'போகோனோமர் மிக்ஸ்' என்ற வகையைச் சேர்ந்த எறும்புகள் தங்கள் உணவுகளைத் தாங்களே பயிரிட்டு அறுவடை செய்து கொள்கின்றனவாம். இந்தத் தானியத்தின் பெயர் எறும்பரிசி.

7. பாச்சையின் ரத்தம் வெண்மை நிறமுடையது.

8. கரப்பான் பூச்சி எண்ணி 16 முட்டைகளே இடும்.

9. நாம் ஆடுமாடுகளை வளர்ப்பதைப் போல் எறும்புகள் ஒருவகைப் பூச்சியை வளர்க்கின்றன. இப்பூச்சி செடிகளின் இலை, தண்டு, வேர் முதலியவற்றைச் சாப்பிட்டுவிட்டுத் தங்கள் உடம்பு வழியே இனிப்பான திரவம் ஒன்றை வெளிப்படுத்துகிறது. இந்த இனிப்புத் திரவத்தை உண்ணவே எறும்புகள் இப்பூச்சிகளை வளர்க்கின்றன.

10. சிலந்திகளிலேயே வெள்ளைச் சிலந்தி என்று ஒரு வகை உண்டு. இது நிலத்தில் வாழ்வதில்லை. நீரில் வாழ்கிறது.

11. ஆப்பிரிக்காவில் 'செட்சி' என்ற ஈ உள்ளது. இது தூங்கும் நோயைப் பரப்புகிறது. இந்த ஈ கடித்தால் தூங்கிக்கொண்டே இருக்க வேண்டியதுதான்!

12. ஈ எப்போதும் இடம் விட்டு இடம் போய்க் கொண்டே இருக்கும். இன்று இங்கே இருக்கும் ஈ நாளை சுமார் 19 கிலோமீட்டர் தள்ளிக் காணப்படும்.

13. ஈக்களில் 85,000 வகைகள் உள்ளதாக ஆராய்ந்துள்ளனர்.

14. வெட்டுக் கிளிக்கு 5 கண்கள் உள்ளன.

15. ஒரு ஆண் பட்டுப்பூச்சி ஆறு மைல்களுக்கப்பால் உள்ள பெண் பட்டுப் பூச்சியைத் தன் மோப்ப சக்தியினால் அறிந்துவிடும்.

16. தேனீ மலர்களில் தேனைச் சேகரித்த பின் ஒரே நேர்கோட்டில் செல்லும். இதனால் தான் நேர் கோட்டை (Bee Line) 'பீ லைன்' என்கிறார்கள்.

17. ஈக்களுக்கு முற்பகலில் இருக்கும் பலம் பிற்பகலில் இருப்பதில்லை.

18. சிலந்தியில் சில ஆபத்தானவை. கறுப்பு விதவை என்ற ஒரு வகைச் சிலந்தி விஷமுடையது. இது தேளை விட அதிக விஷம் கொண்டது. இது கடித்தால் உயிர் தப்புவது அரிது.

19. கரையான் ஒரு மாதத்தில் மொத்தம் 80 ஆயிரம் முட்டைகள் இடும்.

20. உலகிலேயே வண்டு இனம், வண்ணத்துப் பூச்சி இனத்துக்கு அடுத்த படியாகப் பெரிய இனம் ஈக்களே.

21. பூச்சிகள் உருவில் சிறியனவாக இருந்தாலும் ஆற்றல் மிக்கவை. பூச்சிகள் தங்கள் எடையை விட 10 முதல் 20 வரை அதிக எடையை எடுத்துச் செல்லும் திறன் பெற்றவை.

தொகுப்பு: **எஸ். விஜயா சீனிவாசன்**



வார்த்தை எதற்கு? வருமே சிரிப்பு!
உதய்



புலிக்குப் பிறந்தது!

பொன்மலை சம்பத்குமார்

அந்த அழகிய பூங்காவில் ஐந்து வயதுச் சிறுமி ஒருத்தி பந்தைத் தூக்கிப் போட்டுப் பிடித்து விளையாடிக்கொண்டிருந்தாள். அவள், அங்குமிங்கும் ஓடும் அழகைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார், புல் தரையில் உட்கார்ந்து கொண்டிருந்த பெரியவர் ஒருவர். சிறுமியின் அழகை விட அவள் கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த தங்கச் சங்கிலியின் மீது தான் அவரது கண்கள் பதிந்திருந்தன.

சிறுமி தூக்கிப் போட்ட பந்து அந்தப் பெரியவரின் மேல் விழுந்தது. அந்தப் பந்தை எடுத்து வைத்துக் கொண்டு, ''குழந்தே, இந்தா பந்து; அங்கே தேடாதே'' என்று சிறுமியை அழைத்தார். பந்துடன் தன்னை அழைக்கும் பெரியவரை உ ற் று ப் பார்த்தாள் சிறுமி. வழுக்கைத் தலையுடன் காட்சி தந்த அவர், சாமியார் போல் நீளமாகத் தாடி வைத்திருந்தார். தங்க பிரேம் போட்ட கண்ணாடியும், மல் ஜிப்பாவும் எட்டுமுழ வேட்டியும் அணிந்திருந்த அவர், ''என்ன குழந்தே, அப்படிப் பார்க்கிறே, இந்தா பந்து'' என்று மறுபடியும் அந்தச் சிறுமியை அழைத்தார்.

''ரொம்ப நன்றி தாத்தா'' என்று அவரிடமிருந்த பந்தை வாங்கிக் கொண்டாள் சிறுமி.

''இந்தா குழந்தே, இதையும் வாங்கிக்கோ'' என்று சட்டைப் பைக்குள் கைவிட்டு, 'சாக்லேட்'ஒன்றை எடுத்துக் கொடுத்தார்.

''சாக்லேட் கொடுத்ததுக்கு ரொம்ப நன்றி தாத்தா'' என்று சிரித்துக் கொண்டே சாக்லேட்டை வாங்கிக் கொண்டாள் அவள்.

''இந்தத் தாத்தாவுக்கு நன்றி மட்டும்தானா? நான் உனக்கு சாக்லேட் கொடுத்தேன்; நீ எனக்கு ஒண்ணும் கொடுக்கலையே?'' என்றார் அந்தப் பெரியவர்.

''உங்களுக்கு என்ன தாத்தா வேணும்? சும்மா கேளுங்க. நான் தர்றேன்'' என்றாள் அந்தச் சிறுமி.

''குழந்தே, எனக்கு உன்னைப் போல் ஒரு பேத்தி இருக்கிறாள். அவளுக்கு நகை பண்ணிப் போட்டு அழகு பார்க்கணும்னு ஆசை. கொஞ்சம் உன்னோட செயினைக் கொடேன். என் பேத்திக்குப் போட்டு அழகு பார்த்துட்டுக் கொண்டாந்துடறேன்'' என்றார்.

''ஐயோ பாவம், நீங்க ரொம்ப ஏழையா?''

''ஆமாம், குழந்தே?''

''உங்களுக்கு நான் போட்டுண்டிருக்கிற செயின்தானே வேணும்? கவலைப்படாதீங்க தாத்தா. உங்களுக்கு இது போலத் தங்கச் செயின், வளையல், நகைகள் எல்லாம் நிறையத் தர்றேன். உங்க பேத்திக்குப் போட்டுப் பார்த்துட்டுத் திருப்பித் தந்திடுங்க'' என்றாள்.

''நிறைய நகையா!'' ஆச்சரியத்தில் வாயைப் பிளந்தார் பெரியவர்.

''ஆமாம். எங்க வீட்டிலே பீரோவிலே நிறைய இருக்கு. நீங்க வேண்டியதை எடுத்துக்கலாம்.''

''வீட்டிலேயா?''

''ஆமாம். எங்க அப்பா வெளியூருக்குப் போயிருக்கிறார். திரும்பி வர ஒரு வாரம் ஆகும். அம்மா, அடுத்தாத்து மாமிகூட ராமர் கோயிலுக்குப் போயிட்டா. காலட்சேபம் முடிஞ்சு திரும்பி வர ராத்திரி பத்து மணி ஆகும்.''

''அப்படின்னா வீட்டிலே யாருமே இல்லையா?''

''பாட்டி மட்டும் இருக்கா. பாட்டிக்குக் கண் தெரியாது. நீங்க எங்க வீட்டுக்கு வாங்கோ. நான் நகைப் பெட்டியை எடுத்துத் தர்றேன். அப்புறமாத் திருப்பிக் கொடுத்துடணும்'' என்றாள் அந்தச் சிறுமி.

''வீடு எங்கே குழந்தே இருக்கு?''

''இதோ பக்கம்தான். வாங்க போகலாம்'' என்று அந்தப் பெரியவரை அழைத்துச் சென்றாள் அவள்.

''தாத்தா, இதுதான் எங்க வீடு. நீங்க இங்கேயே உட்கார்ந்திருங்கோ. பாட்டி தூங்கிட்டாளான்னு பார்க்கிறேன்'' என்று வீட்டின் உள்ளே சென்றவள் சிறிது நேரங்கழித்துத் திரும்பி வந்தாள். ''வாங்க தாத்தா: பாட்டி நல்லாத் தூங்கறா. யாராவது திருடன் வந்தாக்கூடப் பாட்டிக்குத் தெரியாது. உள்ளே வாங்கோ. இந்த அறையிலேதான் நகையெல்லாம் இருக்கு. அதோ அந்தப் பீரோவிலே தான் நகைகளை வைப்போம்'' என்று நகைகள் உள்ள பீரோவைக் காட்டினாள் சிறுமி.

''பீரோ சாவி எங்கேம்மா?'' என்று கேட்டார் பெரியவர்.

''இதோ எடுத்து வருகிறேன்'' என்று கூறி அவள் திரும்பினாள். அதே சமயம் அறை வாசலில் போலீஸ் இன்ஸ்பெக்டர் கையில் துப்பாக்கியுடன் நிற்பதைக் கண்டு பிரமித்துப் போனார். ''என்ன விழிக்கிறாய்? பூங்காவில் விளையாடும் குழந்தைகள் அணிந்திருக்கும் நகைகள் காணாமல் போவதாகப் புகார்கள் வந்தன. அதைக் கண்டுபிடிக்கத்தான் என் மகளை இன்று பூங்காவிற்கு அனுப்பினேன்.''

''என்ன, இவள் உங்கள் மகளா!''

''ஆமாம். நீ இங்கு வந்ததை எனக்கு உடனே டெலிஃபோன் மூலம் செய்தி அனுப்பினாள். இன்று நீ வசமாக மாட்டிக் கொண்டாய்'' என்று அந்தத் திருடன் தாடியைப் பிடித்து இழுத்தார் இன்ஸ்பெக்டர். அவர் கையுடன் தாடியும், வழுக்கைத் தலை டோப்பாவும் கழன்று வந்தன. வேஷம் கலைந்த திருடன், 'திரு... திரு...' என்று விழித்தான். பக்கத்திலிருந்த போலீஸ்காரர்கள் அவனது கையில் விலங்கை மாட்டி இழுத்துக்கொண்டு போனார்கள்.

திருக்குறள் புதிர் விடைகள்

புதிர்-25

கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்
நாவாயும் ஓடா நிலத்து. (496)

தேர் வலிமையான சக்கரங்களை உடையது. ஆனாலும், அது கடலில் ஓட முடியாது. கடலில் ஓடக் கூடிய பெரிய கப்பலும் நிலத்தில் ஓட முடியாது.

புதிர்-26

களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று. (929)

கள் குடிக்கும் ஒருவனுக்கு, கள்ளினால் வரும் கேடுகளைக் காரணம், காட்டி எடுத்துச் சொல்லுதல், நீரின் கீழ் மூழ்கியிருப்பவனை விளக்கின் ஒளியைக் கொண்டு தேடுவது போலாகும்.



தாமதம் ஏன்?

சாக்ய முனி

பள்ளியின் வெளிக் கதவுகளைச் சரியாகப் பத்து மணிக்கெல்லாம் மூடி விடுவார்கள். புதுத் தலைமையாசிரியர் வந்ததிலிருந்து ஒரு வினாடிகூட, பத்து மணிக்கு மேல் திறந்திருப்பதில்லை. அவர் கண்டிப்பானவர். 'எந்தப் பையனாவது தாமதமாக வந்தால் வெளியில் நிறுத்தி வை. பிரேயர் முடிந்ததும் என் அறைக்கு அழைத்து வா'' என்று அவர் பியூனுக்கு உத்தரவு போட்டிருந்தார்.

பாபு அவசரம் அவசரமாய் ஓடிவந்தான். அப்படியும் 'பெல்' அடித்து விட்டது. 'சரிதான். இன்றைக்கு மாட்டிக் கொண்டோம்' என்று நினைத்துக் கொண்டான். நினைத்தது போலவே ஆயிற்று. வியர்வையும் இரைப்பும்தான் மிச்சம். பாபுவுக்குப் பயமாக இருந்தது. இதுதான் அவன் முதல் தடவை பள்ளிக்குத் தாமதமாக வருவது. ஆனால், தாமதமாய் வருவதையே வழக்கமாய்க் கொண்ட நான்கு மாணவர்கள் எந்த வித பயமும் இல்லாமல், இதைப் பெரிதாய்ப் பொருட்படுத்தாமல் தங்களுக்குள் வம்பளந்து கொண்டிருந்தனர்.

தாமதமாக வந்தவர்கள் தலைமை ஆசிரியரிடம் அழைத்துச் செல்லப் பட்டார்கள். அவருக்கு முன்னால் சென்றதும் எல்லோரும் மௌனமாகத் தலை குனிந்து கொண்டார்கள். ஒவ்வொருவராய் அருகில் அழைத்து, கையில் வைத்திருந்த பிரம்பால் ஓங்கி ஓர் அடி கொடுத்தார் தலைமை ஆசிரியர். கடைசியாக நின்ற பாபுவைக் கண்டதும், தலைமையாசிரியருக்கே ஆச்சரியமாக இருந்தது. இத்தனை நாட்களாக இந்தப் பையன் தாமதமாக வந்து பார்த்ததே இல்லை அவர். ஆனால், பாபுவைப் பற்றி அவருக்கு ஓரளவு தெரியும். தினந்தோறும் அவன் அவர் வீட்டு வழியாகத்தான் வருவான். அரைமணி நேரம் முன்னதாகவே பள்ளிக்கு வருவது அவரது வழக்கம். ஆனால், அவர் பள்ளிக்குக் கிளம்பத் தயாராவதற்கு முன்பே இவன் பள்ளிக்குச் செல்வதைப் பல முறை அவர் ஜன்னல் வழியாகக் கவனித்திருக்கிறார்.

பாபு ஏதோ சொல்ல வாயெடுத்தான். அவர் எந்தப் பையனையும் 'ஏன் லேட்?' என்று கேட்பதேயில்லை. 'எல்லாப் பையன்களும் எங்கேயாவது வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்து விட்டு வேண்டுமென்றே தாமதமாக வருவார்கள். கேட்டால் அதற்காக ஏதேனும் பொய்க் காரணம் சொல்வார்கள்' என்பது அவரது எண்ணம்.

அடி வாங்கியதுகூட பாபுவுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. தாமதமாய் வந்ததற்காகத் தலையில் புத்தகப் பையை மற்ற மாணவர்கள் முன்னிலையில் சுமந்துகொண்டு விளையாட்டு மைதானத்தை மூன்று முறை சுற்றி வருவதுதான் அவமானமாயிருந்தது.

தலைமையாசிரியருக்கே பாபுவை அடிக்கிற போது சங்கடமாக இருந்தது. அவன் முகத்தில் மட்டும்தான், தாமதமாக வந்ததற்காக வருந்தும் அறிகுறி தெரிந்தது.

தலைமையாசிரியர் மாலையில் வீடு திரும்பியதும், வீட்டில் ஒரே அமைதியாக இருந்தது. அவர் வீட்டி

னுள் நுழைந்ததும், 'அப்பா' என்று செல்லமாய் ஓடிவந்து எதிர்கொண்டழைக்கும் செல்வியை இன்று காணோம்! உள்ளே நுழைந்ததும், அவர் மனைவி சோகமாய் அமர்ந்திருந்தாள். அவருக்குப் பதற்றமாக இருந்தது. ஒருவேளை செல்விக்கு உடல்நிலை சரியில்லாமல் போய் விட்டதோ! செல்வி படுக்கையில் தூங்கிக்கொண்டிருந்தாள். அவர் மனைவி அவரை அருகில் அழைத்துக் காட்டினாள்.

செல்வியின் முழங்காலில் கட்டுப் போட்டிருந்தது. ''என்ன ஆச்சு குழந்தைக்கு?'' கவலையோடு கேட்டார்.

''காலையில் நீங்கள் ஸ்கூலுக்குக் கிளம்பிப் போனப்புறம் நான் அடுக்களையில் வேலையாயிருந்தேன். முகப்பிலே விளையாடிக் கொண்டிருந்த இவள், படிக்கட்டிலிருந்து தாவிக் கீழே விழுந்து விட்டிருக்கிறாள். அங்கு கிடந்த சல்லிக்கல் முழங்காலில் குத்தி ஒரே ரத்தம்! குழந்தை, பாவம், வலியால் துடிதுடித்துப் போய் விட்டாள், அழுகையைக் கேட்டு ஓடிவந்து பார்த்த எனக்குக் கையும் ஓடலை... காலும் ஓடலை... நல்ல வேளை இந்தப் பக்கமா உங்க ஸ்கூலுக்குப் போவானே ஒரு பையன்... பாபு... அவன்தான் ஓடிவந்து குழந்தையைத் தூக்கினான். பிறகு ஒரு ரிக்ஷா கூட்டிவந்தான். என்கூட டாக்டர் வீடு வரைக்கும் வந்து திரும்பி வீட்டுக்கு வருகிற வரைக்கும் கூடவே இருந்தான். டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்தை மருந்துக் கடையிலிருந்து வாங்கி வந்து கொடுத்த பிறகுதான் ஸ்கூலுக்கு வந்தான்''

அவருக்கு வருத்தமாக இருந்தது, தம் குடும்பத்துக்கு உதவிய ஒரு பையனைத் தண்டித்து விட்டோமே என்று. உடனே, பாபுவின் வீட்டைத் தேடி வேகமாய் நடந்தார் நன்றி சொல்ல.

எலிகளின் திட்டம்!



அத்தைவீட்டுப் பூனைக்கின்று அடிக்குதுகாய்ச்சல் — அதனால்
அடங்கிக் கிடந்த எலிகளுக்குக் கிடைத்தது மேய்ச்சல்!
மெத்தைவீட்டு மெத்தையிலே கூட்டம் போடுது — எலிகள்
மேலும்என்ன செய்வதென்று திட்டம் போடுது.


சுண்டெலியில் ஒன்றெழுந்து குரலெழுப்புது — நாட்டில்
சுரண்டல்அதிகம் ஆச்சுதென்று குறையும்கூறுது.
அண்டைவீட்டு எலியெழும்பி ஆமோதிக்குது — அதற்கு
அடுத்தஎலிகள் அத்தனையும் தலையை ஆட்டுது.

சொத்தனைத்தும் பொதுவுடமை ஆக்கவேண்டுமே — நமக்குச்
சொந்தமாக எல்லோருக்கும் வீடு வேண்டுமே!
ஒத்துணர்ந்து ஒற்றுமையாய் வாழவேண்டுமே — நமது
ஒற்றுமையைக் கண்டுபூனை ஓடவேண்டுமே!

இத்தனைக்கும் இன்றுவழி காணவேண்டுமே — என
எல்லாஎலியும் யோசனையில் ஆழ்ந்திருக்கையில்,
கத்திக்கொண்டு பூனைமாடி ஏறிவந்தது — எலிகள்
கலங்கி ஓடிப் பொந்திடுக்கில் மறையலாயின!

பொன்மணிதாசன்





ஒட்டு மாம்பழம்

புலேந்திரன்

அழகப்பன், நாகப்பன் இருவரும் வேலை தேடிப் பக்கத்து நகரத்துக்குப் புறப்பட்டார்கள்.

வழியில் ஒரு மாந்தோப்பு இருந்தது. தோப்பு நிறைய ஒட்டு மாமரங்கள்! கவுதாரியும், நீலமும் குலைகுலையாகக் காய்த்துத் தொங்கிக் கொண்டிருந்தன. அந்தத் தோப்பில் பெரியவர் ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்தில் ஒட்டு மாம்பழங்கள் நிறைந்த இரண்டு பெரிய கூடைகள் இருந்தன. மாம்பழம் ஒவ்வொன்றும்குண்டு, குண்டாகத் தங்க நிறத்தில், கண்ணைப் பறிக்கும்படியாக இருந்தது.

அழகப்பனும், நாகப்பனும் அவரிடம் சென்று, ''அய்யா! நாங்கள் கிராமத்திலிருந்து வேலை தேடி வருகிறோம். வேலை இருந்தால் சொல்லுங்கள்; செய்கிறோம்'' என்றனர்.

அதைக் கேட்ட பெரியவர், ''இந்த இரண்டு பழக் கூடைகளையும் நகரின் மத்தியில் இருக்கும் எனது பழக் கடைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும். வண்டியை எதிர்பார்க்கிறேன்; இன்னும் வரக்காணோம். காலை எட்டு மணிக்குக் கடை திறக்க வேண்டும். இப்போது மணி ஏழரை ஆகிறது. எனவே, நான் முன்னால் போய்க் கடையைத் திறக்கிறேன். நீங்கள் இந்த இரண்டு கூடைகளையும் கொண்டுவந்து சேருங்கள். ஆளுக்கு ஐந்து ரூபாய் கூலி தருகிறேன்'' என்றார்.

அவர்களும் ஒப்புக்கொண்டனர்.

அந்தப் பெரியவர் தன்னுடைய பழக்கடையின் இருப்பிடத்தைத் தெரிவித்து விட்டு முன்னால் போய்விட்டார்.

அழகப்பனும், நாகப்பனும் ஆளுக்கு ஒரு கூடையாகத் தலையில் தூக்கிக் கொண்டு புறப்பட்டனர்.

கோடைக் காலமானதால், காலையிலேயே சூரியன் கனலை உமிழத் தொடங்கி விட்டது. அவர்கள் சென்றடைய வேண்டிய இடம் இரண்டுகல் தொலைவில் இருந்தது. தலைச்சுமை கனமாக இருந்ததால், அவர்களால் வேகமாக நடக்கவும் முடியவில்லை. அவர்கள் அன்று காலையில் எழுந்தது முதல் அதுவரையிலும் எதுவும் சாப்பிடவில்லை. ஆகவே, காலைப் பசி தனது கடுமையைக் காட்டத் தொடங்கி விட்டது.

''அழகப்பா!... எனக்குப் பசிக்கிறது'' என்றான் நாகப்பன்.

''எனக்கும்தான் பசிக்கிறது'' என்றான், அழகப்பன்.

''கூடையில் இருக்கும் மாம்பழம் பசியை மேலும் மேலும் கிளறிவிட்டுக் கொண்டிருக்கிறது. நாவிலும் எச்சில் சுரந்துக் கொண்டிருக்கிறது'' என்றான் நாகப்பன்.

''எனக்கும் அப்படித்தான் செய்கிறது. அதற்காக என்ன செய்வது?''

''ஆளுக்கு ஒரு மாம்பழம் எடுத்துத் தின்போம். பசி தணிந்தால் சற்று வேகமாக நடக்கலாம்'' என்றான் நாகப்பன்.

''ஊகூம். பசிக்கிறது என்பதற்காகப் பழத்தைத் திருடுவது குற்றம். அவருக்குத் தெரிந்தால் தண்டிப்பார்'' என்றான் அழகப்பன்.

அதற்கு நாகப்பன், ''ஒரு கூடை நிறைய உள்ள ஒட்டுப் பழங்களில் ஒன்றை எடுத்தால் அவரால் எப்படி அறிய முடியும்? நீ வீணாகப் பயப்படுகிறாய்!'' என்றான்.

''அவர் நம் மீது நம்பிக்கை வைத்துப் பழங்களை ஒப்படைத்து

விட்டுப் போயிருக்கிறார். அவருக்குத் தெரியாமல் பழத்தை எடுப்பது சரியல்ல'' என்றான் அழகப்பன்.

நாகப்பன், ''நான் எடுத்துத் தின்னத்தான் போகிறேன்'' என்று சொல்லிக்கொண்டே தான் சுமந்து சென்ற பழக்கூடையிலிருந்து ஒரு மாம்பழத்தை எடுத்துத் தின்றான். பசி சற்றுத் தணிந்தது. வேகமாக நடந்து, அழகப்பனுக்கு முன்னமே கடையை அடைந்துவிட்டான்.

அழகப்பனுக்குப் பசியினால் சோர்வு ஏற்பட்டு நடை தளர்ந்தது. பின் தங்கி விட்டான்.

அழகப்பன் கடையை அடைந்த போது — அவனது கண்கள் வியப்பினால் விரிந்தன!

அது — பழங்களை மொத்த வியாபாரம் செய்யும் பெரிய பழக்கடை!

சிறு வியாபாரிகள் சிலர், அவரவருக்குத் தேவையான பழங்களை வாங்கி அடுக்கிக் கொண்டிருந்தனர். பழக்கடையின் உரிமையாளராகிய அந்தப் பெரியவர் வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

அழகப்பனுக்கு முன்னமே கடையை அடைந்த நாகப்பன், பழக்கூடையை ஒரு பக்கமாக இறக்கி வைத்துவிட்டு நின்று கொண்டிருந்தான்.

அழகப்பனும், தான் சுமந்து வந்த பழக்கூடையை இறக்கி வைத்தான்.

வாடிக்கையாளர்கள் சென்றபின், அழகப்பனைப் பார்த்து, ''நீ ஏன் தாமதமாக வருகிறாய்?'' என்று கேட்டார் கடைக்காரர்.

''நான் காலையில் சாப்பிடவில்லை. களைப்பினால் வேகமாக நடக்க முடியவில்லை. அதனால் தாமதமாகி விட்டது'' என்றான் அழகப்பன்.

கடைக்காரர், இருவர் கொண்டு வந்த பழங்களையும் தனித்தனியாகப் பலகையில் அடுக்கினார்.

கூடைகள் காலியாகி விட்டன.

நாகப்பனைப் பார்த்து, ''நான் எண்ணி வைத்த பழங்களில் ஒன்று குறைகிறதே! அது எங்கே?'' என்று கேட்டார் கடைக்காரர்.

நாகப்பன், 'நான் எடுக்கவில்லை' என்று சொல்ல நினைத்தான். ஆனால், கடைக்காரர் மீசையைத் தடவிக் கொண்டே கோபமாக அதட்டியதும் உண்மையைக் கூறிவிட்டான்.

''நீ உண்மையைக் கூறியதால் தண்டிக்காமல் விடுகிறேன், போ'' என்று சொல்லி, நாகப்பனுக்குத் தர வேண்டிய கூலி ரூபாய் ஐந்தையும் கொடுத்து அனுப்பினார் கடைக்காரர்.

பிறகு அழகப்பனைப் பார்த்து, ''எனது பழக்கடைக்கு நம்பிக்கையான ஓர் ஆள் தேவை. பசியின் களைப்பினால் நடக்க முடியாதபோதும் நீ திருட எண்ணவில்லை. ஆகவே, உன்னையே வேலைக்கு அமர்த்திக்கொள்கிறேன்'' என்று சொல்லி, பழக் கூடையைச் சுமந்து வந்ததற்கான கூலி ரூபாய் ஐந்தையும் கொடுத்து, இனாமாக இரண்டு ஒட்டு மாம்பழங்களையும் கொடுத்தார்.

அழகப்பன், அந்தப் பழக்கடையில் வேலைக்கு அமர்ந்து விட்டான்.

நாகப்பன், தனது செய்கைக்காக மிகவும் வருந்தினான்.




Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032
(Phone: 431543)
Editor: K. Rajendran



திரு வி க

பிறந்தநாள்: ஆகஸ்ட் 26

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka



Topads/PF/0284